அகத்தியர் வைத்தியம் 600

ரசவாதம் 100



தாமரை நூலகம்
சென்னை - 600 026.

அகத்தியர் வைத்தியம்-600
ரசவாதம்-100

பதிப்பாசிரியர்

ஆர்.சி. மோகன்

தொலை பேசி எண் - 23620249.

தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி, 3-வது தெரு,
வடபழனி, சென்னை - 600 026.

தாமரை வெளியீடு எண்-278
முதல் பதிப்பு : அக்டோபர் 2003

நூலைப் பற்றி

நூலின் பெயர்	:	அகத்தியர் வைத்தியம் 600, ரசவாதம் 100
பதிப்பாசிரியர்	:	ஆர். சி. மோகன்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம் 7, என். ஜி. ஓ. காலனி, வடபழனி, சென்னை - 26.
பதிப்பு ஆண்டு	:	அக்டோபர் 2003
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	டெமி 1 x 8
தாளின் தன்மை	:	14.4 வெள்ளைத்தாள்
அச்சு எழுத்து	:	11 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	149 + 8
பிரதிகள்	:	1000.
பைண்டிங்	:	செக்ஷன்
விலை	:	ரூ.50-00
அச்சிட்டோர்	:	கிரியேட்டிவ் ஆஃப்செட், சென்னை - 34.

91/4

அகஸ்தியா வைத்தியம் 600

பதிப்புரை

உங்கள் கைகளில் தவழும் இந்த புத்தகம் அகத்தியர் வைத்தியம் 600 வெளிவர கிட்டத்தட்ட ஓராண்டுக்கு மேல் பிடித்து விட்டது. வில்லிவாக்கம் வைத்தியர் திரு அருச்சுனன், ரயில்வேயில் பொறியாளராக பணிபுரிந்து வந்த மறைந்த திரு திருநாவுக்கரசு (வெங்கடராசப்பர்) மூலமாக அளித்த ஒரு பழைய பிரதியிலிருந்து இது தயாரிக்கப்பட்டது. அதற்கான பொருப்பை தாமே முக்கிய நண்பர்களின் உதவியுடன் சரிபார்த்து தருவதாகச் சென்ற திரு.திருநாவுக்கரசு, அதை திருப்பிக் கொடுக்க இயலாமற் போய்விட்டது அதற்கு முக்கிய காரணம் அவருடன் வந்த ஒரு இளைஞர் கடனுக்கு எங்களிடம் புத்தகம் வாங்கிக் கொண்டு போய் விட்டு அதற்குரிய தொகையை திருப்பிக் கொடுக்காதது தான். தான் கொடுத்த மூலப்பிரதியின் மூலம் நாங்கள் அச்சிட்ட புத்தகத்தைக் கூட பணம் கொடுத்து வாங்குவேன் என பிடிவாதம் பிடித்து வாங்கிய தீவிரமான சித்த மருத்துவத்தில் பற்றுதல் வைத்திருந்த அந் நண்பருக்கு அம்மாதிரியான சீடர்.

அதை மறந்து விடுங்கள் எனச் சொல்லியும் எங்களது பதிப்பகத்துக்கு வருவதற்கு சங்கடப் பட்டுக் கொண்டிருந்த அந்த நல்லஉள்ளம் இறைவனடி சேர்ந்தது கேட்டு நாங்கள் மிகவும் வருந்தினோம். பின்னர் நாங்கள் வைத்திருந்த எடுத்தாலே பொடிந்து விடக்கூடிய நிலையிலிருந்த பிரதியின் உதவியுடன் தயாரித்தது இந்த புத்தகம். இதில் மிகவும் அரிய மருந்துகளின் தயாரிப்பு முறைகள் சொல்லப் பட்டுள்ளன. சித்த வைத்தியர்களுக்கு மிகவும் பயன்படக் கூடியது இந்நூல் முப்பு ஆராய்ச்சியில் மிகவும் ஈடுபட்டிருந்த திரு. திருநாவுக்கரசின் நினைக்கு இந்த புத்தகம் காணிக்கையாக்கப்படுகிறது.

இத்துடன் இரசவாதம் 100 என்ற ஒரு புத்தகம் இணைக்கப் பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் ஸ்தாபகர் சேமித்து வைத்திருந்து ஏட்டு பிரதிகளில் இதுவும் ஒன்று. இதில் காரசாரம் மற்றும் இரசவாதம் பற்றி கூறப்பட்டுள்ளது.

இப்படிக்கு

ஆர்.சி. மோகன்
பதிப்பாசிரியர்

அகத்தியர் வைத்தியம் 600

பொருளடக்கம்

பக்கம்

91/4

அகஸ்தியர் வைத்தியம் 600

அகத்தியர் ரசவாதம் – 100

உ

சிவமயம்

அகஸ்தியமகாமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

வயித்தியம் – 600

காப்பு

ஆதியெனும் பராபரமா யண்டரெல்லாம்
ஆதிஓ மென்றுதித்த அநாதிபாதம்
சோதியெனு மனோமணியாம் வாலைபாதந்
துலங்குகின்ற மாலரனைத் துதித்து நன்றாய்
நீதியுள்ள முனிவனென் றமரர்பாதம்
ரிஷிக்குள் ளானந்தகுரு பாதம் போற்றி
வேதியர்கள் நான்மறையைத் துதித்துநாளும்
வேன்முருக னைங்கரனைப் போற்றிசெய்வாம். 1

போற்றினேன் கலைமகளை தினமும்வாழ்த்திப்
புகழ்பெரிய வயித்தியரே புகலக்கேளீர்
நாற்றிசையி லுள்ளபல வயித்தியத்தை
நன்றாக வடமொழியி லாய்ந்துபார்த்து
மாத்திரையுஞ் செந்தூர பற்பமெல்லாம்
மாற்றமில்லா வகையாகச் சொல்வேன்பாரு
சாற்றியதோர் லேகியமுங் கர்க்கந்தானும்
தயிலமுடன் கியாழவகை சார்ந்துபாரே. 2

பாரப்பா வயித்தியரே நாகந்தன்னைப்
பண்பாகச் செந்தூரம் பகரக்கேளு
வாரப்பா யிலுப்பையெண்ணெ யாவின்வெண்ணை
வளமான வயக்கரண்டி தன்னிலிட்டு
சேரப்பா நாகமதை யைந்து பலமுருக்கித்
திடமாக வெள்ளாட்டுப் பாலிற்சாய்க்க
ஆரப்பா வெளியாகச் சொல்லப்போறார்
ஐநான்கு விசைபாலி லுருக்கிச் சாயே. 3

சாய்த்திட்ட நாகமதைச் சட்டியிலிட்டுத்
தருகாம லடுப்பேற்றி யுருக்கும்போது
சேர்த்திடுவாய் சூரணந்தான் சுக்கு மஞ்சற்
திறமாகப் பலமொன்று வகையொன்றாக
ஆர்த்திட்ட வோமம்படி யரையுங்கூட்டி
யப்பனே வெடியுப்பு பலமுநாலு
மார்த்திட்ட மருந்ததனைத் தானிடித்து
வளமான நாகமேற் றூவிக்கிண்டே 4

கிண்டியே வறுத்திடுவாய் தூவித் தூவிக்
கிருபையுடன் செந்தூர மாகும்பாரு
பண்டிதரே யெடுத்திதையும் பதனம்பண்ணு
பண்பான வனுபானஞ் சொல்லக்கேளு
மண்டலத்தில் நோய்களுக்குத் திரிகடுகுகூட்டி
மைந்தனே வறுத்து நன்றாய்ப் பொடித்துக்கொண்டு
பண்டுள்ள நோய்தீர வெருகடியுந்தேனும்
பனவிடையுஞ் செந்தூரம் பரிந்துகொள்ளே. 5

கொள்ளவே யிருபதுநா ளிருநேரந்தான்
கூண்டோடே போகுமடா விருமலீலை
தள்ளாமல் மந்தார சுவாசகாசந்
தடையறவே தொண்ணூற்றோ டாறும்போகும்
விள்ளவே பவுத்திரமும் முளைமூலங்கள்
விஷநீர்கள் தடிப்புண்கள் சீழ்நீர்போகும்
உள்ளசுத்த கெர்ப்பநூற் றிருபத்தெட்டும்
ஊஷிணத்தின் கெர்ப்பமுந் நூற்றுடனேபோமே. 6

போகுமடா பிறமேகஞ் சுக்கிலம்பதினெட்டும்
பொல்லாத விந்திரியக் கட்டுமைந்தும்
தாகமுடன் பதினெட்டுக் கல்லடைப்பன்
தருகாது சதையடைப்பன் பதினாறும்போகும்
சோகமில்லாப் போகம் பனிரண்டுந்தீருஞ்
சுத்தமுடன் பவுத்திர நாலைந்துந்தீரும்
ஏகமுடன் பதினாறு குன்மந்தீரும்
ஏழைகாள் கண்காந்த லெல்லாம்போமே. 7

சலக்கழிச்சலுக்கு

எல்லாந்தான் போவதற்கு வின்னங்கேளு
வேகமுடன் பஞ்சாங்கத் தயிலம்வாங்கி
நல்லதோ ரதன்வித்தைச் சூரணித்து
நாட்டுவாம் வெருகடியில் தயிலஞ்சேர்த்து
பொல்லாத சலக்கழிச்சலிருபதும்போம்
பொருக்கவே பணவிடை செந்தூரம்வைத்தால்
நில்லாது நோயெல்லா மோடிப்போகும்
நிச்சயமா யிருபதுநாள் நீகொள்வாயே. 8

வாய்க்கவே மண்டலந்தான் கொள்ளவென்றால்
வளமாகப் பஞ்சாங்கஞ் சூரணித்து
தாக்கிடுவா யம்மூலி தயிலந்தன்னிற்
றருகாமல் வெருகடியும் பணவிடையுங் கொண்டால்
சாய்க்கின்ற லெலும்புருக்கி மேகந்தானுஞ்
சலக்கழிச்சல் வெகு மூத்திரக் கிரிச்சி தீரும்
பாக்கியமாய்க் கைம்முறைநீ செய்தாயானால்
படுபாவி நோய்களெல்லாம் பாரிற்போமே. 9

குன்மத்துக்கு – எலிகடிமூலத்துக்கு

பாரியெனுங் கொடிவேலி சூரணித்துப்
பணவிடையும் வெருகடியுந் தேனுங்கூட்டி
நாரியே தின்றாக்கால் குன்ம மெட்டும்
நாடாது வெலிகடியு மிளைப்புவீளை
வீரியமா யிருபது நாள் தின்றாயானால்
விட்டோடிப் போகுமடா வின்னங்கேளு
வாரியெனும் புரண்டைவேர் சூரணித்து
வளமாக வெருகடியுந் தேனுங்கூட்டே. 10

தேனிலே கொண்டாக்கா லிருநேரந்தான்
றீருமடா மூலமெல்லா மைந்துநாளில்
மானேகோ ரோசினை விடையும் ரண்டு
மகத்தான செந்தூரம் பணவிடையுங்கூட்டி
ஆனதொரு முலைப்பாலில் மூன்றுநாள் கொள்
ளாறுமடா சுரங்கள் பதி னெட்டும்போகும்
வானிலுள்ள திப்பிலி சூரணமேசெய்து
மகத்தான செந்தூரம் பணமுங்கூட்டே. 11

பணவிடைதான் வெருகடியிற் றேனிற்கொள்ளப்
பண்டுள்ள மூலமுடன் கிராணிதீரும்
மணமுடைய சாதிக்காய் கிராம்வசுவாசி
வகைவகைக்கு முக்கழஞ்சு வடிதூளாக்கி
இணங்கவே நெய்தேனில் வெருகடியுங் கூட்டி
யிஷ்டமுடன் பணவிடை செந் தூரஞ் சேர்த்து
வணங்கியே யிம்முறைதா னுண்டாயானால்
மக்களே தாதுவிர்த்தி மகிழ்ந்துபாரே. 12

காரீயச்செந்தூரம்

மகிழ்ந்திடவே காரீயச் செந்தூரங்கேளு
மக்களே காரீயம் பலமிரண்டு
சுகமுடனே சட்டியிட்டுப் பச்சை மஞ்சள்
சூரணிப்பாய் மூவைந்து பலமுநன்றாய்
வகையுடனே நாயுருவி சமூலங்கொண்டு
மஞ்சள்தனைத் தூவியே கிண்டிக்கிண்டி
தகையில்லா விருசாமங் கிண்டியப்பா
சவர்க்காரம் பொடியுமரைப் பலமுகிண்டே. 13

கிண்டவே யிருகழஞ்சு இந்துகூட்டி
கெடியான வடிதாரங் கழஞ்சிரண்டு
மண்டலத்தோர் கொண்டாட வகைக்குச்சாமம்
வகையுடனே நாயுருவிக் காம்பாற்கிண்டி
கண்டீரோ செந்தூரங் கண்கொள்ளாது
கருகாமல் வறுத்திடுவாய் நாலுசாமம்
பண்டிதரே யெடுத்துநீர் பதனம்பண்ணு
பாங்கான செந்தூர மின்னங்கேளே. 14

இன்னந்தா னிரண்டுபலங் காரீயத்தை
யிதமாகச் சுத்திபண்ணிச் சட்டியிட்டு
சொன்னதொரு மாதளை காலத் துலரமுந்தோட்டைச்
சுகமாக மஞ்ச ளந்த வீதங்கூட்டி
சன்னதமா யிரண்டு மொன்றாய்த் தூளேயாட்டி
தருகாமல் வெருகடித்தூ ளெடுத்துத் தூவி
அன்னமே யிருசாமம் வறுத்துநன்றா
யப்பனே வெடியுப்புப் பலந்தானாலே 15

நாலுடனே காரமுடன் சீனங்கூட்டி
நலமாக வகையொன்று பலமுஞ்சேர்த்து
பாலகனே மூன்றுமொன்றாய்த் தூளேசெய்து
பண்புடனே வறுத்திடுவாய் தூவித்தூவி
கோலமுள்ள செந்நாயுருவித் தண்டால்
குறுகவே வறுத்திடுவா யிரண்டுசாமம்
சீலமுடன் முப்பது நாழிகையுட்குள்ளே
செந்தூர மாகுமடா தெளிந்துசெய்யே. 16

குட்டத்திற்கு குன்மத்திற்கு

செய்யவே சர்க்கரையிற் பணவிடையுங்கொள்ள
திரேகத்திற் குட்டமெல்லாந் தீர்ந்து போகும்
தொய்யுமடா பதினெட்டு நாளுக்குள்ளே
தூறோடே போகுமடா குட்டமெல்லாம்
நையவே வலிக்கின்ற குன்மமெல்லா
நாலைந்து நாளதனில் நன்றாய்த்தீரும்
உய்யவே சர்க்கரை சீரகமும் வெண்ணை
யுருட்டியே பணவிடை செந்தூரங்கூட்டே. 17

கூட்டியே தின்றுவிடு விருபதுநாள்மட்டும்
கூறாமல் பிரமியந்தூர் மாங்கிஷம்போம்
வாட்டியதோ ரெலும் புருக்கி நீரடைப்பு
மறிபடுமே திரேகத்தில் மயக்கமில்லை
தாட்டிகமாய்ச் செந்தூரம் வைத்துக்கொண்டு
தருகாம லிம்முறையைச் சார்ந்துபாரு
மூட்டுவாய் செந்தூரம் பணவிடையப்பா
முனிவோர்கள் சொன்னபடி மொழிந்திட்டேனே. 18

தாம்பரசெந்தூரம்

மொழிந்திட்டே னின்னமொரு செந்தூரங்கேளு
முக்கியமாய்ச் செம்புவொரு பலமேவாங்கி
அழுந்தவே யீசலிற் காகத்தட்டி
யப்பனே சுத்திபண்ணி நறுக்கிக்கொண்டு
தழும்பாமல் புளியிலைபோல் தகடுதன்னிற்
சாற்றுதின்ற கெந்தகமுங் கழஞ்சுகூட்டி
வளம்பெறவே நொச்சியிலைச் சாறுவிட்டு
மாண்டிடவே யரைத்தத் தகட்டிற்பூசே. 19

பூசிடுவாய்த் தகடெல்லாம் புனிதமாகப்
புதுச்சட்டி தனிபரப்பி யடுப்பிலேற்றி
பேசாமல் மேல்மூடி சட்டிகொண்டு
பெலமாக வேழுமண் சீலைசெய்து
கூசாம லறுபது நாழிகையு மட்டுங்
குணங்காமற் றீயெரித்து வப்பாலாற்றி
நேசமுட னொச்சிச்சாறு விட்டரைத்து
லேசாக அடைபோலே ரவியில்வையே. 20

ரவியிலே வைத்தெடுத்த மருந்தையப்பால்
நன்றாக வோட்டில்வைத்து வோடுமூடி
கவியவே மண்சீலை செய்துநன்றாய்க்
களங்காமற் குக்குடத்திற் கனலைமூட்டி
தவியாம லிந்த முறைநொச்சிச் சாற்றில்
தளம்பெறவே யரைத்தரைத்துக் குக்குடத்திற்போட
அவியவே குக்குடந்தா னிருபதுக்கு
எப்பனே செந்தூர முருக்கம் பூவே. 21

பூவான செந்தூரம் பணவிடையேகூட்டிப்
புகழான கருப்புட்டி தன்னிற்கொள்ள
தாவியதோர் குன்மம்பதி னெட்டும்போகும்
தருகாமலிருபதுநாள் சாரக்கொள்ள
ஆவலுடன் திரிகடுகு சித்திரமூல
மப்பனே சூரணித்துப் பூரஞ்சூதம்
கூவாமற் பணவிடைதா னரையுங் கூட்டிக்
கொள்ளுவாய் சூரண செந்தூரங் கொள்ளே. 22

குன்மத்துக்குகவிசை பெருவயிற்றுக்கு

செந்தூரம் பணவிடைதா னரையுங்கூட்டி
சேர்ந்துவொன்றாய் மண்டலந்தான் தின்றாயானால்
வந்திட்ட கவிசைபீலி கையுங் குன்மம்
வாடாத பெருவயிறு பக்கசூலை
முந்தியதோர் நீராமை யோனிச் சூலை
முட்டோடே பேராமை மூலம்போகும்
இந்தமுறை செய்தாக்கா லெல்லாம்போகும்
இப்படியே செய்துநீ கண்டு கொள்ளே. 23

நீரிழிவுக்குக்காந்த செந்தூரம்ரசதங்கம்

கண்டுநீ கொள்வதற்கு வின்னங்கேளு
காரீயம் பலமெட்டு காந்தமெட்டு
பண்டுள்ள கெந்தகந்தான் பலமுநாலு
பாரிலுள்ள யிரதமுமோரர் பலமுங்கூட்டி
தண்டாமல் குகைக்குள்ளே பொடித்துவைத்து
தருகாமற் செம்பருத்தஞ் சாறாழாக்கு
சுண்டாமல் வெற்றிலையில் சாறாழாக்கு
சுகமாக விட்டேழு சீலைசெய்யே. 24

சீலையா மண்சீலை செய்துநன்றாய்த்
திகைக்கவே யொருமுழங்கால் மட்டுக்கொட்டு
காலமே முதலாக மூன்றுசாமங்
கனலாகப் புடம்போட்டு வப்பாலாற்றி
சாலவே மருதம்பட்டைச் சாற்றாலாட்டிச்
சாந்துபோ லாட்டிநீ வழித்துக்கொண்டு
பாலகனே யாவரையி னல்லித் தண்டில்
பதறாமற் பறித்து வந்து வறுத்திடாயே. 25

வறுத்திட்ட அல்லிதனைச் சூரணித்து
மக்களே மருந்தையெல்லா மொன்றாய்ச்சேர்த்து
ஒறுத்திட்டுப் போகாமற் சட்டியிட்டு
ஒருகொம்பு ஆவாரையாற் கிண்டிக்கிண்டி
கருத்திட்டுப் போகாமல் நாலுசாமங்
கனல்மூட்டி யெரித்திடுவாய் செந்தூரமாகும்
பெருத்திட்ட நீரிழிவு வெல்லாந்தீரும்
பேசாமற் பணவிடைதான் றேனிலுள்ளே. 26

(வெடிசூலைபுடைகரப்பான்பறங்கி குட்டமிதற்குச் சிந்தாமணி)

உண்ணவே ரசபற்பஞ் சொல்லக்கேளு
வுப்புடனே செங்கல் தூளதாக்கி
கண்ணவே சட்டியிட்டு முக்கிநன்றாய்க்
கற்குழிபோல் மத்தியிலே கவிந்து கொண்டு
பண்ணுவாய் கண்டங் கத்திரிதன்னைப்
பருக்கவே குகைபிடித்து வதன்மேல்வைத்து
எண்ணாமற் சுத்தி பலமிரதமிட்டு
இடைவெளியில் லாததொரு சட்டிமூடே. 27

மூடுவாய் சீலைமண் ணேழுஞ்செய்து
முக்கியமா யடுப்பேற்றி நாலுசாமம்
போடுவா யனலெரிக்கப் பற்பமாகப்
பூத்திருக்கு மேற்சட்டி தன்னிலுள்ளே
தேடுநீ பற்பத்தை யெடுத்துவப்பால்
சிமிழ்தனிலே யடைத்துநீ வைத்துக்கொண்டு
வாடுகின்ற வெடிசூலை புடைகரப்பான்
மகத்தான பறங்கிகுட்ட மாண்டுபோமே. 28

மாண்டுபோம் பணவிடைதான் வெல்லத்திற்கொள்ள
மக்களே மேகமென்ற தெல்லாம்போகும்
ஆண்டுநீ பற்பத்தைக் கொண்டபோது
அலகுகட்டுக் கருவேலஞ் சாற்றால்மாட்டு
மேண்டும்போ துனக்குவந்து கிட்டாதப்பா
மேன்மையுள்ள பற்பத்தை வேண்டிச்சொன்னேன்
தாண்டிடுமே நோயெல்லா மைந்துநாளில்
தருகாமல் பத்தியந்தான் வைத்துக்கொள்ளே. 29

காந்தசெந்தூரம்பாண்டுசோகைநீரிழிவுநீராமைக்கும்.

வையடா காந்தமொரு முறைதானப்பா
வரியான கற்றாழஞ் சோறுதன்னில்
பையவே காந்தமொரு பலமேவைத்து
பதறாமல் வேகவைத்துக் கழுவிப்போட்டு
நையவே பொடியாக்கிக் கையான்சாற்றில்
நாளேழு தானரைத்துச் சட்டியிட்டு
உய்யவே குக்குடத்திற் சீலைமண்தா
னுத்தமனே யரைத்தரைத்துப் புடந்தானேழே 30

புடமாகக் குக்குடத்திற் போட்டெடுத்துப்
பொல்லாத வீக்கமொடு பாண்டுசோகை
அடர்ந்திட்ட நீரிழிவு நீராமைக்கும்
அப்பனே பணவிடைதான் றேனிற்கொள்ள
தொடர்ந்திட்ட நோயெல்லா மோடிப்போகுஞ்
சோலியில்லை யிருபதுநாள் சுறுக்கைப்பாரு
மடங்குமடா செந்தூரங் கண்டபோதே
வயித்தியரே வாலைதன்னை வணங்கிக்காரே. 31

சனகசிந்தாமணிமாத்திரை

கார்நிற மேனிகொண்ட கண்ணன்மால் மருகன் தும்பி
சீர்பெறு பாதம்போற்றி தீர்ந்திடும் வியாதிகேளு
கூருட னிருநூற்றன்பர் வியாதியும் குடிபோமென்று
பாரிநீர் சனகன்சிந்தா மணியென்னும் பகருவோமே. 32

வேறு

பகருவோம் பச்சைநாபி பாஷாண காந்தந்தாரம்
நிகரிரு விஷம்வெண்காரம் நெறிவிஷ மக்கிறாகாரம்
புகருகுங் குலியந்தான்றி பொற்றிரி கடுகுநெல்லி
தகரிலா மருந்தைச்சுற்றித் தனித்தனிப் பலமும்வாங்கே. 33

வாங்கிய மருந்துக்கெல்லாம் வாளமுஞ் சமனாய்ச்சேர்த்து
பாங்குடன் சுத்திசெய்து பருப்பினில் முளையைப்போக்கி
தீங்கிலா மருந்தையெல்லாஞ் சேரவே யொன்றாய்க்கூட்டி
ஆங்குள்ள கையான்சாறு வரைத்திடு பத்துநாளே. 34

பத்துநா ளரைக்குஞ்சாறு படியொன்ற நாளொன்றாக
நித்தலு மரைத்துநன்றாய் நீசிறு பயறதாக்கி
சுத்தமாய் நிழலுலர்த்தித் துலங்குநெற் பானைவைத்து
கந்தனை நினைத்துநீயுங் கிராணிக்கு மோரிற்செய்யே. 35

செய்யவே யிருநேரந்தான் செலுத்தொரு வுண்டைநீயும்
தையலாபீக் கிராணிக்கெல்லாந் தயிருடன் செய்யமுன்போல்
உய்யவே வயிறுவிட்டா லோமமும் பழச்சாறீய
றையவே வாய்வுகுன்ம நாட்டிடு மாவினீரே. 36

உப்பிசகாமாலை கிராணிவயிறுகழிந்தால் வாய்வுகுன்மத்துக்கு

ஆவலா முப்பிசங்க ளடித்திடு மேனிச்சாறு
போவது பழக்காமாலை புளியிலை யிறக்கிச்சாறு
மேவிய வண்டவாதம் விட்டிடு மாவின்பாலில்
பாவது பலவியாதி பறக்குமே தேனிற்கொள்ள 37

கொள்ளவே வாதமெல்லாங் குங்குமச் சாற்றிற்றீரும்
மெள்ளவே யமரமெல்லாம் விளங்கு சீரகத்திற்போகும்
உள்ளநெஞ் செறிவுகண்டா லுகந்தசர்க் கரையிற்கொள்ளு
தள்ளிய சத்திக்கெல்லாந் தாக்கிடப் பழச்சாறீயே. 38

சாற்றுகாலி சுப்புக்கெல்லாந் தன்றுஞ்செந் தொட்டிச்சாறு
ஆற்றிடு மம்மான்பச்சை யரிசிச்சார் நரையைமாற்று
மேற்றிடு குன்றுமுத்து விலைச்சாறு சன்னிக் கெல்லா
மாற்றுசர்க் கரையுமாகும் வந்திடுந் தினைச் சோறுண்ணே. 39

உண்டிடு பிரமியந்தா னுகந்தசெம் பருத்திச்சாறு
பண்டுள்ள துளசியாகும் பழமுடன் சாறுமாகும்
நண்டிடு தக்காளிச்சார் நல்லெண்ணெய் தலைக்குத் தேய்த்து
கண்டுநீ முழுகும்போது கழன்றிடும் ரோகந்தானே. 40

கழன்றதோர் வாதத்திற்கு கணிதூது ஆவினெய்யில்
வளம்பெறப் பாலுஞ்சோறும் வைத்திடும் பத்தியத்தில்
உழன்றிடு வாதமெல்லா மோடிடு நொச்சிகையான்
தழன்றிடு மாவினீரிற் றள்ளுப்பு புளியுந்தள்ளே. 41

தள்ளிடு கிறுப்புவாத மிளகுடன் வாதடக்கி
உள்ளமு முடம்புநொந்தால் பருத்திலை மிளகுடூடு
வள்ளலே வெப்பிருமல் மாறுந் தோடை துளசிகையான்
அள்ளவே யிடித்துப்புட்டாவிடுத்தரும் பிணிகள்போமே. 42

வேறு

நோயா மதனைத் துளசிச்சாற் நுறுக்குஞ் சர்க்கரை நெய்கூட்டி
தோயா தூஷண வாய்வுக்கு சுக்குக் கியாழம் பாலுஞ்சோறும்
பேயா முசலின் கண்டவலி பிசகா தோடும் நிலவேம்பின்
பாயும் பண்ணி லத்திதனைப் பரிய நீரில் நசியமிடே. 43

இடுநீ மூல வியாதிக்கு வேற்குஞ் சாதிக்காய் பொடியில்
கொடுநீமூல வாசனத்தில் கொள்ள வெள்ளாட் டெருப்புகையில்
விடுநீ யாவி னெய் தூவி வெதும்பப் புகையை யதிற்காட்ட
படுமே மூலவியாதியெல்லாம் பறக்கும் புகையைப் பறிந்துசெய்யே
44

செய்யும் நோய்க டானறிந்து செலுத்த நான்மூன் றைந்தேழில்
உய்யு மாத்திரை யோரொன்று வுசித மாக விருநேரம்
நையும் வியாதி போவதற்கு நன்றாய் வைப்பாய் பத்தியந்தான்
தைய விதுவே மருந்தொன்று சாந்தமாகப் பரிந்து செய்யே. 45

பெரும்பாடு இரத்தபித்தம் எலும்புருக்கிமேகத்துக்கு நாவல்நெய்

வேறு

பரிந்து நீ செய்வதற்கு வின்னங்கேளு
பண்பாக குன்மமொரு கிருதஞ் சொல்வேன்
வருந்தியே யரைத்துலாம் நாவற்பட்டை
வளமாக வுலர்த்தியிடித் தூளதாக்கி
சொரிந்திடுவாயத் தூணிநீர் முடாவுக்குள்ளே
தூள்போட்டுக் காச்சியிறு வெட்டொன்றாக
மருந்துதான் புளியாரைச் சாறுநாழி
வடிகொண்ட தயிர்தண்ணீர் நாழிகூட்டே. 46

கூட்டுவா யாவினெய் படிதானொன்று
கூவிளம் பூ பச்சையரைப் பலமுஞ் சேர்த்து
நாட்டியே யதிமதுர மேலங்கோஷ்டம்
நன்றானவில வங்கம் வெள்ளிலோத்திரம்
நீட்டிய தோர் தாமரையின் வளையங்கூட்டி
நினைவாக முந்திரிகை வெட்பாலோடு
தாட்டிகமா யிலவம்பிசின் பேரீச்சோடு
சந்தனமுஞ் சிறுநாக மாத்திப்பூவே. 47

பூவான மாதளையின் பிஞ்சுங்கூட்டி
போற்றுவாய் நிலப்பனையின் விழாவரிசி
தாவிலா வறட்சுண்டி வகைக்குவரைப்பலமும்
தனித்தனியே கியாழமிட்டு வரைத்துப்போட்டு
பாவகமா யடுப்பேற்றித் தீயைமூட்டிப்
பதங்கண்டு வடித்திடுவாய் நெய்தானப்பா
ஆவலுடன் கரண்டிநிறை யிருநேரந்தா
னப்பனே யருந்திடினோ யகன்றுபோமே. 48

அகன்றுவிடு மிரத்தபித்த மதிசாரங்க
ளடுத்தபெரும் பாடுவெள்ளை நீர்க்கடுப்பு
நகன்றிடுமே யெலும்புருக்கி மேகந்தீரும்
நாட்டிலுள்ள நீர்ப்பெருக்கு வுழலைவீக்கம்
தகன்றிடுமே மதமூர்ச்சை பிரமிவாதம்
தழலான நீர்க்கடுப்பு தாகமூர்ச்சை
அகன்றிடுமே நோயெல்லாம் பறந்து போகும்
மக்களே யிம்முறையை வகையாத்தின்னே. 49

கிராணி அஸ்திசுரம்ஈளை வயிற்றுநோய்க்குக் கோடாசுரி குளிகை

வேறு

தின்னவே குளிகைதானுந் திறமுடன் சொல்லக்கேளு
இன்னவே கெந்தக மிருவீச நாபிசுக்கு
வன்மையா யக்காராகார மனோசிலை மிளகுநெல்லி
உண்மையா வெள்ளையுள்ளி யுடனிரு வீசங்கூட்டே. 50

கூட்டிடு கடுக்காய்தான்றிக் கொட்டையைப் போக்கிநன்றாய்
வாட்டிட மருந்துசுத்தி வகைபல மரையுமொன்றாய்
தீட்டிய வாளம்பத்து நிரைசெம்புப் பொடியும்பத்து
ஊட்டிய ரசமுஞ்செம்பு மொக்கவிட் டரைத்திடாயே. 51

அரைத்தபின் கெந்திகூட்டி யழுந்தவே மெழுகுபோல
உரைத்திடு மருந்தையெல்லா மொக்கவே யொன்றாய்க்கூட்டி
நினரத்திடு கையான்சாறு நெழுகவிட் டரைநாளேழு
முறைப்படி யனுபானத்தில் மாத்திரை கடுகுமுத்தே. 52

முத்தியே கிராணிசுக்கு சாதிக்கா யாவின்மோரு
அத்தியி னிளைப்பிருந்தால் வெண்ணெயு முருங்கைச்சாறு
நித்தலும் வயிற்று நோவும் பொருமலு மேகவுப்பில்
பத்தியாய் தடவிச்சுட்டு பச்சை நீர் தன்னிற்கொள்ளே. 53

கொள்ளவே பித்தமானாற் சர்க்கரை கொள்வீர்சீனி
அள்ளிய பஞ்ச குன்ம மரிதையின் சாறதாகும்
வள்ளியின் சிறுகிழங்கு வளர்நொச்சித் தாதுவிர்த்தி
உள்ளூறு வூஷ்ணரோக மோடிடுங் கழுநீர்கொள்ளே. 54

ஓடிடுங் குன்ம மெல்லா மொழிந்திடும் பிரமிச்சாற்றில்
வாடுநீரடைப்புக் கம்மாற் வெற்றிலை வளமதாகக்
கூடுதலில்லாப் பெண்ணுங் கொழுனனைப் பற்றிவாழ்க
நீடுயர் கருப்புக்கட்டிப் பிலாவிரை வெல்லம்நீரே. 55

குன்மம்வெள்ளோக்காளம் எலிகடிக்கு

நேரே வெள்ளை யோக்காளம் நீள் சந்தன மரைக்கடிக்கு
பாரே சீரம் வெள்ளாட்டுப் பாலுங் கூட்டு நீரடைப்பு
கூறாய் வேதி மிக்காகக்கூட்டே விளக்குச்சித்தென்னை
தீராய்வீசம்பழச்சாற்றில்தேனு மிஞ்சிச்சாற்றில்வையே 56

வைநீர் வெள்ளைச் சந்தனத்தின் வளர்கா லெரிவு சீரகத்தில்
உய்யு மெலிகடி கொத்துமல்லி யுடல் மேல் நாற்ற முத்திராட்சம்
தையல் குணமாஞ் சாம்பராணித்தயிலங் கொடுத்து மேற்பூசில்
நையுநெஞ்சுக்கனைப்புக்கு நாட்டுநன்றாய்வெற்றிலையில். 57

இலைதான் குன்மம் பிரமியிலை யெந்தச் சுரமுங் கொத்துமல்லி
துலையுஞ் சோறு செறிமாந்தந்துலங்கும் பழச்சாற் மாதளையும்
மலையாஞ் சேத்தும பித்தமுடன்வையே சீனி சர்க்ரையில்
பலநோயெல்லாஞ்சீரகத்திற் பறக்குந்தாகநொச்சிலையே. 58

நொச்சி சீத வாதபித்தம் நோக வடிக்குங் கொத்தமல்லி
கொச்சி யோமங் கொத்துமல்லி கொள்ளே சுக்கு விஷசுரம்போம்
பட்சம் வைத்த விடாச்சுரமும் பறக்கு மோமக் கியாழமதில்
அச்சமில்லாச்சந்நியிஞ்சி யடங்காவியாதிக்கிதுவொன்றே. 59

ஒன்றே போது மிதுவெல்லா மோடித் திரியும் வயித்தியரே
நன்றே கோடாக் குளிகையிது நயந்து பாரும் வையகத்தில்
சென்றே நோய்க டீர்வதற்குத் திறமாய்க் கிருத நெய்சொல்வேன்
அன்றேயயரனாருரைத்தபடி யனலையவிக்கும்படிகேளே. 60

மேகத்திற்குவல்லாரைநெய்

அவிக்கு மாவி னெய்படிதா னதற்குச் சமனாய் வல்லாரைச்சாற்
புவிக்குள் மதுர மிளகேலம் புகழுஞ் சீரகம் வால்மிளகு
தவிக்கு மரத்தைப் பலவிதமாய்த்தளரா தரைப்பா யாவின்பால்
கவிக்கக் கலக்கிச்சாற்நெய்யில் கனலில்மூட்டி நெய்வடியே. 61

வடித்துச் சட்டி தனிலேதான் வளமாஞ் சாதிக் காய்பத்திரி
நடித்து தேக்குப் பரங்கியுடன் நவிலு நன்னார் மதுரமுடன்
பொடித்துக்கிராம்புவரைப்பலமாம் பொடியைதூவி நெய்வடித்து
துடிக்குஞ்சீனியிரண்டுபத்துத் தூளாற்கூடப்பலம்போடே. 62

வேறு

போட்டு நெய்வடித்துக் கடுகுதள்ளிப்
 புகழாக லேகிப்பாய் நெய்யின்சீனி
தாட்டிகமாய்ச் சாதிக்காய்ப் பொடியைக் கூட்டி
 தளும்பாமற் கைம்முறை யெல்லாங்கூட்டி
மூட்டுவாய் மண்டலத்தான் கரண்டிவீத
 முசியாம லிரு நேர முக்கியமாக
ஓட்டுவாய் மேகமென்ற தெல்லாம் போகும்
 ஓகோகோ வெள்ளை யெல்லாமொழிந்துபோமே. 63

சூதகவாய்வுக்கு தும்மட்டிகாய்லேகியம்

ஒழிந்துவிட யின்ன மொரு லேகியந்தா
னுதிரத்தி னோய்தீர வுறுதியாக
அழுந்தாது கும்மட்டிக் காய்ச் செம்பருத்தி
யானவெள்ளை நொச்சியிஞ்சி வெள்ளைப்பூண்டு
தெளிந்துநீ யைந்துவகைச் சாறும்வாங்கித்
தெளிவாக வைந்துபடிச் சாறுமொன்றாய்
கொழுந்துவிடத் தீயெரித்து வடுப்பிலேற்றிக்
குறுகவே காய்ந்த பின்பு மருந்துகேளே. 64

மருந்துரசஞ் சாதிலிங்கங் காந்தஞ்சுக்கு
மாசில்லா யிந்துடனே வாளங்காயம்
வருந்தவே மிளகுமஞ்சள் வெந்தயமுங்கூட்டி
வளமாகச் சடாமாஞ்சி லூமத்தோடும்
பொருந்தவே வகைமூன்று வராகன்வாங்கிப்
புகழாக விளவறுப்பாய் வறுத்துக்கொண்டு
திருந்தவே பொடிப்பண்ணிக் கூடப்பொட்டு
திறமாக லேகியத்தைச் செய்துபாரே. 65

செய்திட்ட மருந்துதன்னை யுண்ணக்கேளு
செலுத்துவாய்த் தூதுளங் காயளவுகொண்டால்
நையுமடா குன்மமெட்டுங் கவுசிவாய்வு
நாடாது பெருவயிறு மகோதரங்கள்
உய்யுமடா நீராம்ப லுதிரவாய்வு
வோடிவிடுந் திசைவாய்வு சோகைபாண்டு
பையவே காமாலை வீக்கந்தீரப்
பாரமுள்ள வயிற்றுநோய் பறந்து போமே. 66

கண்டாத்திரிலேகியம்

பறந்துபோம் கண்டாத்திரி லேகியந்தான்
பண்பாக விஞ்சிபலம் பத்துவாங்கி
சுரங்காமற் றோற் போகச் சீவிக்கொண்டு
சுத்தாவி னெய்வார்த்துப் பொடியதாக்கி
சிறந்திட்ட யிலவங்க மோமங் கூட்டித்
திரிகடுகு வதிமதுரஞ் சிற்றரத்தை
பொறந்தபே ரிலவங்க நறுக்குமூலம்
பொற்கடுக்காய் ரோகணியும் புனிதமாக்கே. 67

புனிதமாய் வகையொன்று வராகன்மூன்று
　　பொடியாக்கி யொன்றாகப் புகலக்கேளு
இனிதான சக்கரைதான் பலமுமொன்று
　　இயல்பான நெய்தேனு முரியுங்கூட்டி
கனியவே பாகு போற் கிண்டிக்காய்ச்சிக்
　　கலந்திடுவாய் பொடிதூவிக்கிண்டிக்கிண்டி
தனித்தனியே பாக்களவு தின்றாயானால்
　　சகலபித்த வாயும்போம் பசியுண்டாமே. 68

உளமாந்தைக்குமருந்துசூரணம்

உண்டான சயமிரும லிளைப்புவீளை
　　யுளமாந்தை போவதற்கு உறுதிகேளு
பணடானதிரிகடுகு சிற்றரத்தைப்
　　பாங்கான வெண்காரம் பரங்கிச்சக்கை
தண்டாத வால்மிளகு நறுக்கு மூலந்
　　தடையறவே வகைக்குவரைப் பலமுங்கூட்டி
முண்டாமற் றாளிசைதா னிரட்டிகூட்டி
　　முசியாம லிருநேர முழுங்கிடாயே. 69

முழுங்கவே சூரணித்து வைத்துக்கொண்டு
　　முசியாமற் றேனிஞ்சி பாலிற்கொள்ளு
அழுந்தானோ விவையெல்லாங் குளிர்ச்சியாகு
　　மப்பனே சயகாச்ச லெல்லாழும்போகும்
பழந்தேங்காய் புளிபுகையு மிறைச்சிவிட்டு
　　பத்தியநீ காத்துண்டாற் பலனுமுண்டு
கலங்காமற் றைலம்வைத்து முழுகிவந்தால்
　　காந்தியுண்டா மேனியெல்லாங் கதிக்கும்வென்னீர் 70

தலைமுழுகத்தயிலம்

வென்னீர்தான் விழுகாமல் முழுகநன்று
　　வீறான புளிதயிர்பால் புகையும்விட்டு
தன்னீர்போல் நோய்களெல்லாம் விட்டேபோகும்
　　சாற்றுகின்றேன் மந்தார காசத்தயிலம்
பன்னீர் போல் தெளிவதற்குக் கியாழக்கர்க்கம்
　　பாடுகிறேன் புலத்தியனே பகரக்கேளு
நன்னியதோர் குறுந்தோட்டிப் பொன்னாங்காணி
　　நல்லவட்டத் துத்திவேர் சீந்திற்றண்டே. 71

சீந்தியொரு முடக்கொத்தான் சிறுசெங்கழுநீர்
சிறந்தநிலப் பனைக்கிழங்கு நீர்வள்ளிக்கிழங்கு
பூந்தஅல்லித் தாமரைவேர் லாமிச்சம்வேர்
புகலாலம் விழுதுமா வரசம்பட்டையோடு
சேர்ந்தமலை தாங்கிவேர் நீர்ப்பூலாவேர்
திருகிடுவாய் வகைமூன்று பலந்தான் மூன்று
சேர்ந்திடித்துச் சலங்குறுணி தானும்விட்டு
செலுத்து நீ முடாவிலிட்டுத் தீயைமூட்டே. 72

தீமூட்டி யெட்டொன்றாய்க் காய்ச்சிவாங்கிச்
சீலைவடி கொண்டபின்பு செப்பக்கேளு
நேயமுடன் மருந்தையெல்லாங் கர்க்கஞ் சேர்க்க
நிகழ்த்துகிறோ மேலமில வங்கமதுரம்
மாயமர மஞ்சளுடன் சாத்திரபேதி
வாய்விளங்கங் கச்சோல நாகங் கோஷ்டம்
நாயுமுள்ளி சதகுப்பை வெந்தயஞ்சாதிக்காய்
நல்லசிறு தேக்கரத்தைச் செவியங்கூட்டே. 73

செவியமொடு செண்பகப்பூ தேவதாரந்
திகைத்திடவே வகையொன்று கழஞ்சுமூன்று
குவியமுள்ளி நெல்லிகெந்தகங் கஸ்துரி மஞ்சள்
கூரறிய புண்ணாக்கு வேர் சாதிபத்திரி
நவியமுறு கோதும்பை கிராம்புநாற்கழஞ்சு
நல்லசந் தனமுடனே கொத்து மல்லி
பவியவே சமன்கூட்டி மருந்தையெல்லாம்
பண்பாக வரைத்து நீ கியாழத்தோடே. 74

ஊட்டியபின் னடுப்பேற்றி யெண்ணெய்படிவிட்டு
ஒறுக்காமற் றீமூட்டி வற்றக்காச்சி
நீட்டியதோர் மெழுகுபத மானவாறே
நீயிறக்கி வடித்திடுவாய் கலசத்துள்ளே
தாட்டிகமாய்க் குங்கும கஸ்தூரிபுழுகு
சட்டமுடன் ரோசினையுஞ் சமன்கழஞ்சு
நாட்டியே நறுக்கிடுவாய் தயிலந்தன்னில்
நலமாக நெற்புடநீ வைத்து மூழ்கே 75

முழுகடா சீயக்கா யரைப்புவென்னீர்
மோசமில்லை புளிபுகை பால் தயிர்மோர்தள்ளு
முழுகடா முறையோடே மறுநாள்தான்கூட்ட
முறுதியுண்டாங் குமரியென்னுந் தயிலத்திற்கு
முழுகடாதலைக்கண் ணோயுதிர
மூர்க்கமுள்ள யேவுட்சூடு காந்தல் தீரும்
முழுகடா தேகமொடு காந்தங்காணு
மூத்திரநீர்ச் சிறுப்புமும் பலம்போங்காணே. 76

மண்டூரம்

காணவே கலிக்கமொன்று சொல்லக்கேளு
கறிமிளகு முக்கழஞ்சு கல்வத்திட்டு
ஊணவே திப்பிலி முக்கழஞ்சுகூட்டி
வுரப்பானசுக்குமோர் கழஞ்சுகூட்டி
பூணவே சமுத்திராப் பழங்கழஞ்சு
புகழ்சுத்தி வாளமொரு கழஞ்சுகூட்டி
தோணவே சாரணை வெற்றிலையின்சாற்றால்
துவளவே குளிகையது துலங்குவாயே. 77

துலங்கவே சூரணந்தா னின்னங்கேளு
சுக்கோமஞ் சீரகமு மிளகுஇந்து
மலங்காமல் வசம்புவிடம்புரியும் வலம்புரியும்
மறுகுசிறு திப்பிலியுஞ் சாதிக்காயும்
பிலங்காணும் பத்திரியும் பற்பாடகம்
பெரியதோர் சதகுப்பை மதுரங்கோரோசினை
கலங்காமல் விழாவரிசி கரப்பான்பட்டை
கைம்முறையாய் வகையொன்று பலமுஞ்சேரே. 78

சேர்த்திட்ட மருந்தையெல்லாந் தூளதாக்கிச்
செந்நா யுருவிகையான் கழுதைமுள்ளி
போத்திடவே காட்டுமல்லி கையுங்கூட்டிப்
புரிசமுட னாலுபிடி வறுத்துச்சாம்பல்
கார்த்திடவே யிரண்டுமொன்றாய்ச் சேர்த்துக்கொண்டு
கானகத்துச் சிட்டமைந்து பலமுந்தேடி
வார்த்திடுவாய் மேதைபசு ஆட்டுநீரு
மறுகாமல் மோர்கூட மதிப்பொன்றாமே. 79

மதிப்படனே மோர்நீரும் பானைசேர்த்து
மறுகாமல் சிட்டமதற் குள்ளேவைத்து
சதிப்பாகப் பத்துநா ளூறவிட்டுக்
காயவைத் தெடுத்துநன்றாய் தூளதாக்கி
விதிப்படியே மூன்றுமொன்றாய்ச் சேர்த்துக்கொண்டு
வெருகடிதா னிருபதுநாள் தின்பாயானால்
புதுப்பானை யீயதுபோல் நோய்கள் போகும்
பொய்யல்ல புளிபுகையுந் தவிர்த்திடீரே. 80

மண்டூரக்குளிகை காமாலைக்கு

தவிர்த்திடவே மண்டூரக் குளிகைகேளு
தனினூறு வருஷமது கிட்டங்கொண்டு
அவித்திடுநீ பொடியாக்கி யுருக்கக் கொல்ல
னன்றாகக் காச்சுருக்கி யாவிநீரில்
கவித்திடுவாய் நாலுதரங் காய்ச்சிக்காய்ச்சி
கலங்காமல் கோமயத்தி னன்றாய்த்தானும்
அவித்திடு நீ யாவினீர் தனிற்கரைத்து
அடிபற்றாக் கரண்டியினாற் குறுகக்காய்ச்சே. 81

காய்ச்சிய தோர் மருந்ததனை வெயிலில்வைத்துக்
கலங்காமற் கிண்டியே யுலரவைப்பாய்
தாட்சியில்லாச் சீலைவடி கொண்டு நன்றாய்த்
தருவான சீரகமோ ரண்டுமிந்து
பாய்ச்சிடுவாய் திரிகடுகு திரிபலாதி
பகர்ந்திடுவா யோமம் பெருங் காயங்கூட்டி
மாய்ச்சிடவே வகையொன்று பலமொன்றாக
வறுத்து நீ பொடியாக்கி முன்பொடியுங்கூட்டே. 82

கூட்டியே கரந்தைச்சாற் சாரணைச்சாற்
குறையாமல் துளசிச் சாற் கையான்சாறும்
வாட்டமில்லா நாளொன்று சாறொன்றாக
வகைவகையாய்த் தானரைத்து வுலரவைத்து
தாட்டிகமாய் நாலுநாள் சாறுநாலு
தனித்தனியே யரைத்தரைத்து வுலரவைத்து
மூட்டுவாய் தேன்வார்த்து அரைத்துச்சேர்த்து
முசியாமற் சுண்டைக்காயளவுகொள்ளே. 83

கொள்ளுவா யிருபதுநா ளிருநேரந்தான்
கூசாமற் சோகைகாமாலைபாண்டு
தள்ளுமடா நோயெல்லா நுறுக்கிப் போடுந்
தருகாம லிருநேரஞ் சார்ந்துபாரு
வள்ளலே புளிபுகையு முப்புந்தள்ளு
மாசில்லா மேனியெல்லாம் வச்சிரமாகும்
முள்ளபடி சொல்லிவிட்டேன் குளிகைதன்னை
யுத்தமமா மென்றுசொல்லி யுகந்துபாரே. 84

மண்டூரக்கடுகுவீக்ககாமாலைக்கு

உகந்துநீ பார்ப்பதற்கு வின்னங்கேளு
உறுதியாங் கிருதவகை சாந்தஞ்சிட்டம்
லொகமிகுந்து பகுத்திடவே வகையொன்று பலமைந்தாகப்
பதறாமல் மாவாக்கி வைத்துக்கொண்டு
தகர்ந்திடவே திரிகடுகு கடுக்காய்ப்பூடு
சமைத்திடுவா யோமம்நேர் வாளஞ்சுத்தி
அகந்தனிலே சீரகந்தா னிரண்டுங்கூட்டி
யப்பனே வகையாகப் பலமும்வாங்கே. 85

பலம்வாங்கி மூன்றையு மொன்றாய்ச்சேர்த்து
பதறாமற் கையான்சாற் தன்னிலாட்டி
மலையாமற் பிச்சம்பழ மிரண்டு பத்து
வாய்க்கீறிப் பிளந்துநன்றாய் வைத்துக்கொண்டு
துலையவே மருந்தையதற் குள்ளேவைத்து
வட்டிடவே நல்லெண்ணெய் கூடவிட்டு
அலையாமற் சட்டியிட்டு வடுப்பிலேற்றி
யவித்துநீ யெண்ணெயுடன் கடுகுதின்னே. 86

தின்னவே யிருபதுநாள் பத்தியந்தான்
றினந்தூதுக் காயிலையும் பூவுங்கூட்டி
சொன்னதொரு முருங்கையிலைக் காயுமாகுந்
துலங்கவே முளைக்கீரைத் தண்டுமாகும்
வண்டியிலே யுப்பதனை வறுத்துக்கூட்டி
மகோதரங் காமாலை பித்தப்பாண்டுதீரும்
மன்னவே வியாதியெல்லாம் மற்றுப்போகு
மையமில்லை யிந்தமுறை யறிந்துபாரே. 87

சஞ்சீவிக்குளிகை

வேறு

பார்க்கும் வகைக்கு வின்னமொரு பகருங் குளிகை வகைகேளு
ஊர்க்கு முள்ள வியாதிகளுக்குறுதி யாக மருந்தொன்று
தீர்க்கும் வியாதிக் கனுபானஞ் செலுத்த வேறு வேறாகு
மார்க்குங்குளிகைசஞ்சிவியா மலையாதிருந்தவதனோடே. 88

நாவிதாரங்கெந்திருவி நல்லயிரதம்வெண்காரம்
மேவுங் கழஞ்சி வகைமூன்று விளங்குந் திப்பிலி மிளகுசுக்கு
காவில் கடுக்காய்த் தான்றியுடன் கனத்த வகைக்கு நாற்கழஞ்சு
தாழ்வில்லாமற்சுத்தியுடன் சமனாய்வாளஞ்சரியிடையே. 89

இடைதான் சேர்த்து நொச்சிச்சா றேகி யொன்றாய்த் தானரைத்து
அடவாய் முருக்கின் சாறொருநா ளப்பால் குப்பை மேனியொன்று
தொடுநீ கையான் சாறொருநாள் தோடை யிலைச்சா றொருநாளே
இடைதான்விடாமலைந்துநா ளிளகவரைத்தேமிளகளவே. 90

அளவா யரைத்து நிழலுலர்த்தி யாகுங் கபால சூலைக்கு
புளக மாக வாவின்பால் போட்டுக் கரைத்து வுள்ளருந்த
தளமா மேலுந் தான்பூசித் தவிர்க்க வுப்புப் புளிபுகையும்
நளமாமண்டைக்கரப்பனுக்கு நாட்டுமேனிச்சாற்றிலிடே. 91

இடவேமேலுந்தான்பூசி யெல்லாக் கரப்பன் செருப்படிச்சாற்
தொடுமேகபால குட்டமெல்லாந் துலங்கும் வேலிப்பருத்திச்சாற்
அடவாங் கிாலு விப்புருதிக் காகுமுத்தாமணியிலைச்சாற்
படுமேநோவுவொருதலைக்குப் பாங்காய்நார்த்தம்பழச்சாறே. 92

பழகும் படல மணலிச்சாற் பறக்குங் காசங் காக்கணஞ்சாற்
அளவாம் நீல காசத்துக்கு மாகும் வெள்ளைக் காக்கணம்பூ
குலையும் பித்த காசத்துக்குக் கொடுநீர் கூட்டித் தக்காளி
தலையாங்கண்ணிற்பூவுக்குத்தாக்கும் வேப்பெண்ணெய் தன்னில்
வையே 93

வையே கண்ணில் விதிக்கெல்லா மாதர் முலைப்பால் தன்னிலிடு
செய்யு மக்காஞ் செஞ்சந்தனஞ் செலுத்தும் போக பசுவினெய்
பையுஞ் சுக்கிற் படுவனுக்குப் பகரும் புள்ளடிச்சாற்றிலிட
ஐயமுடையகண்ணமாமாகும் வெப்பிலைச் சாற்றிலிடே. 94

இடுநீ யிரண சுக்கிரனுக்கேகு மூமத்தஞ் சாற்றிலிட்டு
தொடுநீ ரத்தப் படுவனுக்குத் துலங்கும் வேப்பம்பட்டைச்சாற்
கடுகி கண்ணிற் பூவெட்டு காய்ச்சி முருக்கிலைச் சாற்றிலிட்டு
முடுகுங்கண்ணு முழிப்பதற்கு மூத்திரத்தன்றி விடப்போமே.95

போமே சேர்த்துமக் கரப்பனுக்குப் புரளும் பிரண்டைச் சாற்றிலிட
ஆமே பித்த கரப்பனுக்கு வாகுங் கஞ்சா தன்னிலிடு
காமக் கிரந்தி யுள்ளதெல்லாங் காணா தோடைச் சாற்றிலிட
தாமேவாய்வுக் குத்தலரும் தனியாம் வெற்றிலை தனிற்பகரே. 96

பகருங்வெந்தயம்வாய்வுக்கு பறக்குஞ்சேட்டுமகொள்ளுப்பொடி
தகரில் லாமல் வயிற்கழிந்தால் தாக்கு மத்திப் பட்டைச்சா
றகமே கிராணிக் கெருமை வெண்ணெயா குஞ்சீதக் கிராணிரத்தந்
துகையாம்வாய்வுக்கிராணிக்குதுலங்கும் பாவட்டைச்சுரதம்வையே.

சுரத மெட்டுக் கிராணிக்குத் துலங்கு மெருமைத் தயிராகும்
விரத விரோசன மிளகிலிட விளங்குங் குன்ம மெருமைநீர்
பாத வலிக்கும் வலிகுன்மம்பகரு முருங்கைச் சாற்றிலிட
இரதகுன்மவாய்வுக்கு மேகுமுமியின்கருக்கில்வையே. 98

கருக்குஞ்சத்திகுன்மத்திற்குக் கியாழம் வில்வச் சாற்றிலிட
உருகும்வயிற்றுவலிவந்தா லோடுமாவிலிங்கச்சாற்
பருக்குமேலிங்கக்கவிசைக்குப் பகருந்தகரையிலைச்சாறாம்
பெருக்குப்பித்தவாய்வுக்குப் பேசுநீலிச்சாறாமே. 99

நீகலிரலிதுசுழிச்சிக்கு நெகிழ்கீழ்நெல்லிச் சாறாகும்
கால்வாதமுவெடக்கொத்தான் கழறுந்தானுவாதந்துடரியிலை
சூலிவிரணவாதமெல்லாந் துலங்குநொச்சியிலைச்சாறு
மேலிலந்தவாதம்போம் விளங்குவேம்பினெண்ணெயிடே. 100

சந்துவாதம்

எண்ணைசந்துவாதமெல்லா மேவுஞ்சாரனையிலைச்சாறு
பெண்ணேபல்லடிவாதமெல்லாம் பெருகுஞ்சுக்குநீரிலிடக்
கண்ணேதுடிப்புவாதமெல்லாங் கழறும்பழச்சாற்தன்னிலிட
அண்ணேயூதுவாதமெல்லா மகலவடிக்குமற்றிடுமே. 101

நடுக்குவாதம் – ஆசனப்பிளவை – தண்டிற்பிளவை

ஆதநடுக்குவாதமெல்லா மடிக்குங்களச்சிப்பருப்புச்சாற்
பாதங்குறுதியின்வாதமெல்லாம் பறக்குமுவரிமண்ணிலிட
நீதமுடனேயாசனத்தில் நெருக்குப்பிளவைப்பசுவின்பால்
சூதந்தண்டிற்பிளவைக்குந் துலங்குபொன்னாங்காணிச்சாறே 102

சாறேயுச்சிப்பிளவைக்குத் தாக்கும்பசுவினெய்யுடனே
வாறேபித்தசுரமுலைப்பால் வாங்குசன்னிமுகறுமுட்டை
சேரேவாதசுரத்திற்குச் செலுத்துநொச்சிச்சாற்றிலிட
பாரேபித்தசன்னி கண்டால்பறக்குநுணாயிலைச்சாறே 103

அலட்டுசன்னி – பாம்புகடிக்கு

இலையேயலட்டுசன்னிக்கு வேகுந்துவரையிலைச்சாறு
துலையாதிருக்கும்நடைசன்னி துலங்குசாரணையிலைச்சாறு
மலைக்கும்பாம்புகடித்தாக்கால் வாரேபாகையிலைச்சாறு
அலையுமஞ்சனவெற்றிலையா மாகுநசியஞ்சிறுவழுதல் 104

வழுதிலைப் பனைசையூமத்துவழங்கும் விரியன்சித்தகத்தி
தொழுகும்பூரான் பாகையிலை துடிக்குந்தேளுவிலுப்பையிலை
நழுவமூஞ்சூருபெருங்காயநாய்கள்கடிக்குதும்பையிலை
புழுகும்பேயின்னரிகடித்தால்புகட்டுமுடக் கொத்தானிலையே 105

முதலைகடிக்கு

முடக்குமுதளைகடித்தாக்கால்மீறாம்பன்றிநெய்தனில்
நடக்குமனிதர்தான்கடித்தாள் நாட்டும்பருத்தியிலைச்சாற்றில்
தொடுக்குஞ்சூனியம்பேய்க்கரும்புதுலங்கும்பூனைப் பாலையிலை
யடக்கமானபெருச்சாளியாகும்பேயின் பாகிலையே. 106

பல்லசைவுக்கு

பேயும்பூச்சிக்காதில்வந்தால்பெருக்குமெருக்கிலைச்சாற்றில்
ஓயுநாசிகாயிடமுமுற்றவாவின்கோமயத்தில்
வாயில்வளருமுண்ணாக்குமறிக்குமாட்டினெய்யிலிட
ஆயும்பல்லுமசைவானாலாகும்வேலம்பட்டைச்சாற் 107

பட்டையான வொட்டிப்புண் பறிக்குமாவாங் கோதும்பை
அட்டவாத சூலைக்குமாகும் வெண்வெங்காயச்சாறு
முட்டுபக்கச்சூலைக்குமோதுங்கோடகச்சாலைச்சாற்
தட்டுசந்துவிப்புருதிதாக்கு மாட்டினீர்தன்னில். 108

யோனிக்கட்டுக்கு

ஆட்டுங்கெர்ப்ப விப்புருதிக்காகும் பழஞ்சோற்தன்னிலிட
மூட்டும்புற்றுக்கரப்பனுக்கு மூளும்பழச்சாற்தன்னிலிட
ஈட்டுமருந்துவிடுகுறைக்கு மேவுங்கோவையிலைப் பசும்பால்
தேட்டும்யோனிக்கட்டுக்குத் திரண்டபிரண்டைச்சாற்றிலிடே. 109

சாற்றேயோனின்கட்டுக்குத் தாக்குமுருங்கைப்பூச்சாற்றில்
ஏற்றுமகோதரமாம் பொடியாமே கும்பித்தப்பாண்டுவுக்கு
போற்றும் சூலைக்கட்டுக்குப் பொருந்துமிசுவுவாய்வுக்கும்
மாற்றுஞ்சங்கிலைசோகைக்கு வளருஞ்சீரகந்தன்னில்வையே
110

வையே சோகைகாமாலை மாற்றுமேலமரிசியிட
உய்யும்வறட்காமாலையெல்லா மோடுங்கடுக்காய்ச்சாற்றிலிட
செய்யுநோவுதானறிந்து செலுத்துமாத்திரைய னுபானம்
ஐயமின்றிக்கொடுத்தாக்கா லழுந்துநோய்களகன்றிடுமே. 111

தாபசுரக்குளிகை

வேறு

அகன்றிடவேதாபசுரக்குளிகைகேளு
வதிமதுரஞ் சந்தனங் கிராம்புநன்னாரி
புகன்றிடுகோரோசினை சுக்குமேலம்
புரிசமுடன் முந்திரிகை பேரீச்சோடும்
தகர்ந்திடும் லாமிச்சுடனே வெட்டிவேருந்
தளம்பாமல்ரோகணியுந் தேவதாரம்
நெகிழ்ந்திடும் வங்காளபச்சை தண்ணிமிட்டான்
நேரானவிலுப்பைப் பூபலமுமொன்றே. 112

ஒன்றான வகையெல்லாம் பலமொன்றாக
வுறுதியா யிளநீரில் விட்டுஆட்டி
நன்றாகத் தேற்றாங்கா யளவுவுண்டை
நவலவிள நீரிலுரைத்துக் கொள்ளும்போது
சென்றதொரு தாபசுரஞ் சன்னிவாதந்
தெறிக்குமடா கெர்ப்பசுர மெல்லாந்தீரும்
வென்றதொரு சுரங்களெல்லாந் தீருஞ்சொன்னோம்
வீதமுடன் வேறொன்று விபரங்கேளே. 113

கோரோசினைக்குளிகை

கேளுங் கோரோசினையின் குளிகையப்பா
கெடியான மிளகோமம் லவங்கப்பூவும்
தாழ்வில்லாக் சாதிக்காய் பத்திரியுங்கூட்டித்
தாக்கியதோர் மூலமுடன் திப்பிலியுங்கோஷ்டம்
மாளுகருஞ் சீரகங் கோரோசினையுநாவலதின்றுளிரு
மாந்துளிரும் வேம்பின் கருவேம்பீர்க்கு

மீளுரசக கற்பூரம் வகைக்கழஞ்சு
மீறாமற் றங்கரேக் கரைக்கழஞ்சு. 114

அரைக்கழஞ்சு தன்னுடனே மருந்தையெல்லா
மாட்டவே வகைகேளு செண்பகப்பூ
குறையாமல் மிளகுகா வட்டம்புல்லு
குணமுடனே வகையொன்று பலமொன்றாக
நிறையாகக் கியாழமதை விட்டு ஆட்டி
நினைவுடனே யிருசாமம் நேராக ஆட்டி
பரையாம நிழலுர்த்திப் பதனம்பண்ணிப்
பண்புடனே யனுபான மறிந்து செய்யே. 115

அறிந்துநீ செய்திடுவாய் வாதபித்த
மையமுட னோயறிந்து வதற்குச்சாந்தி
முறிந்திடாச் சீரகங் கொத்துமல்லி
மிளகோமங் கொடிவேலி யரத்தைசுக்கு
தெரிந்து கொண்டு வனுபானங் கியாழத்திற்செய்யத்
திக்கிலுள்ள நோயதுதான் தெறிக்கும்பாரு
பொருந்தவே நாண்மூன்று ஐந்துஏழு
போகுமடா பத்தியமாத்திரை நாளொன்றே. 116

கிராணிக்குக்கியாழம் – சூரணம்

ஒன்றான கிராணிவகை யெழுவகைக்கு
முறுதியா மனுபான முடன்மருந்துகேளு
வென்றான தென்னம்பூ முத்தக்காசு
விளங்கவே வாழைசிறு மொட்டுப்பூவும்
பன்றுடைய காட்டாத்திப் பூவும்பட்டைப்
பதறாமற் குருக்கத்திப் பட்டைகூட்டி
சென்று பங்கம் பாழ்வேர் கிளுவைப்பட்டை
சேரவே சமனெடையாய்த் தூளதாக்கே. 117

தாக்கிட்ட தூளதனிற் சிறுகெடுத்துத்
தனிநாழி நீரிலிட்டு வெட்டொன்றாக்கி
மார்க்கமுடன் மறுசட்டி காயவைத்து
வளமாக வதிலிட்டு முறித்துக்கொண்டு
ஏர்க்கவே வெள்ளையுள்ளி தனைத்துளைத்து
இதமாக வராகன்கால் காயம்வைத்து
சேர்க்கவே வேப்பம்பூ வரைத்துக்கட்டிச்
சிவக்கவே. யுமிப்புட நீ செலுத்துவாங்கே. 118

செலுத்திருந்த பெருங்காயந் தனையெடுத்து
தேய்த்துரைப்பாய்க் கியாழத்திற் கிராணியுண்டை
பலித்திடவே ரண்டுமொன்றா யுரைத்துக்கொண்டு
பண்பாக மேதைதயிர் வடித்துச்சேர்த்து
கலித்திடவே வசம்புசுட்டு பொடித்துக் கொண்டு
கனம்பெறவே மேற்றூவிக் குடிப்பீர்நன்றாய்
துலித்திடவே மூன்றுநா ளருந்தும் போது
சுகமாகப் புளிபுகையைத் தூரத்தள்ளே. 119

கிராணியுண்டை

தூறுகின்ற கிராணிதனக் குண்டைகேளு
சுத்திசெய்த கஞ்சாவுங் கூகை நீரும்
சேறுகின்ற கருவேம்பு கழஞ்சுவகையைந்து
சேர்த்திடுவாய் குறாசானி விடையமூன்று
மீறுகின்ற சாதிக்காய் வராகன்ரண்டு
விதமான வபினொன்று விரைந்துகூட்டி
கூறுபட வாழைப்பூச் சாற்றரைத்துக்
குன்றுமுத்தா முன்மருந்தோ டுரைத்துக்கொள்ளே. 120

இரத்தபித்தத்துக்குக்கியாழம்

உரைப்பான வுட்காச்ச லிரத்தபித்த
முழலையுடன் பயித்தியத்தால் வந்தநோவு
சிறப்பாக விருகமூஷ்ண காந்திதன்னைத்
திறமாக வோர்பிடியு முற்றக்காசு
மறைப்பான மிளகுவொரு கழஞ்சுயோடு
மறக்காமற் சீரகமு முடிந்துபோடு
விரைப்பாகக் காச்சியுண்ணு சீரகமுஞ்சேர்த்து
விதமான ரத்தபித்தக் காச்சல்தள்ளே. 121

சதாவேரிக்கிருதம்நீர்ச்சுருக்குலோபனம்

தள்ளாமற் சதாவேரி நெய்யைச்சொல்வேன்
றருகாம லதன்கிழங்குச் சாறுவாங்கி
வெள்ளரிக்காய் நெல்லிக்காய் பூசனிக்காய்
விளங்கவே யிளநீர் பால் கருப்பஞ்சாறு
கொள்ளவே வகைக்கிரு நாழிச்சாறு
குறையாமல் நானாழி நெய்யைவிட்டு
மெள்ளவே திரிகடுகு திரிபலையுங்கூட்டி
மீறாமற் கொத்துமல்லி யேலங்கூட்டே. 122

எலமுட னிலவங்க மதுரங்கோஷ்ட
மின்பமுட னிரண்டுபல வீதம்வாங்கி
கோலமுடன் வங்காளப் பச்சைநாமங்
குறையாமற் சீரகமோ ரண்டுங்கூட
சாலவே செங்கழுநீர் கோஷ்ட முந்திரிகைத்
தருகாமற் கொட்டியுட கிழங்குகூட்டி
ஆலயமாம் பேரீச்சு கற்கண்டுசர்க்கரை
யப்பனே யிந்துப்பு வோமங்கூட்டே. 123

தண்டுறுதிரத்தபித்தம்போகமருந்து

கூட்டுவாய் கோரையுட வரிசிமேதை
குறையாமல் மகாமேகை யெல்லாங்கூட்டி
நாட்டியதோர் வகைக்கிரண்டு பலமும்வாங்கி
நன்றாகவேயரைத்து வதனிற்போட்டு
மூட்டுவா யடுப்பேற்றி யனலைமூட்டி
முறுக்காமல் மெழுகுபதங் காய்ச்சிவாங்கு
ஊட்டுவாய் நெய்கரண்டி யிருநேரந்தா
னொருத்திட்ட தண்டுதனக் குயிருண்டாமே. 124

உயிருண்டாம் பூரிக்குந் தாதுவிர்த்தி
ஓகோகோ ரத்தபித்த நீர்க்கடுப்பு
செயலாக மூத்திரக் கிறிச்சிபாளை
தெளியுமடா வெலும் புருக்கிச் சதையடைப்பு
தயிரியமாஞ் சரீரமெல்லாங் காந்தியண்டாஞ்
சகலவெட்டை பிறமேகக் காந்தல் தீரும்
பயரிட்டுப் பலன் கண்டவாற தொக்குஞ்
பண்பாகப் புளிபுகையைப் பார்த்திடாயே. 125

பார்த்திடவே ரத்தபித்தம் போகக்கேளு
பதறாமற் செங்கழுநீர் கிழங்குகொண்டு
மாற்றியதோர் சதாவேரித் தாமரையின் வளைய
மறக்காம லமுர்தவள்ளிக் கிழங்கு சேர்த்து
தோற்றிடவே குன்றியிலைச் சாறுபடியிரண்டு
தோன்றவே யாவின்பால் படியுமிரண்டு
நேர்த்தியதா யாயினெய் படியிரண்டு
நேகவரை கிழங்கதனை நெய்யிற்சேரே. 126

நெய்யதனிற் சுமன்கொண்டு மருந்தையெல்லா
நேசமுடன் லேகியமா யிறக்குமுன்னே
பையவே கருப்பக்கட்டி பொர்டிதானாழி
பதறாமல் மதுரமரைப் பலமுந்தூவி
தொய்யவே யேக மொன்றாய்த் துஞ்சிக்கிண்டிச்
சுகமாக யிறக்கிவைத்துச் சுறுக்கைக்கேளு
ஐயமறக் கடுகுடனே நெய்யுங்கொண்டா
லதிசார ரத்தபித்த மகன்றுபோமே. 127

உண்டைபித்தத்துக்கு

போமடா யிருவேலி சந்தனம்நன்னாரி
புகழ்முத்த மதி மதுரந் திப்பிலியுங்கூட்டி
ஆமடா முந்திரி பேரீச்சுங் கூட்டி
யப்பனே யிலுப்பைப்பூ யேகமொன்றும்
தாழ்வில்லா மருந்தொன்று பலமொன்றாகத்
தப்பாம லிளநீர்வார்த் தரைத்துப்பின்பு
ஓமடாகருப்பஞ்சார் முலைப்பாலுமாகு
முறுதியா யரைத்த துண்டை குன்றிமுத்தே. 128

நெஞ்சிகட்டுக்குட்பித்தத்துக்குநெய்

குன்றிமுத்துப் போலுருட்டி நிழலுலர்த்தி
கொடுத்திடுவா யிளநீர் முலைப்பாலிலொன்றை
சென்றுதான் கொடுத்திடவே பித்தமெல்லாந்
தீருமடா வின்னமொரு சேதிகேளு
பன்றுள செண்பகப் பூமிளகு திப்பிலியும்
பாவகமாய் வறுத்திநீ பொடிதான்செய்து
தின்றிடுவா யாவின்பால் கலக்கிக்கொள்ளு
தெறிக்குமடா நெஞ்சிகட்டுப் பித்தம்போமே. 129

வெறிபயித்தியத்துக்கு

போச்சுதடா பயித்தியத்துக் கின்னங்கேளு
புடலமுசுக்கை சிறுகீரை பொன்னாங்காணி
வாச்சுதே நற்பாலை நெல்லிக்காயும்
வகைவகையாய்ச் சாறுரியும் வடிநீகொண்டு
காச்சவே யதில்மலரது வங்கப்பட்டை
கனியான முந்திரிகை யிலுப்பைப்பூவும்
வாய்ச்சுதடா சீரகமும் சந்தனமுமேலம்
வளர்சாத்திர பேதியுடன் மருந்தையெல்லாம். 130

மருந்தையெல்லாஞ் சமன் கொண்டு வாவின்பாலில்
வளமாகத் தானரைத்து வாவினெய்தான்
திருந்தவே யிரண்டுபடி சாறுக்குள்ளே
செலுத்ததுவா யரைத்துமருந் ததனுக்குள்ளே
பொருந்தவே யடுப்பேற்றி நெய்வடித்து
பொசித்திடுவா யிருநேர மைந்துநாளும்
வருந்திடவே வேண்டாமே பித்தந்தீரு
மக்களே யுப்புபுளி மந்திடீரே. 131

மறக்காம லின்னமொரு மருந்து கேளு
வயித்தியரே தூதுவளைக் கீழ்காய்நெல்லி
சிறுகுறிஞ்சானி ரண்டுடனே சமூலங்கொண்டு
சேரவே யிடித்துநன்றாய்ச் சாறுவாங்கிப்
பெருக்கவே பஞ்ச சாறு சமனாய்விட்டு
பின்னுமுன்னு முச்சியுடன் குடோரியாடி
உருக்கவே மருந்துவிட்டு தேய்த்துப்பின்னு
முடம்பெல்லாந் துவாலையிட வோடிப்போமே. 132

ஓடியே போவதற்கு மருந்துகேளு
உளர்முருங்கைப் பிஞ்சுமே யிரண்டுபத்து
தேடியதோர் நெல்லிக்காய் பத்துங் கூட்டிச்
சீரகமும் வராகன்ரண்டு மிளகுவொன்று
நாடியதோர் கடுகரைத்து தேற்றாங்கொட்டை
நாலுடனே சீவியெல்லா மிடித்துத் தூளாய்
கூடியிரு நாழிநீ ரெட்டொன்றாக்கிக்
குடித்திடுவாய் விடியுமுன்னே குணத்தைக்கேளே. 133

கேளுநீ ரிராவடுப்பிற் குமறக்காய்ச்சி
கிருபையுடன் விடியுமுன்னே குடிக்கும்போது
தாழ்வில்லா யகத்தி யிலைச் சாரணையின்கொழுந்து
தளும்பாமற் பிரண்டைபழம் புளிமிளகு
மீளவே மிளகாய்கரி வேப்பிலையுங்கூட்டு
விரட்டிடுவாய் பத்தியம் போம் வெறியும்போகும்
நீளவே போடாமற் குடோரியுடன்மருந்து
நினைவாகத் துவாலையுநீ நெகிழ்ந்திடாயே. 134

நெகிழ்ந்திடவே யின்னமொரு மருந்துகேளு
நினைவில்லா வெறிபித்த நெகிழ்ந்துபோக
பருந்திடுவாய் சுக்குசர்க் கரையுங்கூட்டிப்
பழம்புளியும் புளியமரப் பொருக்குச்சாம்பல்
சுகம்பிச்சம்பழமேதைச்சாணிச்சாறுஞ்
சுத்தமுடன் மேதைத்தயிர் சாரணையின்வேரும்
உகந்திடவே சமன் கூட்டி யுள்ளுங் கொண்டு
வுச்சியிலுந் தேய்த்துடம் பெங்கும்போடே. 135

போடுவாய் நெறியிரண்டு முச்சிமேலும்
பிடரியிலுங் குடோரியிட்டு ரத்தம்வாங்கி
தேடியதோர் முன்மருந்து விட்டுத் தேய்த்து
தெவிட்ட வெலுமிச்சமாம் பழம்பத்துக்கீறி
ஓடிடவே ரத்தம்வர உரைக்கத்தேய்த்து
ஒருநூறு குடசலத்தை மறுநாளூற்று
வாடாமற் கமுதைப்பால் பொன்முசுட்டைவேர்
மயக்கமறச் சமநரைத்து மகிழ்தருந்தே. 136

அருந்திடவே யின்னமோ ரெண்ணைகேளு
வாள்பொன்னாங் காணிமுசுக்கை சிறு கீரைவேர்
பொருந்தவே சமன் கூட்டித் தேங்காய்மட்டும்
பொருமிபட வரைத்து நீ திரட்டிக்கொண்டு
வருந்தாம லாவினெய் நாழிகூட்டி
மறக்காமற் பாத்துபடி ரண்டு கூட்டி
திருந்தவே மதுரைப்பல மரைத்துமேதான்
திறமான பால் நெய்யில் சேர்த்திடாயே. 137

சேர்த்திட்ட மருந்துதனைப் பாண்டந்தன்னிற்
சலங்குறுணி கூடவிட்டுக் கலக்கிநன்றாய்
வேர்த்திட்டுப் போகாமற் கடையமத்தால்
வேகமுடன் திரளுமடா வெண்ணையப்பா
மார்த்திட்டுக் கலசத்தி லெடுத்துவைத்து
மறக்காமல் நெல்லுக்கு ளொருநாள்வைத்து
ஏற்றிடவே மறுநாளு மெடுத்துநன்றாய்
யெலுமிச்சங் காயளவு வெடுத்தருந்தே. 138

உண்ணாக்குக்குத்தடவபித்தத்துக்குத்தயிலம்.

அருந்தவே யுண்ணாக்கு மருந்துகேளு
வப்பனே யொட்டறையுங் கல்லுச்சுன்னம்
மருகவே யெருக்கம்பால் தனிற்குழைத்து
மாசிலா துண்ணாக்கு தனிற்றடவி
குருவைநெல் லடைசுட்டுத் தின்னத்தீருங்
கொண்டுநீ பத்தியந்தான் மூன்றுநாளும்
விருதாவென் றெண்ணாதே மெய்யாய்த்தீரும்
விருப்பமுட னீமருந்து விளம்பிடாயே. 139

விளம்பினோங் கபாலசன்னி மண்டைநோய்தான்
வேரோடே போவதற்கு விரும்பக்கேளு
பழமாதளம் பிச்சம்பழச் சாறுழக்குப்
பத்தாசிற் றாமணக்கெண் ணெயுரியுங்கூட்டி
தளும்பாமற் குந்திருக்கமரத்தைகுப்பை
தான்கடுகுவசம்புகருசீரகமு முள்ளி
பூளங்கவேவகை கழஞ்சுபொடியதாக்கிப்
பூரிக்கச் சாறுயெண்ணை புகட்டிவெய்யில். 140

வெய்யலிலே வைத்துநீ மறுநாளெடுத்து
மீறவே தலைக்கிட்டு வேடுகட்டி
பையவே யாமணக் கிலையாற்கட்டிப்
பாங்குடனே யைந்துநா ளடரவார்த்து
தையவே யாறாநாள் நல்லெண்ணைகாய்ச்சி
தளும்பாமல் வென்னீருஞ் சார்முழுகு
வையகத்தில் நாசிநீர் காதடைப்பு
மாறுபடா வாதண்டைச் சாறுகூட்டே. 141

கூட்டுடனே பல்லசைவு விருக்கக்கட்டுக்
குவட்டுவலி போவதற்குக் கூறக்கேளு
நாட்டிலுள்ள விளைவெல்லா மகிழ்மருந்து
நல்லகரு வேலுடனே யிலவம்பட்டை
வாட்டமில்லாக் குறுணிநீர் வார்த்துநான்றாய்
வகைப்பட்டை சமன்கொண்டு குறுகக்காய்ச்சி
ஊட்டியே யிருநேரங் கொப்பளிப்பு
வுறுதியடா பலநோய்வு வொளியும் பாரே. 142

பாரென்ன வெள்ளைப் பாஷாணம் லிங்கம்
பாங்கான செங்கழுநீர் கோஷ்டங்கொண்டு
சேரென்ன பூவரசம் பூவிதழிற்_
சித்திர மூலஞ் சமன் சேர்தான் வாங்கி
வாருநீ செம்பரத்தஞ் செவ்வகத்தி
மறுகாலுஞ் செங்கீரை சிவந்ததாகும்
மீரவே யச்சாறு விட்டரைத்து
விதமான விலைக்கள்ளி யிலைதான்புட்டே. 143

புட்டாக யிலையவித்துப் பிழிந்துபோட்டு
புதுமையுள்ள மருந்ததனை யிலையிற்பூசி
கட்டிடுவாய் புன்னைதனிற் கட்டிவைத்து
கட்டுமறு நாளவித்து வோலைகொண்டு
திட்டமாய் வழித்திடவே புழுக்களெல்லா
திரண்டுவரு மெடுத்தறிநீ திரும்பக்கேளு
மட்டாகப் பூவரச னிலையவித்து
மாசில்லாப் புண்ணதிலே மகிழ்ந்து கட்டே. 144

சிலையெண்ணைக்குப்புண்ணுக்கு

மகிழ்ந்துநீ புண்ணாற வரிசைகேளு
மரமஞ்சள் கஸ்தூரி காசுக்கட்டி
புகழ்ந்துகருங் குங்குலியத் திப்பிலியுங்கூட்டி
புனிதமாய் சாதிக்காய் சமன்றூளாக்கி
தகிழ்ந்து தென்னங் குரும்பைச்சாற் நாழிகூட்டித்
தவறாமல் நல்லெண்ணை படிதான்சேர்த்து
இகழ்ந்திடவே காய்ச்சிநன்றாய் வடித்துக்கொண்டு
யிணைச்சீலை தன்னிலூட்டிப் புண்ணிற்போடே. 145

போடவே வகையொன்று சொல்லக்கேளு
புனிதமாங் கடப்பிறாஞ்சி மருந்துநாவல்
தேடுநீ கருங்காலி யாவரையுந்தோடு
திடமாக வட்டத்துத்தி வேருங்கூட்டி
வாடாமல் வகைக்கைந்து பலமிடித்து
மக்களே சலமாறு மரக்கால்விட்டு
கூடவே தூள் போட்டு முடாநாலுக்குள்
குமுறவே காய்ச்சியொரு பானைசேரே. 146

ஒருபானை காய்ச்சியதோர் கியாழந்தன்னை
யுறுதியா யிருநாழி குழம்பாய்க்காய்ச்சி
பருஞ்சட்டி தனிலிறுத்து வைத்துக்கொண்டு
பாங்கான காந்தம்பல மூன்றுஞ் சேரு
சிறந்திட்ட வரப்பொடியுங் கெந்திகூட்டித்
திடமாக வகைக்குப்பல மூன்றுஞ் சேர்த்து
பொருந்திடவே யாவரையின் விரைபடிதான் முக்கால்
புகழ்படவே வகையெல்லாம் பொடியதாக்கே. 147

பிரமியநீரிழிவுக்கு

தாக்கிடுவாய் கியாழத்திற் பொடியையெல்லாந்
தழும்பாமற் கிண்டியே யிறக்கிக்கொண்டு
பாக்களவாய்த் தானுருட்டி நிழலுலர்த்திப்
பழமோறா வதுதேனிற் பரிந்துகொள்ளே
ஆக்கமுடன் பிரமியநீ ரிழிவுதீரு
மதனாலே வந்ததொரு பிளவைதீரும்
ஊக்கமுள்ள மேகமெல்லா மோடிப்போகு
முத்தமமா மிம்மருந்து வுறுதிகாணே. 148

ஒருதலைவலிக்குநசியம்

காணவொரு தலைவலிக்கு மருந்துகேளு
காட்டிலுள்ள தும்பையிலை குப்பைமேனி
தோணவே கசக்கிநீ நசியம்பண்ணித்
துலங்கவுள்ளி வுப்பு யெள்ளு வரைத்துப்பூசு
பூணவே வேப்பிலையை வாய்பேசாமற்
பிடுங்கியே பிழிந்திடுவாய் காதுக்குள்ளே
ஊணவே செப்பகின்ற நெருஞ்சி தன்னை
யுறுதியா யொருகண்ணி லூற்றிடாயே. 149

ஊற்றிடுவாய் வாகைவிரை முலைப்பால்நசிய
மூர்முருங்கை நாயுருவி விரையுங்கூட்டி
நீற்றிடுவாய் நீலியுட சாறுவாங்கி
நினைவாகத் தானரைத்து நல்லெண்ணைவிட்டு
சேர்த்திடவே காய்ச்சிநீ நசியம்பண்ணத்
தெறிக்குமடா யொருதலை நோயுள்ளதெல்லாம்
நீற்றுடனே வெள்ளெருக்கம் பாலுசேர்த்து
நீநசிய மிடநோவு நெகிழ்ந்துபோமே. 150

வாந்திக்குமருந்து

நெகிழ்ந்துபோம் லவங்கப்பூ காந்தங்கோஷ்டம்
நேராகச் சமன்கூட்டி நீரரைத்து
உகந்திடவே யூக்காகக் கலக்கிக்கொண்டு
வுத்தமனே பேய்ச்சுரைக்காய் தனிலடைத்து
புகழ்ந்துமரு ளுகையாமல் மருந்தும்போது
புதுமையா மெதிரெடுக்கும் புகலக்கேளு
மகிழ்ந்திலுப்பைப் புண்ணாக்கும் வேருங்கூட்டி
மறக்காம லாவின்பாலரைத்துக்கொள்ளே. 151

அரைத்துநீ கொண்டுவிடு மூன்றுநாளு
மாவின்மோர் கல்லுப்பு கரைத்துப்பேயின்
சுரைகூட்டி லூத்தினத்து மறுநாளப்பா
சுகமாக வருந்திடவே சுடறெடுக்கும்
விரையவே வேப்பலகு மருதம்பட்டை
வியன்றவசி முருங்கையுடன் விளங்கக்கொண்டு
குறையாமல் நாழிநீ ராழாக்காக்கி
கடித்திடுவா யெலிவிஷங்கள் குடிபோங்காணே. 152

இந்திரியக்கட்டு

குடிபோன விந்திரியக் கட்டுவீழக்
குமிறுமடா நிலப்பனையின் தண்ணிமிட்டான்
துடியாக நெருஞ்சிவேர் சமனீகொண்டு
துலக்கமுட னாயின்பா லரைத்தருந்த
விடியுமுன்னே பெண்மயக்க மிகவுண்டாகு
மேவிலுப்பைப் புண்ணாக்குக் காசுக்கட்டி
பொடியாக்கி யருந்து நீ யிருந்தாயானால்
பூரித்துப் பொங்கிவிடும் புதுமைசொன்னேன். 153

கழல்வாதம் – அண்டவாதம்

புதுமையாய்க் கழல்வாத மண்டவாதம்
போவதற்கு மருந்துநான் புகலக்கேளு
கதுமையா நம்னாரி பேய்மிரட்டி நெரிஞ்சி
கதிக்கின்ற வேலியிலை குப்பைமேனி
மெதுமையுள்ள கொழுந்துவகை பிடிதானொன்று
மேவுசுக்கு திப்பிலியுங் காயமிந்து
அதுமையுள்ள கடுகுவிரு கழஞ்சுவீத
மப்பனே வெள்ளுள்ளிப் பூடுமூன்றே. 154

பூடுடனே மருந்தையெல்லா மெரியாலஞ்சாற்றாற்
புனிதமா யரைத்துமே நல்லெண்ணைகுத்தி
தேடுகழற் கொடிப்பருப்பு பொடித்துத் தூவி
திரும்பவே கோழிமுட்டை யுடைத்துவூற்றி
மூடுநீ சட்டிதனி லூற்றியப்பா
முக்கியமாய்ப் பொரித்துநீ வைத்துக் கொண்டு
வாடிடவே வெலுமிச்சங் காயளவுதின்ன
மாறுமண்ட வாதங்கழல் வாம்போமே. 155

வாதம்போ மாவிலிங்கை வசம்புகொடிவேலி
மறக்காமல் வெள்ளுள்ளி யாவின்பாலால்
நீதமுடன் றானரைத்து மூன்றுநாள் கொள்
நினைவாக வுப்புபுளி புகையுமாற்று
போதவே யிதுவீரக் கருப்புக்கட்டி
புனிதமா யரைத்துருட்டிப் பொருந்தக்கொள்ளு
சூதானவேலியிலை முடக்கொத்தானுந்
துலங்குகழற் கொடியிலையும் புங்கிலையுங்கூட்டே. 156

களவுகெர்ப்பம் விழமருந்து

பங்கிலையோ டிவையெல்லா மிடித்துநன்றாய்ப்
புனிதமாய் வறுத்தொத்தப் போகும்வீக்கம்
அங்குகழற் கொடிப்பருப்பு வெள்ளாட்டுபாலு
மப்பனே கொடுக்கவிரை வாதம்போகும்
மங்காதமிளகு காய்ப்பழமரைத்து
மருகுசழற் கொடிப்பருப்பு வறுத்தரைத்து
பங்கமில்லா வுரிய வெந்நீர் தண்ணீர்கொள்ளு
பறக்குமண்ட வாதங்கழல் வாதம்போமே. 157

போகுமடா களவுகெர்ப்பம் விழுகக்கேளு
பொய்யல்ல கடுகிந்து காயங்கூட்டி
வேகமுடன் பழங்காடி மிகவருந்த
விழுகுமடா கடுகுநல் லெண்ணெயுங்கொண்டால்
தாகமுடன் மிளகு செம்பருத்திப்பூவுந்
தப்பாமற் காடியுண்ணப் பிள்ளையில்லை
சோகமுடன் பெரும்பீர்க்கன் விரையரைத்து
துலங்குமூன்று நாளரைத்துக் குடிக்கக் கெர்ப்பம்போமே 158

கெர்ப்பம்போ மருக்காரை விரைமோரிலூறி
கிரிகையுட னதையரைத்துக் குடிக்கப்போகும்
செப்பமுடன் கீழானின் நெல்லிவேரைத்
திறமாக நல்லெண்ணை தன்னிற்கொள்ள்
ஒப்பறவாய்க் கெர்ப்பமெல்லா மொழிந்துபோகு
முறையுட னீமருந்து வுகந்துசெய்தால்
தப்பாது விம்மருந்து வப்பனே சொன்னேன்
சரீரத்துக் கொருநாளுந் தாழ்வராதே. 159

நீரடைப்புக்குமருந்து துவாலையிட

தாழ்வில்லை நீரடைத்தால் மருந்துகேளு
தரணியுள்ள வோரிதழ்வேர் காடித்தண்ணீர்
கூழாகத் தானரைத்துச் சரீரமெல்லாங்
குமுறவே தான்றடபவ நீர் தெரிக்கும்
பூளைசிறு பூநீர்வேர் பொன்னாங்காணி
புகழாலந் துளிர்ப்பாலிற் பொசிக்கத்தீரும்
நாளான பலகரையைச் சுட்டசாம்பல்
நல்லதோர் பாண்டத்திற் றண்ணீர் வையே. 160

சதையடைப்புக்கு

வைத்துமே பழச்சாறு மேனிச்சாறு
மதிப்பாக வதில்விட்டு மறுநாள்வாங்கி
உத்தமமா மிறுத்துக்கு வாவின்பாலி
லுடனருந்தக் கல்லுவிழு முறுதியாக
மெத்தெனவே வெள்ளரிக்காய் சீவித்தோலை
விதமாகத் துரிசியதில் மேலேபூசி
சுத்தமுடனதை யெடுத்து வருந்துநீரில்
துலங்கவிரு மூன்றுநா ளிருந்தருந்தே. 161

காதுக்குநெய்

அருந்துவாய் வட்டதுத்தி யிலைதான்மூன்று
ஆவின் பாலரைத்துநீ குடிக்கத்தீரும்
பொருந்துவெள்ளாட்டுநெய்யாவினய்யும்
போதநல்லெண்ணெய் சமன்கஞ்சித்தண்ணீர்
வருந்தவே குடித்தாக்கால் கல்லுவீழு
மறுகாலுஞ் சோற்றிலுண்ணத் தீருங்கண்டாய்
திருந்தியநீ ரேலமுடன் தேற்றாங் கொட்டை
திரளரைத்து சர்க்கரையும்பாலிற்கொள்ளே. 162

கொள்ளுவாய் கற்றாழஞ் சோறுவாங்கிக்
குண்டுசட்டி தன்னிலிட்டு அத்திப்பட்டை
மெள்ளவே யிடித்துவதிற் பிசைந்துசேர்த்து
வெய்யில்வைக்கத் தெளிவு வருமிறுத்துககொண்டு
தள்ளாமற் சர்க்கரையுங் கழஞ்சியிந்து
தவறாமல் வெள்ளரிக்காய் காடிகூட்டி
கொள்ளவே ரத்தமுடன் கல்லுஞ்சீயுங்
கூண்டோடே சதையடைப்பு குதிக்கும்பாரே. 163

குதிக்குமே காதிலுள்ள தண்டுநொந்தாற்
குன்றிமுத்துக் காயன்றி கொத்தான்வேரும்
மதிப்பாக வெருமைப்பால் தனிலரைத்து
மறக்காம லுறையூற்றி கம்பைவெண்ணை
துதிப்பாக நீயெடுத்துக் காதிற்றண்டு
துவாலையிட வள்ளைத் தண்டு துலங்கும்பாரு
விதிப்படியே சொல்லிவிட்டோ மொளிக்கவில்லை
விறுமாவின் றனக்கிட்டால் மீறுங்காணே. 164

கைவிலக்கமில்லாதப்பெண்களுக்கு

மீறாமற் றூரமில்லாப் பெண்களுக்கு
வேலியிலைப் பசுவின்பாலில் மிகவருந்து
கூறான தூதுவளைச் சாவாங்கிக்
கொடை கொடையாக் கிக்கிடக்குங் குளத்துப்பாசி
ஏறாமற் புன்னைக்கா யளவுகூட்டி
யிதமாகச் சர்க்கரையு மேகமொன்றாய்
பேறுபட மூன்றுநா ளருந்தும்போது
புறப்படுமே செங்குருதி சிவப்பதாமே. 165

ஆண்கட்டுக்கு

தாமென்ற வாண்கட்டு தடையாய்ப் போனாற்
சங்கம்வேர் நீர்முள்ளி விரையுங்கூட்டி
போமென்ற சோகிதனைச் சுட்டசாம்பல்
புகழாலம் விழுதுடனே முத்தக்காக
ஆமென்ற வாவின்பால் தன்னி லாட்டி
அதனுடனே சர்க்கரையுங் கலந்துகொள்ள
ஏமென்ற விந்திரியகட் டுவிட்டு
இஷ்டானு போக மிசைந்து பண்ணே . 166

மலடிக்கு கெர்ப்பமுண்டாக

இசைந்ததொருபெண்மல டெங்குமில்லை
ஏறினால்மலடான செய்திகேளு
அசைந்திருக்கும் பேயினால் பத்தற்றாலு
மடிவயிறுநொந்துவரும் வாய்வுவாலும்
பிசைந்து கெர்ப்பப்பூச்சியினாற் கிரகத்தாலும்
பிணிநோவு மேகத்தால் வகூரியாலும்
துசங்கட்டிச்கலவியினாற்பூ வொதுங்கித்
துலங்காமற் கெர்ப்பமில்லை சொல்லக்கேளே. 167

கேளுநீ கெர்ப்பந்தான் வாழ்வதற்குக்
கெடியான நானாங்கள்ளி வேரு
ஆளவேயரைத்துப்புன்னைக்காய் போலே
ஆவின்வெண்ணை பாக்களவுகலந்து கொள்ள
நீளநீகுளித்தமுதல் மூன்றுநாளும்
நினைவாகத்தானருந்தக் கெர்ப்பமுண்டாம்
கோளறவே பத்தியந்தான் புளிபுகையுமுப்புங்
கொள்ளாம லாவின்பால் சோறுமுண்ணே. 168

மலட்டுப்பூச்சிக்குமருந்து

உண்ணுவாய் வேப்பலகு சீந்திற்றண்டு
வுடன்முத்தக்காசுடனே யொக்கத்தட்டி
கண்ணவே சாறுரியும் நெய்யுழக்கு
கலந்துநீகொதிப்பித்துக் காலைமாலை
திண்ணமாய்க்குளித்தமுதல் மூன்று நாளுந்
திடமாகவருந்திடவே கெர்ப்பமுண்டாம்
இண்ணாகமரச் சீந்திவேர் நானாங்கள்ளி
யிதமாக வேரரைத்து நெய்யிற்றாக்கே. 169

தாக்குவாய் பெருங்காயமிந்துவுப்பு
தறுகாமற் புளியமர பரணிகூட்டி
ஆக்கமுடன் கற்றாழை வேரின்சாற்றா
லரைத்து நீருட்டிடுவாய் புன்னைக்காய்போல
ஏர்க்கவேகுளித்தமுதல் மூன்று
நாளு மிதமாகநீயருந்து கெர்ப்பமுண்டாம்
கேழ்க்கவேவாயுவறும் பூச்சிவீழுங்
கெடியான தோஷமுடன் விஷக்கிரகம்போமே. 170

விஷப்பாலை வெட்பாலைவாலுழுவை கடுக்காய்
வேண்டு நெல்லித்தான்றிக்காய் கொன்றைபட்டை
நிஷப்பான கொடிவேலியிந் துசுக்கு
நிரைய்ாகவகை மூன்றுகழஞ்சி வாங்கிக்கூட்டி
அஷப்பா மற்பிரமிச்சாராவின் பாலு
மப்பனே வகைக்கிரு நாழிகூட்டி.
பிசகாமல் முன்மருந்துச் சாற்றரைத்து
பின்னையுமோ ராவினெய்நா ழிகூட்டே. 171

நாழிநெய்யுடன் மருந்தெல்லாங் கூட்டி
நன்றாகக் கொதிப்பித்து மெழுகுபோல
தாழியாங் கலச்சாற்றில் வடித்துக் கொண்டு
தருகாமல்முழுக்குவந்த மூன்றுநாளும்
ஊழியாமிருபோது கரண்டியுண்ண
வுத்தமமாங் கெர்ப்பமுண்டா முறுதியாகும்
காளியெனுஞ் சாமுண்டி பசாசுநோய்கள்
கடந்தோடும்பத்திய நீகண்டு கொள்ளே. 172

கண்டுதான் சொல்லுகிறே னின்னங்கேளு
கானகத்திலெருக் கிலம்பாலரப்புக்கட்டி
தண்டாமல்மெழுகு போலரைத்துருட்டித்
தனியேழு ஞாயிறுதனக்குவெந்நீர்கொள்ளு
முண்டியே யெடுத்திடாமல்மோருஞ்சோறு
முக்கியமாய்த்தயிராகும் வேருகேளு
பண்டுகைகாலெரிவுக்குநீர் முள்ளியும்
பாலுடனே யருந்திடவே பறந்துபோமே. 173

கண்டமாலைக் கெண்ணை

பறந்துபோங்கழுத்தில் வருங்கண்டமாலை
பாங்கான சிறுகுறிஞ்சான் பலந்தானைந்து
பறந்துபோம் பொடியாக்கி வசம்பு வன்னி
பாங்கானநல்லெண்ணை தன்னிலிட்டு
பறந்துபோமெரியிட்டுப் பதமாய்க்காய்ச்சிப்
பாங்கான புண்ணிலிட்டு மண்டலநீகொண்டால்
பறந்துபோம்புண்ணாறும்பத்திய மில்லாமல்
பண்பாக வுள்ளருந்து பலிக்குமின்னே. 174

அந்திரவாய்வுக்கெண்ணை

மின்னேகேளந்திரவாய் வேழும்போக
வெட்டுபெருங்குமிழ் வேருகளச் சிவேரும்
சொன்ன தோர்கிலுகிலுப்பை வழுதலைகாக் கண்ணான்
முருங்கை துலங்குசாறணைசிவதையமுக்கறாவும்
வண்ணமாய்க்கொடிவேலிவகைப்பலமுமிரண்டு
மிடாவிலிட்டுத் தூணிநீர்மருகக்காச்சி
பொன்னே நீயெட்டொன்றாய் வடித்துக் கொண்டு
போடுவாய்வெள்ளுள்ளி பலந்தான்பத்தே. 175

பத்துநீர் போட்டிடுவாய் பதக்குநீரிற்
பதறாமலெட்டொன்றாய்க்காய்ச்சிக் கொண்டு
வற்றினபின்னிரண்டுமொன்றாய்ச்சேர்த்து
நன்றாய் வகையான வாதமடக்கி படிதான்ரண்டு
சுத்தமுடன் கழற்பருப்புப்பலந்தானைந்து
சொல்லிரதக்காந்தங்கெந்திகாயமிந்து
வெற்றிபெறுஞ் சவர்க்காரம் வளையலுப்பு
வெருவாலுமுவை சீரகம் வசம்பே. 176

வசம்பாகமாயரைப்பாய் கியாழமிட்டு
மறுந்துசிற்றாமணக்கெண்ணை படிதான்ரண்டு
நிசம்படவே யேகமொன்றாயரைத்துக் கொண்டு
நினைவாகவடுப்பேற்றி வடித்துநீதான்
பிசகாமற் பத்தியமாயருந்தும்போது
பிணியில்லை வாய்வில்லை வாதமில்லை
துசங்கூட்டியிதையுண்டு துலைப்பாயானால்
தூரத்தேயந்திரவாய்வுதுலைந்து போமே. 177

அமுக்கறாக்கர்ப்பம்சகலவியாதிக்கும்

துலைவதற்கின்னமோர் மருந்துகேளு
சுகமான வமுக்கறா பலந்தானூறு
மலையாமற்சமூலமுடனுலர்த்தித் தூளாய்
வடிகொண்டு கலசத்தின் வேடுகட்டி
அலையவே வேண்டாங்கா னொன்றைப்
போது மனுபானமறிந்துநீ செய்தாயானால்
மலைபோலே வந்த தோர்வியாதியெல்லா
மக்களேவிட்டோடு மாறிச் செய்யே. 178

மாறியே மெலிந்தவுடல் நெய்யிற் கொள்ளு
மயக்கமாய்ப் பெருந்திருந்தால்தேனிற்கொள்ளு
மீறியேவரும்பித்தப் பாண்டெருமைமோரும்
விஷமான வெலிக்கடிக்கோமயமு மாகும்
பூறியதோர்விரியனுக்கு வெந்நீர் கொண்டு
பூசுவது மதுவாகுஞ் சிறங்குக்கெல்லாம்
நாறியவெள்ளாட்டு நீரிற்கொண்டு
நலமாக மேற்பூச நன்றாய்த்தீரும். 179

நன்றான பிள்ளைதானினைத்திருந்தால்
நலமான வாவின்பால் கலக்கிக்கொள்ளு
சென்றான குன்மவலிநார்த்தம் பழமாந்
தேவி மார்கைமசக்குப் பசுவின் வெண்ணை
ஒன்றான மிளகுத் தூள்கூடவிட்டு
உடனருந்தக்கைமசக் கோடிப்போகும்
வென்றதோர் குட்டமெல்லாம் விட்டேபோக
வேப்பெண்ணைய்நாடோறும்விதமுங் கிடாயே. 180

விழுங்குவாய்வாதமிடவிளக் கெண்ணெய்க்குள்
மேலுநீபூசிடு வாய் குழப்பிக்கொண்டு
களங்கமறத் தூரமதுகாணாவிட்டால்
காட்டுப்பிலிச்சாறுகாயங்கூட்டு
விளங்குசன்னிக்கோமயமு நல்லெண்ணை கூட்டி
மிகவருந்திமேற்பூசவிட்டே போகும்
புழுங்குகின்றவிப்புருதிவெந்நீர்கொண்டு
பூசிடுவாய்வீக்கத்திற் புகலக்கேளே. 181

புகலுவேனீர் விரியனீரிற் பூசு
பிள்ளையளனோய் கக்குவான் பச்சைப்பாலில்
அகலவேமேற்பூசக்காமாலைக்கு
அப்பனேவேம்பின்பட்டைச் சாற்றிற்கொள்ள
தகவில்லாதிம்முறை யளபாகந்தான்
தப்பாமற் பத்தியங்கள் தாட்சி போகா
வகைவகையா யனுபானமருந்து கொண்டால்
மக்களே வியாதி யெல்லா மாண்டுபோமே. 182

பித்தத்திற்குக்குமரித்தயிலம்

மாண்டுபோம்பித்த மெல்லாங் குமரியாலே
மதுரமுடன் சந்தனமு நாகப்பூவும்,
வேண்டுமடா செண்பகப்பூ கஸ்தூரிமஞ்சள்
விளங்குமிரு வேலியுடன் சிவந்திபுன்னை
தாண்டுமடாசெங்கழுநீர்க் கோஷ்டமெல்லாந்
தருகாமறகடுகுரோகணியுங்கூட்டி
மீண்டு நீதிரிபாலை யஞ்சனக்கல்வங்க
மிரிதானதக்கோலஞ் சாதிக்காயே. 183

காயானசரக்குடன கிலுமாஞ்சில்
கனமானதாமரைப்பூ முன்பூவுங்கூட்டி
ஏயானமருந்தையெல்லாஞ் சமனதாக்கி
யெடுத்தரைப்பாய் குமரிவேர்நீரினாலே
பாயவேநல்லெண்ணெய் நாழிவிட்டுப்
பதறாமலடுப்பேற்றிப் பதமதாக்கி
மாயவே மெழுகு பதம் வடித்துக் கொண்டு
வாசனையாய்ப் புழுகுடனே பூரம்போடே. 184

பூரமுடன் ரோசினையும் போடுபோடு
பூரித்த தயிலத்தில் கலசத்துள்ளே
வாரமாஞ்சனி புதனுமுழுகிவந்தால்
மகத்தான பித்த மெல்லாமாய்ந்து போகும்
தாரமுடனிருவோரு முழுகவேண்டுஞ்
சகலமணிமேகமெல்லாந்தவறிப் போகும்
வீரமுடன் சரீரமெல்லாம் புஷ்டியாகும்
வெகுசுறுக்குத்தயிலமதுவேண்டிப்பாரே. 185

கெர்ப்பஸ்தீரிகளுக்குமருந்து

வேண்டியே கெர்ப்பமாயிருந்தபேர்க்கு
வெடிப்பாகவயிற் கழிந்தால் மருந்துகேளு
ஆண்டிருந்தமுதல்மாதம் வயிறுபோனால்
அப்பனே முண்டாகப்பூ கொத்தமல்லி
மீண்டதோ ரிருவேலிச்சமனாநீரில்
மிகவரைத்துப்பாலருந்த மிதமாய் நிற்கும்
பூண்டிருந்தமறுமாதம் போக்குண்டானால்
புகழ்நெய்தற் கிழங்கு நாயுருவிவேரே. 186

வேருடனே சந்தனமுநீரரைத்து
விதமான யாவின் பால்தனிலருந்து
பாருநீமூன்றான மாத்தைக்கப்பா
பகர்நெருஞ்சியாம்பற் பூவாழைக்கட்டை
நீராலேதானரைத்துப் பாலிற்கொள்ளு
நிசமாக நாலுமாத்தைக்கிலாமிச்சோடு
ஆருக்காஞ்சந்தனமுந்தாமரையின்வேரு
மதில் நீரிற்றானரைத்துப் பாலிற்கொள்ளே. 187

பாலான மாதமைந்தில் மருந்துகேளு
பகருகச் சோலமுடன் விலாமிச்சோடு
மாலையாநெய்தல்வேராம்பற்பூவும்
அப்பனே நீராட்டிப்பா லிற்கொள்ளு
கோலமா மாறுதனிற் சீந்தில் நாக்கு
கொழுந்து சீரகம் நெய்தல்முந்திரிகையோடு
காலமே சிறுதிப்பிலி நீரிலாட்டிக்
கலப்பிலாப்பாலிலுண்ணக் கழிச்சல்நிற்கும் 188

கொர்ப்பத்தில்வயிற்கழிஞ்ச கிராணிக்குவடகம்

நிற்கவேயேழுதிங்கள் சந்தனமிலாமிச்சு
நிசமான தக்கோலந்திப்பிலியுநெய்தல்
பக்குவமாய் நீரரைத்துப் பாலிற்கொள்ளு
பகரெட்டுத்திங்களிலே விளாங்காய்ச்சாறு
தக்கநெய்த லரியுடனிலுப்பைப்பூவுஞ்
சர்க்கரையுங்கற்கண்டுந் தானரைத்து
மெய்க்கவேபாலிலுண்ணவியாதிபோகும்
விதமான வொன்பதாதிந் திங்கள் கேளே. 189

திங்களாமுந்திரிகையிலுப்பைப்பூவுந்
திறமானதாமரைப்பூ பாலிற்கொள்ள
பொங்கமுடன் பத்தாண்டில் வயிறுபோனால்
புதுமையுள்ள குலதெய்வம் போற்றிசெய்து
மங்காமற்காத்திடவே வடித்துக்கொண்டு
முக்கியமாயிளநீரும் பசுவின்போல
கங்குலூர்க்கவலனாஞ் சமயத்தெய்வம்
காக்கவொண்ணாக் காற்பணமுங்கையிற்போடே. 190

கைப்பலனாமின்னமொருமருந்துகேளு
காரிழையாள்கெர்ப்பமுடன் கிராணிக்கெல்லாம்
மெய்ப்பான யிஞ்சிச்சாற்படிதான்ரண்டு
வெந்தயமோகுறாசானிகிராம்புகூட்டி
வைப்பானசாதிக்காய்வராகன்ரண்டு
வகைவகையாய் வாங்கியே விடையமூன்று
தொப்பறவேயிளவறுப்பாய்ச் சூரணித்துச்
சுகமாகவிஞ்சிச்சா றடுப்பிலேற்றே. 191

ஏற்றியதோர்சாறதனையடுப்பிலேற்றி
யிதமாகச் சுண்டிவரப் பொடியைத்தூவி
பாற்றிவாய்கற்கம்போ லப்பதந்தான்
கண்டு பாங்கானமறுசட்டி தன்னிலப்பா
ஊற்றிடுவாய்கற்கந்தான் வடகம்போலுருட்டி
வெய்யில்தனில்காய்ந்தபின்பு பதமாதாக்கி
நேர்த்தியதாய்க் கலசத்திலெடுத்துவைத்து
நிதமாக வோருண்டை தயிரிற் கொள்ளே. 192

தயிரான மேதியுட தயிரேயாகுந்
தப்பாமலொரு வுண்டைத யிரரைத்து
உய்தமுடன் தயிர்குழப்பியுள்ளே கொள்ளு
உண்பது சோர்தயிராகுமற்றதாகா
கயரானபுளிகையு முப்புத்தள்ளிகால
மேயோர்வடகங்கவிஞ்சுக் கொள்ளு
இயரான கிராணியெல்லா மெங்கேபோச்சு
இதைவிட்டால்மருந்தேது வெந்நீராமே. 193

முசல்நெய்

வெந்நீராந்தோடையிலை பலந்தானூறு
விதமாகவிடித்து நன்றாய்ப் பதக்குநீரில்
நன்னயமாய்க்காய்ச்சியே யெட்டொன்றாக்கி
நலமான முசல்தலைக் கால் குடலைப்போக்கி
பண்ணியதாய்க் கண்டதுண்டம் பகுத்துவெட்டிப்
பாகமாய்க் குறுணிநீர் தன்னிலிட்டு
செண்ணியதாய்க் குறுகவேகாய்ச்சிக் கொண்டு
சேர்த்திடுவாய் முன்சாற்றிற் சேரக்கூட்டே. 194

கூட்டுவாய் மதுரம்வெண்கோஷ்டமேலங்
கூறியதோர்லவங்கப் பூகடுக்காயோமம்
வாட்டியதோர்சீரகம்லவங்கப்பட்டை
மகத்தான கற்கண்டு சாதிக்காயும்
தாட்டிகமாய் வெள்ளுள்ளி நாழிகூட்டி
தனித்தனியே மருந்தையெல்லாங் கழஞ்சிரண்டு
மூட்டியே யிடித்துநீவைத்துக் கொண்டு
முக்கியமாயிளநீரும் பசுவின்பாலே 195

பாலிளநீர்நானாழிநெய்யும்நாழி பகரு
சிறுகீரை பொன்னாங்காணிச்சாறு
கோலமுடன்கடைமருந்தெல்லாமொன்றாய்க்
கூடவேபோட்டுநீ குமுறக்காய்ச்சி
சாலவே மெழுகுபதமாய்வடித்து
தறுகாம லாழாக்குநெய்குடிப்பாய்
ஏலவேரத்த பித்தமெல்லாந் தீரு
மின்னமோர்வயித்தியந்தானியம் பகேளே 196

மூத்திரக்கிரிச் சினத்திற்கு

கேட்பதற்கு மூத்திரக்கிரிச்சிபோகக்
கெடியான சிறுபூளை நெருஞ்சிவேரும்
பார்ப்பதென்ன சீராசெங்கழுநீர் வேரும்
பகருசெப்புநெருஞ்சி வேர்பரிந்துகூட்டி
வார்ப்பதுதா னாவின்பா லரைத்துக்கொண்டு
வளமாகவதிற்குழப்பிமருந்து கொள்ள
தீர்ப்பதுதான் மூத்திரக்கிரிச்சிபோகுந்
தேகத்திலுள்ளகாந்தல் தெளிவதாமே. 197

நடுக்கு வாதத்துக்கெண்ணெய்

தாமென்றுநடுக்கியதோர் வாதந்தீரத்
தனிமுருங்கைச் சிவதையுடன்குப்பைமேனி
வாமென்றவெண்ணொச்சி மாவிலிங்கை
மறக்காமல்விடத்திலையும் வெள்வேலாவும்
போமென்ற கருவேலு முப்புறண்டி வேரும்
புகழ்வேலி முக்குறட்டை வாதடக்கி
ஆமென்ற கொத்தானுங்கொஞ்சித்தும்பை
அப்பனே சாறுவகை நாழிகூட்டே. 198

நாழியுடனதன்வேருஞ்சமனாய்க்கூட்டி
நன்றாகச்சாறுவிடுவரைத்துக் கொண்டு
ஊழியாமெண்ணைபடிரண்டுவிட்டு
உறுதியாயேகமொன்றாய்க்காய்ச்சிக்கொண்டு
தாழியாஞ்சட்டியினிற் பதம்நீகண்டு
தருகாமல்வடித்திடுவாய்தயிலந்தன்னை
நீழியதோர்கரண்டியுண்டுமேலும் பூசி
நிலவரமாம்பத்தியம் வைநிவர்த்தியாமே. 199

விப்புருதிக்கெண்ணை

நிவர்த்தியாம்விப்புருதிக்கெண்ணைகேளு
நெருஞ்சத்திச்சாறணை வேர்கிலுகிலுப்பைவேர்
பவுத்தியாம்வசம்புள்ளி தண்ணிமிட்டான்
பாகமாய் நீலிவேர் சமனதாக
தவிர்த்திடாதரைத்து விராகனி
ரண்டுகாயஞ் சாந்தமாயாவினெய்தன்னிற் காய்ச்சி
குவித்திடவேயிருநேரமெட்டுநாளுங்
கொண்டிடுவாய் காசிடை பத்திய முங்காரே. 200.

பூசமருந்து

கார்ப்பது தான்மேற்பூசுபுங்கங்கொட்டை
காராட்டுப் புழுக்கையுடன் கலந்துரைத்து
வார்ப்பதுதானீர்வார்த்து அரைத்துப்பூசு
மறக்காமற்கவிழ்தும்பை புளியுங்கொட்டை
ஏர்ப்பதுவே புற்றுமண்ணு எலைதான் பூலா
இதமாகச் சிறுநீராலரைத்துப்பூச
தேர்ப்பது தான்வாதமெல்லாங்கதிகெட்டோடும்
தெறிக்குமடாவீக்க மெல்லாந் தெரியும்பாரே. 201

இளைப்பிருமலுக்குநெய்

வேறு

தெரிந்தவாமணக்கெண்ணையுரி சேரும்ரோசினை விராகன்ரண்டு
குருந்வசம்பு வொருபலமுங்குறையாதுள்ளிருபலமும்
கழுந்தும் பூலாகொழுஞ்சியிலை கறுத்தசீரகமரைப்பலமும்
அழுந்தப்பொடித்துவெயில்வைத்து அருந்தவிருமலகன்றிடுமே
202

கரிசலாங்கண்ணிச்சாறு காவேளை நொச்சிச் சாறும்
பெரியதோர்வில்வச்சாறும் பேராடை தோடைச்சாறும்
அரியதூதுளையின்சாறு மமுக்குறாச்சாறுஞ்சுக்கு
எரியவேநெய்யிற்காய்ச்சி யெழிலுடனருந்துவாயே. 203

கணைக்குளண்ணை

வேறு

தீருமடாகல் மதங்கல் நாருபற்பம் கழற்
திப்பிலி மதிவிடையக்கடுகு ரோணி
பேறுபடத்தாளி சையுஞ்சீரகமும் ரண்டு
பெருவோமம் அக்கிராஞ்சாதிக்காயும்
பகரு அதுபத்திரியுங்கஸ்தூரி மஞ்சள்
பஞ்ச திரவியகுங்குமப்பூசணிசிங்கி
வாருங்கஸ்தூரிரோசினையும் பூரம்
வளமான சலாசத்து நாயுருவிசேரே 204

நாயுருவிகிரந்தி நாயகமுங்கூட்டி
நன்றாகச்சமன் கொண்டு துளச்சிச்சாறு
ஒயாதகரிசலாங்கண்ணிச்சாறுவுற்ற
வெள்ளைநொச்சிச்சாற்கஞ்சாங்கோரை
பாயுமேயிஞ்சிச்சாற்கற்றாழஞ் சாறும்
பாயவிட்டு அரைத்து நீகடலைபோல
மாயமாய்வந்த தொருநோய் கடீர
மக்களிஞ்சிப்பால்தேனாங் கலந்துவுண்ணே. 205

மாந்தயிசுவுக்கு

உண்ணவேயாவினெய்யுரிக்கிக் கொண்டு
யுத்தமாமிச்சாறு மருந்துசேர்த்து
கண்ணவேகாய்ச்சி நீதுட்டிடையே கொண்டால்
கடல்புக்கு நோயெல்லாங்கமறிப்போகும்
பண்ணுசிற்றாமணக்கெண்ணை முன்சாறுகூட்டிப்
பகுந்திடுவாய்கடைமருந்து கூடச்சேர்த்து
திண்ணமாயெரித்து நீஉள்ளுக்கொண்டால்
தீருமேநோயெல்லாந் தெளிந்து போமே. 206

உட்காச்சல் அஸ்திவெட்டைக்கு

தெளியவே மாத்திரையு நெய்யுமெண்ணை
செலுத்தியே வெவ்வேறுகொள்ளும்போது

ஒழிகிறதோர்வியாதியெல்லாமுரைக்கக்கேளு
உறுதியாமகாமாந்தமெட்டும்போகும்
பழியானவுட்காச்சல் சுரங்களெல்லாம்
பட்சிபட தோஷவகை பாலதோஷம்
துளி வானபிரமிகெந்ததாளியிசுவுதுலங்கு
குடல்வாய்வு குண்டலியிரைப்பு தீரும் 207

தீருமே யத்திசுரக் கைகாலெரிவு திகைட்டு
வோடிவிடுங் குளிகை கண்டால்
வாருநீ யெண்ணைநெய்யொன்றை விட்டொருநாள்
மக்களே நோயெல்லாமாய்ந்து போகும்
கூரறிந்திந்தமுறைமூன்றிலொன்று குழந்தைகள்
நோய்தீர்ந்துவிடுங் குளிர்ச்சியாகும்
வேறின்னஞ்சூரணந்தான் சொல்லக்கேளு
வெகுநோய் கடீர்ந்திடு மேலாதிகேளே 208

ஏலாதிச்சூரணம்
வேறு

ஏலங்கோஷ்டமிலவங்கப்பட்டை யிலங்கும்பத்திரிதிரிகடுகு
கோலமுத்தங்கொத்தமல்லி குலவுஞ்சீரகம் நாகட்பூ
வாலசந்தனங்கர்ப்பூரம் வைக்குங்கிராம்புதாழிசையுஞ்
சாலச்சமனாயிடைகொண்டு சரியாய்ச்சர்க்கரையிடைகூட்டே .209

கூட்டியிடித்துயிளநீரில் குலைநோயெரிவுகாலெரிவு
நாட்டிமிகுத்தவாந்திகுணம் நல்குமிரத்தபித்தமுடன்
ஈட்டின்பெருத்தவிளைப்பிரும லிருகண்சுழற்றல்தலைவலித்தல்
வட்டம்பெருத்தமேகமெல்லா மாறிப்போகுங்கண் டீரே. 210

அமுர்தாதிக்குளிகை
வேறு

கண்டதொருகுளிகையொன்று சொல்லக்கேளு
கசடறவே யமுர்தாதிகவியாய்ச் சொன்னேன்
மண்டலத்திலெல்லோர்க்கும் வியாதிகட்கு
மகத்தான குளிகையிடமார்க்கங்கேளு
பண்டுள்ளவியாதியெல்லாம் பற்றறுக்கும்
படுபாவி மேக மெல்லாம் பறந்து போகும்
மண்டலத்திலுயிர்போனாலுடனே மீழ்க்கு
மப்பனே யிம்மருந்தையறிந்து செய்யே. 211

சகலவியாதிக்குசித்தகுளிகை

அரிதாரந் திரிகடுகு திரிபலையு
மான கெந்தியிருவிரசம் நாபிமுத்தம்
பொரிகாரஞ்சீரகமுங்கஸ்தூரிமஞ்சள்
பொன்கருஞ்சீரகமும் வில்வவேரும்
தெரியவேமரமஞ்ச ளக்கிராகாரஞ்
சேர்த்திடுவாய் விளங்கஞ்சந்தன முங்கூட்டி
பெரியதொருமுருங்கைவட்டத்திருப்பிவேரும்
பேர்கண்டங் கத்திரியும் வேருஞ்சேரே. 212

சேர்த்திடுவாய் வேர்வகையுங்கடை மருந்துந்
திறமாக வகைக்கொருவிராகன்வீதம்
ஆர்த்திட்டவாளஞ்சுத்திவிராகன் பத்து
ஆனதோர்மருந்தெல்லா மொன்றாய்ச் சேர்த்து
கோர்த்திடவேகடை மருந்து சுத்திபண்ணி
குழிக்கல்லிலரைப்பதற்குக் கூறுகேளு
வார்த்திடுவாய் மஞ்சச்சாற்பிழிந்து கொண்டு
மகிழவரை கையான் சாற்முருங்கைப்பட்டை 213

பட்டையின்சா றொரு நாளும் கையான்
சாறொருநாள் பதறாமல்நாளொன் றுசாமமொன்று
எட்டுநாளிம்முறையாயரைத்து மையா
யிதமாகமிளகது போல் நிழலுலர்த்தி
திட்டமாய்கைபார்த்து முகத்தைப் பார்த்து
திறமான நோயறிந்து குளிகை யொன்று
கட்டளையாய் நாளைந்து எட்டுஏழு
கனமான நோய்களுக்குப் பத்துநாள்செய்யே 214

சகலவியாதிக்குமருந்து
வேறு

செய்திடுவியாதிக்கெல்லாந் தீர்ப்பது வனுபானத்தில்
ஐயிதுவியாதிவெவ்வே றருந்துவதொவ்வோருண்டை
தையலேயிருநேரந்தான் றாக்கிட நோய்கடீரும்
பையவேசங்கிறாணி பறக்கும்பாதிரியின்பட்டை. 215

பட்டையை யரைத்தமேதை யிளந்தயிர்குடிக்கத்தீரும்
திட்டமாம்கழிச்சலுக்குச் செலுத்துமுண்டையமும் மோரில்
நட்டமாம்விக்கல்வெந்நீர் நாட்டு நெல்லிக்காய்ச்சாறு
வெட்டுமாவாரைதன்னில் விளம்புந்நிம்பப்பழச்சாறெண்டே

சாரும்விரையுமுண்டையுடன் தாக்குநசியங்கண்ணிலிடு
மீருமெருமைச்சாணிச்சாற் வேண்டுநொச்சிச்சாற்நெய்யாம்
கூறுமாஞ்சிநிலைச்சாறு கூட்டுவந்தோருண்டைதனை
ஏறும்விஷம்போம்நீரருந்த வெல்லாவிஷமுமிகழ்ந்திடுமே. 217

இகழுமிரத்தமண்டலிக்கு இடுநீபாக்கு வெற்றிலையும்
நகழுஞ்சன்னியிஞ்சிச்சாற்நாட்டுந்திப்பிலிகூட்டியிடு
புகழும்பச்சைநாபிதின்றால்போகும் பச்சைக் கழுநீரில்
மகிழுஞ் சாதிக்காய்யாகு மருந்துகண்டமாலைபுண்ணாம் 218

புண்ணாந்துளசிச்சாறரைத்துப் பூசவாறுமுள்ளருந்த
கண்ணவுதிரவாய்வுக்குக் காடிவசம்பு புளியிலைச்சாற்
திண்ணவா வினீராகுஞ் சேரும் நொய்யாம் வெந்நீராம்
வண்ணமருந்து முதிரோகம் வாய்வுகையான்சாறாகும். 219

சாறுங்குளிருங்காய்ச்சலுக்குத் தாக்குமாலம்பாலாகும்
கூறுநிம்பப்பழச்சாற்றிற் கூட்டியஞ்சனமிடப்போகும்
தீரும் நாலாமுறைக்காச்சல் தெளியுமூமத்தஞ்சாற்றிலுண்ண
வாருசீதசுரத்துக்குவாங்குஞ்சீரகஞ்சர்க்கரையே. 220

கரைக்குஞ் சோபசுரத்துக்குக் கையான்றுளசிச்சாறாகும்
நிரைக்குந்திரிபலைக்கியாழமு நேரேவெந்நீரதுவாகும்
மறைக்குந் துளசிநிம்பழத்தின்சாற்றிலுரைத்துக் கண்ணிலிட
இரைக்கும்வேறாகும்ரோகமெல்லா மேவும்வசம்பா வரைமுருகே

முருகுதிரிதோஷசுரவாய்வு முழங்கும் பயித்திய மிவையெல்லம்
கருகுநிம்பழச்சாற்றாற் கக்கவுரைத்துக் கண்ணிலிட
பெருக்குஞ்சுக்கிலதம்பனம்போம் புளியவிரைத்தோல்
சூரணத்தில்
உருகுமுயற்கண்வலிப்புக்குவுரைத்து வஞ்சனங்கையான்சாற் 222

வேறு

சாற்றுகிறேன் வாய்வுசுரம் வயிறுவுப்பல்
　　தவறாமற்பாகலிலைச் சாற்றிற்கொள்ள
போற்றியதோர் முருங்கைப்பட்டை நெய்யரைத்துப்
　　பொருந்தவே யுண்டிடுவா யின்னங்கேளு
கார்த்திட்ட சீரகமுஞ் சர்க்கரையுங்கொள்ளக்
　　கனமான நெல்லிக்காய்ச் சாறுமாகும்
வீர்த்துக்கட்டுச் சூலைக் குவமுரிகூட்டி
　　வெண்காரம் பொரித்துண்ண விட்டுப்போகும் 223

போவதட்ட வியாதிக்கு வாட்டுப்பாலிற்
புகழ்ந்துநீ கூட்டியே குடிக்கநன்று
ஆவதோர் காசம்போம் வெண்காரமாம்
ஆண்சிறுவழுதலைவிரைச் சூரணமுந்தின்ன
கேவலமாம் சுவாசமுடன் காசமெல்லாங்
கெடியான வறுகஞ்சா றெலிச்செவியின்சாறும்
பாவகமாய்ச் சீரகமுங் கூட்டிக்கொள்ளு
பசியெடுக்கச் சீரகமும் வெல்லமுன்னே. 224

ஒன்றானமாதுபிரமேகத்திற்கு உடன்றேனுந்
திப்பிலியு மாட்டுப் பாலாம்
மண்ணானசேத்துமம்போ மக்கிறாகாரம்
வாசமுள்ளசாதிக்காய் கூட்டிக்கொள்ள
கண்ணான வெற்றிலையுந்தின்ன தீருங்
கசடானகுட்டமெல்லாந் தேனிற்கொள்ள
எண்ணாமற் சீரகமுமாவி நீரும்
இஷ்டமுடன் கொடுக்கவே குட்டந்தீரும் 225

குட்டம்போஞ் சொறி சிரங்குதினவு தீர்க்கும்
குழம்பியே நல்லெண்ணையிற் பூசத்தீரும்
கட்டுகின்ற சூலைக்குச் சலவைசன்னி
கையான்சாற் கொடுத்திடவே கமறிப்போகும்
தொட்ட தோர்சூலையின்மேல் மேகமானாற்
சூரணமாஞ் சர்க்கரையுங் கொட்டைப்பாக்கும்
வட்டவேகற்றாழைச் சாறுந்தேனும்
வரிசையுள்ள சீரகமுமுருங்கை வித்தே 226

வித்துடனேயிதையெல்லா மொன்றாய்ச்சேர்த்து
விளாவி யேபழச் சாற்றில் மிகவருந்த
இத்திற்றுப்பிரமேகஞ் சருவமேகம்
ஏகமுடன் மேகமெல்லா மெருமைப் பாலாம்
சுத்தமாமிந்திரிய நட்டமானாற்
சுருக்கான நெருஞ்சியின் சாற்சீரகமுங்கொள்ளு
நீத்தலமே கண்ணோவு விசிப்புமாந்தம்
நிகழவே தூதுவளை பிரமி கொள்ளே. 227

கோளான வெகுமூத்திரக் கிரிச்சிதீரக்
கொள்ளு கருந்துளசிச்சாறாட்டுப் பாலு
வாளுகரு வூமத்தஞ் சாறுகூட்டி
மகிழவே யொன்றாகக்குடிக்கத்தீரு
மேளம யுடம்பெல்லா மெண்ணைபோலு
விசிறியோ சிந்தரசச் செம்முள்ளிச்சாறாம்
தாழ்வில்லா வாட்டுப்பால் கொம்புசந்தன
முந்தான்தேனாம் நோயெல்லாந் தவறிப்போமே. 228

தவறவேபிறமேகம் வெந்தயத்திற் கொள்ளு
சர்க்கரையாம் பயித்தியம்போம் நீரிற்கொள்ள
பவங்கள்விட்டுக் கல்லுவிளக் கொட்டைப்பாக்கு
பாகமாய்ச் சூரணித்துச் சாணிச்சாறு
சவங்கவே பூசனிக்காய் சாறுகூட்டிகடுகவே
குளிகையிட்டுக குடிக்கத்தீரும்
நவமான மூலமென்றவியாதிதீர நாட்டிலுள்ள
பிரண்டைச் சாறிஞ்சிச் சாறும் 229

இஞ்சிச்சாற் பூசனிக்காய்ச் சாறுங்கூட்டி
யிஷ்டமுடன்கொண்டிடவே மூலம்போகு
மிஞ்சியதோர் பீனிசமுங் கபாலக்கட்டி
விழுகின்ற சீயெல்லாம் விட்டேபோகக்
கஞ்சாவினிலைச்சாறு சீலையூட்டிக் காயவைத்து
வதன்மேலே மருந்து கேளு
அஞ்சாமல்முந்தரிகைப் பழத்தின்சாற்றா லணத்திடுநீ
பாகல்விரை ளுளுந்துருட்டே. 230

உருட்டியதோர் திரிபுகையை மூக்கிலேற்ற
வோடிப்போம் பீனிசமுஞ் சீயுமாறும்
பிரட்டியேவயிற்றிலே யெரிவுகண்டால்
பேணியதோர்நெற்பருப்பைச்சூரணித்து
சுருட்டிய தோரிஞ்சிச்சாற் வெற்றிலையின் சாறு
சுகமாகலேகித்துத் துலங்கவுண்ணு
மறுபடியே பசியெல்ல மந்தமாகில்
மாசற்ற பொருமலுக்கு மருந்துசொல்லுவோம் 231

சொல்லுங் கோட்டங்கரந்தையுமா யறுகம்வேறு
துளிரான புளியிலைக் கியாழம்பண்ணி
கல்லுபோற் குளிகைதனையொன்றரைத்துக்
கலக்கியே குடித்திடுவாய்ரோகந்தீரும்
நில்லாதபலகரப் பான்பிரமிச்சாற்றால
நிலைக்கவேசரீரசுத்திநினைவாய்க்கேளு
வெல்லவே வருஷமது மூன்றுமாந்தம்
விளங்குபட்ச மூன்றுடனே நாளுமொன்றாம் 232

ஒன்றான நாளொன்று குளிகை யொன்று
வுடனீச்சத் தண்ணி தனிலுகந்துகொள்ள
நன்றாகத்தம்பனமும் வசியமுண்டாம்
நாட்டிடுவாய் குளிசத்திற் சிரசிலப்பா
பன்றுள்ள தலைதிருப்பிநடுக்க மானால்
பதறாமற் பூசனிக்காய் சாற்றிற்கொள்ளு
என்றுசிறுதெச வாய்வு சந்துநோவு
ஏகமந்திர வாய்வுடன் வாதந்தானே 233

வேறு

தானே முருங்கை வேர்ச்சாற்றில் தளம்பத்துவாலைதானிட்டு
மானேய துதானுள் ளுக்கு மருந்துதிரிபலைதிரிகடுகு
தேனேநிம்பம்பழச்சாற்றில் திரட்டியரைத்துவுள்ளருந்த
நானே சொன்னேன் மருந்திட்டால் நாடிமுறியுங்கோவையிஞ்சி

வேறு

இஞ்சியாந்திரி தோஷஞ்சுரமுஞ் சன்னியிசிப்புக்குத்
திரிபலை யுந்திரிகடுகுங் கூட்டி
அஞ்சாமற் சூரணித்துக் குளிகையொன்று
அன்றாகத்தாங்கொடுக்க அடங்க நோய்கள்
மிஞ்சிய தோர் மிருதசன்னிதிரிதோஷங்கள்
விட்டோடுநொச்சிச்சாற்சங்கஞ்சாற்றில்
கொஞ்சிய தோருப்பிசமும் பயித்திய முந்தீரக்
கூட்டுவாய்விளக்கெண்ணையில் நசியமாமே. 235

ஆகுமே கண்ணுக்கு நசியம்பண்ண
அப்பனே வேப்பிலைசாற் நசியமையா
போகுமேசமுத்திரத்தின் பாலைவிரைச்சாறு
பொய்யல்ல நசியமஞ்சனமுமாகும்

தாகமாய் நித்திரையைக் கொண்ட பேர்க்கு
தவறாமல் ஏலரிசிதன்னிற் கொள்ளு
மேகமுடன் அண்டத்துவாதந்தீர
மிளகு பொடிகொண்டிடவேவிட்டுப்போமே 236

பொருந்தவே வயிற்றுக்கட்டி சங்கிலையுஞ்சாறு
போட்டிடு கோரோசினையுஞ்சந்தன் வசியம்
திருந்தவே முட்டில்லாஸ்திரீகள் தங்கள்
தேடிய தோராலவிரைதின்னத்தீரும்
வருந்தியே புருஷன் பெண்மருவவேண்டி
வாழாத பெண்புருஷன் மயக்கிவைக்க
சிறந்ததோரறவமது தீண்டாதற்கு தேசத்துக்
கொளிவாகுந் திறக்கும் வசியம். 237

வசியமாமாணுக்கும் பெண்ணுக்காகு
மகத்தான குளிகைரண்டெடுத்துக்கொண்டு
ரிசிவேளைதானறிந்து தீபதூப நேயமுடன்
பெலிகொடுத்து வொருபோதாக
பொசியாமற் கொட்டக்கரந்தைவேரும்
பிடிங்கியே குளிகையுடன் சேர்த்துக் கொண்டு
ருசியான பொன்குளிசத்தடைத்துக்கட்டு
நோக்குமடா புருஷனுடன் பெண்ணுஞ்சேரும். 238

பெண்ணகள் ரிஷிபோலேமுட்டில்லாவிட்டால்
போட்டிடுவாய் பழச்சாறிலஞ்சனமுநசியம்
கண்ணானமுந்திரிகைப் பழமுநசியங்
காட்டுப் பன்றிலத்திநசியங்கண்ணுக்கு
எண்ணாத வொருலையு நோவுக்கப்பா
ஏகிவிடுங்குன்றிமணியிலைச்சாற்தேய்க்க
உண்ணுகின்றசாரணைச்சாற் ஆகாச தெர்ப்பைச்சா
றுண்டைனீ கூட்டி யுரைக்கத்தேயே. 239

தேயடாவாய் நாற்றமுருங்கைச்சாறாந்
தீராட்டால் முருங்கை செண்பகப்பூச்சாறு
பேயானநரம்புக்கால் சிவந்துவந்தால்
பிசகாமல்நெல்லிக்காய்சாற் றிற்கொள்ளு
நாய்போலேதிரிந்துநீ யலையவேண்டாம்
நாலாயிரத்தின்சிலவானநோவு

மாயமாய்ப்பறந்துவிடுங்குளிகை கண்டால்
மகத்தான சித்தர்சொன்ன மார்க்கந்தானே. 240

குஷ்டம் – மேகவூறல் – தடிப்புக்குச் சூரணம்

மாசற்றசூரணந்தானின்னங்கேளு
வகையாக யெருக்கிலைவேர் சித்திரமூலம்
தேசத்துநாய்க் கொட்டான ழிஞ்சல்வேரும்
செம்பூரான் பட்டையுடன் வண்டு கொல்லி
மாசற்றதலைச்சுருளி வேப்பம் பட்டை
பளுகாமற் பெருமரமுமுசிலம்பட்டை
வாசற்றமலைவேம்பு பெருவாகைப்பட்டை
வளமான முப்புரண்டி குப்பி வேரும் 241

குப்பியுடன் வெட்பாலைபங்கம் பாளை
கூசாமல்வீழிமலைவிழி கூட்டி
சேப்பியதோர்கார்போகி கடுக்காய்தான்றி
செருஞ்சீரகமுடனே யோமங்கூட்டி
தப்பாமற் சேங்கொட்டை சுக்குத்தேறு
தனிக்காட்டுச்சீரக முஞ்சரிநிரையாஞ் சேரு
ஒப்பியேயிளவறுப்பாச் சூரணித்து
ஒருவேளை வெந்நிரிலுகந்து கொள்ளே. 242

உகந்துநீ கொண்டாக்காற்றீரு நோய்கே
ளூறுதியா மேல்தடிப்புச் சிவப்பு வெள்ளை
தகர்ந்திடு செம்பூரானும்விஷங்களெல்லாந்
தமுதனெய்யுங்குட்ட மெல்லாந்தவறிப்போகும்
செகந்தனிலே சொறிசிறங்குமேகவூறல்
திரேகத்திலுள்ளநோய் தெளியும்பாரு
இகழ்ந்திடாதிம் மருந்துபுளிபுகையைத்தள்ளி
யிட்டமுடன் மண்டல நீயிசைந்து கொள்ளே. 243

கண்புகைச்சலுக்குத்தயிலம்

இசைந்த தோர்கண்புகைச்சல் தயிலங்கேளு
இளநீரும் பாலுமிரு நாழிகூட்டி
பிசைந்தகா ரெள்ளெண்ணை படிதானொன்று
பண்பானவதிமதுரங் கோஷ்டமோம
முசந்ததோராவின் பாலிட்டு ஆட்டி
யுண்மையாயதிற்கரைத்தப்பதமதாக

துசந்ததோர் சனி புதனுமுழுகிவந்தால்
தூரத்திலிருக்கு மருந்துதியுந்தோணும் 244

அதிசாரக்குணம் கியாழம்

தோணுந் தொப்புள்முறுக்குண்டாந் துவளுங்கடுப்புரத்தம்விழு
மாணுமலங்கள் கறுத்துமப்பாலிளகுநுரையுமுண்டாகம்
பூணுங்குறியதிகாரமென்றுபரித்துச் சொன்னொமலமதக்கும்
வேணுமிதற்குக்குறிப்பறிந்து வேண்டாததிசாரப்பித்தம்போம் 245

பித்தவதிசாரந்தானென்ன பெருக்கக் குறிதான்கண்டபின்பு
உத்தகிரிகைசெய்தவர்க்கு முரைப்போம்கர்க்கமுண்மையென
மெத்ததிப்பிலிகொடிவேலிமிகுந்தவசம்பு வெட்பாலை
உத்தமூலமிலந்தைவேருமுத்தம்விடையந்தாஞ்சேரே. 246

விடையஞ் செவியம் ரோகணியுமிகுத்ததேக்குதிரிகடுகு
அடவேகுரும்பைவேம்பலகுமாகுங்கடுகுகருஞ்சீரந்
தொடுகீழ்நெல்லிவிளாவேருந்தொடுத்தங்காயந்திவ்வியமாம்
இடுநீசமனாய்ப்பொடியாக்கியிதமாய்க்கியாழம்வெருகடியே. 247

வெருகடியளவதாகவெந்நீருமிகுத்துக்கொள்ள
பருகவேயுருகக்காய்ச்சிப்பரிந்து கொள்ளதிசாரம்போம்
பெருகு தீபனமும்போகும் பெருவயிறுபொருமலாகும்
கருகுநாபியிலே சூலைங்கடுப்புடன்விருமல் போகும் 248

போகுமே மதிவிடைய மிருவேலிமுத்தம்
புகழானகூவிளத்தின் பழமுங்கூட்டி
ஆகுமிருகழஞ்சியிதைத் தூளதாக்கி
யானவிரு நாழி நீருழக்கதாக
தாகுமேதிப் பிலியுஞ்சுக் குங்கூட்டி
தாடாகவிடித்துமேதூவிக் கொண்டு
ஏகமாய்க்கலக் கிநீகியாழங் கொண்டா
லேகுமதிசாரமுடன் வாதசூலை 249

சூலையதிசாரத்துக்கு மாத்திரை

சூலையாமதிசாரம் போவதற்குத் துலங்கு
மரமஞ்சளுடன் மஞ்சள் கூட்டி
வேலையாமதுரங் கூடவிளமும் வெட்பால்
வேண்டு நீரிருநாழியுகக்கதாக
காலமேவிடையமேலப் பொடியாய்த்தூவிக்
கண்ணவேகுடிக்கவதிசாரம்போகும்

நீலமாங்கிராணி வகையாறும் போகும்
நிச்சயமாய்ப்பிரண்டை சுண்டிக்கரியாஞ்சூதம். 250

வேறு

சூதமேயெட்டு நாபிதுலங்கெமு கெந்தியாறு
நீதமாந்தார மஞ்சநிறுத்துவாள முமீராறு
ஓதும்வெண்கார மூன்றுவுகந்த தோர்சுக்குரண்டு
ஏதமோர்மிளகுமத்தைவிரையரையேற்றிடாயே. 251

ஏற்றிடுசித்திர மூலமிசைந்தசாற் விட்டரைத்து
மேற்றிடுமிளகு போலவிளங்க வேயுண்டைசேர்த்து
உளத்துடன் நிழலுலர்த்தியுரைத்திளநீரிலிட்டால்
ஆத்திடுஞ் சுரங்களெல்லாமகற்றிடக் கடுகுகொள்ளே. 252

இராமபாணம்

கடுகுசுத்திநேர்வாளங் கனத்தயிரதமிசைமூன்று
இடையோரொன்று அய்ங்கழஞ்சியிதற்குச் சர்க்கரையிருபலமாய்
திடமாய் முலைப்பால்விட்டரைத்து திருந்தப்பயறுவளவாக
இடவேமுலைப்பாலிஞ் சியதுவிடு நீராமபாணமிதே. 253

இதுவாங்கெந்தி வெண்காரமிருக்கு நாபியிரதமுடன்
அதுவாந்திப்பிலிதிரிபாலையான தொவ்வோர்கழஞ்சிகொண்டு
மெதுவாஞ்சுக்குவரிதாரம் வேண்டுமொவ்வோர்முக்கழஞ்சு
பொதுவாஞ்சுத்தி நேர்வாளம் பொறுக்கக்கழஞ்சிநிறை கூட்டே

தாபசுரக்குளிகை

கூட்டிநறுக்கிக்குழிக்கல்லில் கோலம்புரசனிலைச்சாறு
மிட்டசுத்திமருந்தையெல்லாம் வேண்டுஞ்சாராயந்தானரைத்து
நீட்டுந்துவரைப்பிரமாணநிச்சமாமிஞ்சிச்சாற்றிட
ஒட்டுங்குளிரும்பரதாப மொழியுஞ்சுரமுமோடிமே. 255

ஓடும்வெண்காரம் லிங்கமுவந்தசாதிக்காய்மிளகு
வாடுமிரதமிந்துப்புவழங்கும் நாபிமத்தவிரை
தேடுந்திப்பிலிபலகரையுந்திரும்பச்சுக்கு வரிதாரம்
நாடுஞ்சமனாயவிரிச்சாற்றில்நன்றாயரைத்துக்குன்றிபோல் 256

வேறு

குன்றிபோ லுருட்டியே யிஞ்சிச்சாற்றாற்
கூறுகேள்பெருவாதஞ்சேத்மவாதம்

மின்றியதோர் மூத்திரக்கிரிச்சி வெக்கை
வெடிசூலையதிசாரக்கிராணிகுன்மம்
அன்றியிடுபலபல வியாதியெல்லாந்தீர்ந்
தோடு மாத்திரையைக் கண்டபோதே
பன்றுள்ளவாழைக்காய் சுறாவின் கண்டம்
பால்மோருகூட்டியே பத்தியங்காரே. 257

கார்போகிதிரிகடுகுகாயமோமங்
கருஞ்சீரகங்கடுக்காய் குப்பையிந்து
பேரானசங்கம்வேர்சங்கங்குப்பி
பெரியதோர் குருந்தவேர்கூரைவேரும்
சிரானதவசிவே ரெல்லாங்கூட்டி சிறக்கவே
பட்டை தட்டிச் சமனதாக்கி
கூரானவிவையெல்லாங் குழிக்கல்லி
லிட்டுக் குமரிடவே வெந்நீராய்க்கூட்டியாட்டே 258

கருங்கோழிலேகியம்

ஆட்டியதோர் கடைமருந்து வொருநிரையாக
அடவாகக்கருங் கோழிவயிற்றுக் குள்ளே
தேட்டியதோர் கள்ளிப்பாலாழாக்கு விட்டு
திடமானகாடி யாழாக்குக் கூட்டி
வாட்டமற வெள்ளாட்டு நீருபடிரண்டு
வார்த்திடுவாய்சட்டிக்குளெல்லாங்கூட்டி
மூட்டியதோர் கோழிய தையுள்ளே வைத்து
மூடுவாம்சீலைமண்தான் மூடிப்பூசே. 259

பூசியேயெரித்திடுவாய் வைத்தமட்டும்
பிறகெடுத்துலேகியம் போலிடித்துநன்றாய்
வாசமிட்டுக்கலயத்திலடைத்துக் கொண்டு
வயிற்றுநோய்குடல்வாதமலட்டுப்பூச்சி
காசினியிலெ ரிகுன்மம் பித்தகுன்மங்
கழல்வாதஞ்சகலமும் போங்கழஞ்சிரண்டு
தேசிகனேபத்தியம் வைத்திருபது நாட்கொள்ளு
தெறிந்தோடும் வியாதியெல்லாம் பஞ்சுபோலே. 260

பஞ்சாக்கினிக் குளிகை
வேறு

பஞ்சலவணமெவாச்சாரம் பருத்தவழிஞ்சிக் கொடிவேலி
அஞ்சாங்காட்டுக்கறணையுறனானபிரண்டையசமோத

மிஞ்சிச்சீரகம் பெருங்காயமியன்ற வாளம்விழாவரி
தஞ்சந்திரிபலை திரிகடுகு தானே யுள்ளி சமன் பொடியே 261

பொடியேசமனாங்கள்ளிப்பால் பொருந்தவரைத்துக்கடலைகள்
மிடிதீர்நெய்பால் தனிற்கொள்ள மேவுங்குளிர்ந்த தண்ணீர்குடி
படியிற்றீரும்வியாதி யெல்லாம் பாகாகேளீர்பாரிலுள்ளோர்
திடமேதீருமெனமுனிவன் செப்புமூத்திரக்கிரிச்சிபோம். 262

மூத்திரக்கிரிச்சிகுன்மமுடன்முசியாமகோதரஞ்சலக்கூராய்
றெத்தசயமுஞ்சுவாசமுடனேய்ந்த அத்திவாய்வுபலம்
போற்றுமந்தக்கிராணிகளே பொருத்துப்பாண்டுகாமாலை
தீத்தேனேகுமென்றுரைத்தார்தீரும்பஞ்சாக்கினிகுளிகை. 263

ஆனந்தத்தாண்டவக்குளிகை

குளிகையாநாபிசூதமனோசிலை கெந்திலிங்கம்
அழிகுவெண்காரங்கூட்டி அந்திடை யெல்லாஞ் சேர்த்து
பழநிம்பச்சாறுவிட்டுப் பண்புடன் சாமநாலு
தெளியவேநரைத்து நன்றாய்த்திரட்டிடுகடுகுபோலே. 264

வேறு

கடுத்துபோல் மாத்திரையைச் சன்னிவாதங்
 கண்டத்தினோ யெல்லாம் போவதற்கு
முடுகியதோர் கொழுஞ்சியின் சாற்தன்னிற்
 கொண்டால் மோசமில்லை தீர்ந்துவிடுமுன்சியாக
படுபாவிசன்னிக்கு முலைப்பாலுண்ணப்
 பறந்துவிடுஞ் சன்னியென்ற தெல்லாம் போகும்
திடமுடனேயிந்தமுறை செய்துபாரு
 செகத்தினிலானந்தத் தாண்டவன் சோதியே. 265

ஆனந்தவயிரவக்குளிகை

சாதிலிங்கமெலிகார மிளகுநாபி தற்சமனாம்
 பழச்சாற்றில ரைத்து நன்றாய்
ஏதமறக்குன்றியளவுண்டை செய்து
 இஞ்சிச்சாற்றா லுரைத்து விடுவீராகில்
பேதமுள்ளசுரமேகுஞ் சன்னிபோகும்
 பித்தேகுந்தேள்விஷமும் பேசியோடும்
நாமமது பிரமானந்த வயிரவனா மென்றே
 யுரைப்பார்க ளெங்கெங்கு முறுதிகாணே. 266

உறுதியாந் திரிபலையுங் காந்தங்காய
முகந்தலிங்கம் வெண்காரமிந்து திரிகடுகு
பிறிதியாம்வசம்புடனே வாய்விளங்க மோம்
பின்னுமொருகுறாசானி கழஞ்சிவகையொன்று
குறுதியாய் சரக்கெல்லாம் சூரணித்துக்
குறிப்பாகசீலைவடி செய்துகொண்டு
அறிதியாமிந்திடைக்குவாளஞ்சேர்த்து
அப்பனே நொச்சிச்சாறரைநாள் மூன்றே. 267

மூன்றுநாள் தானரைத்துக் கடலைபோலே
முழுங்கவேநிழலுலர்த்திவைத்துக் கொண்டு
என்றதொரு விரோசனமாம் வெல்லமாகு
மெடுத்திட்டமோருசோ றுண்ணத்தீரும்
சேன்றதொர்குன்ம மதுநொச்சிச்சாறாந்
தீருமேயாவின்பாலாற் சோறுநல்கும்
வேன்றசீரகஞ்சுக்குகியாழங் கொள்ள
வெறுப்பான சுரங்களெல்லாம் விட்டுப் போகும். 268

போகுமடா சேத்துமங்குமட்டியின் சாறு
பொருந்தவேமாதளையின் சாறுமாகும்
ஏகுமேகாசமெல்லாந் தோடைசுக்கு இது
கண்டங்காலியுடன் றூதளையின்சாறும்
ஆகுமேயெரிவுட னுட்காந்தல்போக
அப்பனே நெல்லிக்காய் கியாழங்கொள்ளு
தாகமே யெடுத்தாக்கா லாவின் மோராந்
தணியுமே நோயென்ற வாயுவெல்லாம் 269

வேறு

வாய்வுகுன்மம் வயிறுடம்பு மருவுங்கைகால் சிறுத்திருக்கும்
மேவுஞ் சிறுநீர் துளிதுளியாய் விழுமெயிதற்குப்பிரமாணம்
பேயினத்தியிலைச்சாற்றில் பெருகும் பத்தியமோர் சோறாம்
ஒயாமந்தம்பயித்தியமு முகந்தகுன்மநெஞ்செரிவு. 270

நெஞ்சேயெரிக்குந்தலைவலிக்கும் நெகிழ்ந்தகுளிருமுட்காச்சல்
பஞ்சுபோலச்சந்துகள்நோம் பருகுகுருங்கைச்சாற்றிலிட
மிஞ்சுமாவின் பாலுஞ்சோற் மிகுந்தபேய்ப்புடல் முசுமுசுக்கை
தஞ்சமென் றேகுளிகையிடத் தவறாச் சோற்றிற்றயிருந்தே 271

அருந்துங்கிரணித்தோர்க்குளிகை யசனம்பண்ணும்போது
கொள்ளு
வசிறுகுன்மநீர்க்கோவை மகிழுஞ்சுக்கு வெந்நீரே
பசிநீர்ச்சோறுதானாகும் பகருங்குடிநீர் சுக்குபலம்
கதிரொன்றில்லா வேப்பிலையும் கருதும் பாண்டுமிவைதீரும் 272

தீருநானாழிநீருழக் காக்கிச்சிறந்த திப்பிலிமேற்பொடிகொள்
பாருமருந்திட்டுடனுப்பும் பகரும் வெள்ளை யோக்காளம்
மாறோவணையாரோசிக்கும் வாயாலெடுக்கு நுரைதள்ளும்
சேரும்நிம்பப்பழச்சாறு சேர்த்தேமோருசோறு முண்ணும். 273

வேறு

உண்ணுமந்தாக்கினிக்குக்காயம் வெந்நீர்
உள்நெஞ்சுதினவுக் குவாளைவேராம்
திண்ணம்வெட்டி வேராகுங்கூடச்சேரு
திரும்பவேகருப்பன் சாற்குளிகையொன்று
பண்ணுபுந்தி மேற்சொறியுங்கஸ் தூரிமஞ்சள்
பகரவேபொடியாக்கிக். காய்ச்சியுண்ணு
கண்ணவே யுருவியுடன் மஞ்சள்தூளுங்
கைம்முறையாய்க் காய்ச்சியுண்ண மூலந்தீரும் 274

கருவேப்பிலைச் சூரணம்

வேறு

மூலவியாதிக் கோர்குளிகை முனிகரந்தைச் சாற்றிலிடப்
சாலப்பத்தியம் பாற்சோறு தயங்குசுவாசகாசத்திற்கு
ஏலச்சிவதைபேரீச்ச ஏதிலொன்றிற்றானிடவே
பாலர்மாடாதோடையிலை பரிந்துகியாழந்தனில்வையே. 275

வையேவயிறுகற்போல மகிழவீங்கித் தொப்புளுமேல்
ஐயசுளித்தநயமுமில்லை யானபசியுந் தாகமில்லை
நையுமலங்கள் தான்கழற நாடுநொச்சிச் சாற்றிலிட
செய்யும் பத்தியம்பாற்சோறு திருந்தக் கூட்டி நீர்கருக்கே. 276

கருவேப்பிலையுமிரண்டுபலங் கனத்தசுக்குவோர் பலந்தான்
மருவநாழிநீருழக்காய் மகிழ்ந்து திப்பிலிமேற்பொடிகள்
திருவேரனையாமுசுமுசுக்கை திகழ்ந்த வெல்லமதிற்கூட்ட
உருவேமிக்க வொளிசிறங்கு முணர்வாம் பத்தியமுணர்
சொல்வோம் 277

சொன்னவனுபானந்தப்பாமற் சுகிக்கமருந்து தான்கொள்ள
வன்னத்தியமீறாமல் மகிழ்ந் தேயுண்டு நடந்தாக்கால்
அன்னம் போலநடையுடையா ளலைக்கும்வியாதியடவெல்லாம்
நன்மையாகுநாளுக்குநாள் நன்றாய்த்துலங்கும் வயிரவனே 278

கஸ்தூரிமாத்திரை சன்னிதோஷத்திற்கு

வயிரம்வெள்ளைப் பவழமுடன் வழங்கும் ஆட்டுக்கால்சேர்த்து
அயிரமுள்ளும் பண்ணியிரை யாகுநண்டுகர்க்காந்தபற்பம்
பயிராவகைக்குயிடை மூன்று பண்ணிக்கல்லு பொற்கவடி
கயராங்குரங்குக்கல்லுடனே கண்டதொலிக்குவொவ்வொன்றே
279

ஒன்றைப்பாம் புக்கல்லரையா முயர்ந்தமுத்துப் பவழம்பத்து
நன்றேகுங்குமங்கஸ்தூரி நாட்டுரோசினை மூன்றிடையாம்
சென்றேபிராந்திதனைவிட்டுச் சேர்த்துப்பத்து நாளரைத்து
அன்றேமிளகுபோலுருட்டி யாகும்பிராந்திதனிலருந்தே. 280

அருந்தச்சன்னிபதின் மூன்று மானசேத்தும் மிருபதுவும்
வருந்தும்பித்தநாற்பதுவும் வாதவகை யோரெண்பதுவும்
பிருந்திடங்களற்றுப்போய்ப் பின்னு மிகுந்து நோய்களெல்லாந்
திருந்துமென்றுவுளுந்துபோல் செய்யுங்கஸ்தூரி யுண்டையிதே.
281

தாளகப்பற்பம் இளைப்பிருமலுக்கு
வேறு

உண்டையாந்தாளகத்தையிலஞ்சிச்சாறு
வுகந்தபிச்சம் பழச்சாறு முள்ளிச்சாறு
தண்டாத பூவரசம் பட்டைச்சாறு
தருகாமல ரைத்திடுவாய் நாலுசாமம்
மிண்டவேயடைதட்டிப் பூர்சஞ்சாம்பல்
மிகுத்ததொருகுகைபிடித்து வுலரவைத்து
பண்டானதாள கத்தையுள்ளேவைத்துப்
பதலமாங்கீழ் மேலுஞ் சாம்பலையுமிடே. 282

இட்டுநீ சட்டிக்குள் மேலுமூடி
யிதமாகத்தீ யெரிக்கப் பற்பமாகும்
புட்டுபோலதையெடுத்துப் பரணிவைத்துப்
புகட்டிடுவாய் சயமீளை யிரைப்புதீரும்

திட்டமொருபணவிடைதான்றிரி கடுரிகு
பொடியில் தீருமேசயகாச மீளைபோகும்
தொட்டதொரு வியாதியெல்லாமுடனே
போகுஞ் சுகமாகவின்ன மொருயிருவிகேளே. 283

வேறு

இருவிநாபியரிதாரமிரதங் கெந்திலிங்கமுடன்
வருமேதான்றிக்காய்சுக்கு மருந்து மிளகுதிப்பிலியும்
தருமேயொன்றுகழஞ்சாகத் தார்நேர்வாளமய்ங்கழஞ்சு
அருமையாகச் சுத்திபண்ணி யரைக்க வேண்டுங்கையான்சாற் 284

சஞ்சீவிக்குளிகை

கையாந்தகரைச் சாறதனாற் கதிக்கவேழு நாளரைத்து
மெய்யேயொருநாட்கொருசாமம் மிதமாயிராமற்றானரைத்து
உய்யும்பயறுபிரமாண முண்டையாக்கிநிழலுலர்த்தி
ஐயாசஞ்சீவிக்குளிகையென்று வருளிச்செய்தாரகத்தியனார் 285

வேறு

அகத்தியமாஞ்சொல்லுகிறோம் பௌத்தீர
மூலமாகுமேசா திக்காய்தன்னிற் கொள்ள
மகத்தான வாய்வுக்குச் சிறுநீராகு
மாசற்ற பழச்சாறு விஷத்துக்காகும்
சுகமில்லாச்சூலைக்கு முருங்கைப் பட்டை
சுத்தவலிகுன்மத்துக்குடி நீர்நொச்சி
ஏகத்திலே பிறமேகம் பஞ்சுமேக
மேகுமே நறுந்தாழிச் சாறுகொள்ளே. 286

கொள்ளுமடாவஞ்சிய தோர்குளிர் வெதுப்பு
கூறுகேள்நெல்லிக்காய்க்கியாழம் வெந்நீர்
தள்ளுமேபிரண்டை வெண்ணைமனக்கட்டப்பா
தாங்காத யெரிகுன்மஞ் சீந்திச்சாறே
வள்ளலேசயம் பற்றுபோகவென்றால்
மகத்தான வெள்ளாட்டுப்பாலிற் கொள்ள
மெள்ளவே வயிற்றிலுள்ள குன்மமெல்லாம்
விட்டோடுந் திரிபலை திரிகடுகுதானே. 287

வேறு

கடுக்கும் வயிற்றிற்குறிப்பறிந்து கண்டுசெய்வாயனுபானம்
எடுக்கும் வியாதிகுறிப்பறிந்து வெல்லாநோவுந்தீர்ந்து விடும்
தொடுக்கும்பேதிமாம் பட்டை துலங்குமுப்பலிஞ்சிச்சாற்
நடுக்குஞ்சஞ்சீவிக் குளிகைகண்டால் நாடாதோடுங்
கெந்தகங்கேள் 288

தேங்காய்க்கடுகு

கந்தகம் பன்னிருகழஞ்சுகிளர்ந்தரச முமறுகழஞ்சு
வந்தவரைப் பொடியையைந்து மருவுமருந்து நிறை கொண்டு
விந்தைகுமரிச் சாறரைத்து மேவுதேங்காய்தனிலிட்டு
அந்தம் பெறவேசட்டி யுள்ளேயடவாய்த் தேங்காய் தனில்வையே

சுரக்குளிகை

வைத்த மருந்தைமூன்று நாள் மகிழவரைத்துப் பொடியாக்கி
நித்தநாலுபணவிடைதானிறையாநெய்யிற்றான்கொள்ள
அத்தசோகைபாண்டுவகையானகழிச்சலதிசாரம்
இத்தனை யெல்லாந்தீருமென்றுவிறை யோரகத்தியரியம்பியதே

வேறு

இயம்பியதோர் நாபிரசங்கெந்தகமுந்தார
மென்றுமனோசிலையுடனே வாளங்கூட்டி
செயம்பெறவே வப்பிரேக செந்தூரங்
கூட்டி சேருமடா லிங்கமுடன் சமனதாக
வயம்பெறவே நொச்சியுடன் மதுரஞ்சாறு
வகைவகைச் சாற்றாலரைத்துக் குன்றிமுத்து
நயம் பெறவே யுருட்டி நிழலுலர்த்திநன்றாய்ச்
நன்மை பெறசட்டியிட்டு வேடுகட்டே. 291

கட்டியே வெயிலில்வைத் தெடுத்துவப்பா
கைபார்த்துமுகம்பார்த்துக் குணங்கள் பார்த்து
திட்டமுடன் மாத்திரை தானொனறெடுத்து
திறமானவனுபானம் வைத்துக் கொள்ள
வட்டான ஆலைவெல்லக் கட்டிதன்னில்
வைத்தருந்த வெருவெந்நீர் சுரத்துக்காகும்
இட்டமுடன் வாதசுரபித்தசுரமெல்லா
மேகுமேசீதசுரமெல்லா நிற்கும் 292

வேறு – கீரிவிநோதமாத்திரை

நிற்கும்கெந்தகம் வெண்காரம் நின்றநாபிசமனாக

ஒக்கக் கூட்டிப் பழச்சாற்றிலுருவித் திரட்டி வைத்துக்கொண்டு
மெய்க்குங்கீரில்வாயில்வைத்துவேண்டும்வாலைச் சுருட்டியடைத்
துய்த்ததனை தன்னிலுப்பைத் தானே கொப்பு மேலை வையே.293

வைத்து அதுமேற்கொட்டுவுப்பைவாயை மூடிச்சீலைசெய்து
உற்றவடுப்பினனலையிட்டுவோயாதொரிக்க நாற்சாமம்
கைத்தாழ்வில்லாத்தீயெரித்துக் கலசத்தெடுத்து மத்தஞ்சாற்
மெய்த்தார் நொச்சியிஞ்சிச்சாற்விளங்கப்பிசரியுலர்த்தியிடி. 294

சுரக்குளிகை

உலர்த்திவைத்துச் சூரணந்தானொடுங்குஞ் சுரமுநசியமிட
பெலத்தமிடமும்வலமாகிற் பேணிச்சுரமுமிகவடித்தால்
வலத்தநாசிதானூதமாறுமிட முமப்படியே
நிலத்தேயோகசுரமானால் நிகழுமிரண்டு நாசியுமே. 295

வேறு – துத்தக்குளிகை

நாசியே மயில்துத்தம் பலந்தானொன்று
நாட்டி லுள்ளதாளகமும் பலந்தான்மூன்று
பேசியேகற்சுண்ணம் பலந்தானான்கு
பிணங்கவேவர்ளைச் சாற்றனி லரைத்து
தேசியாங்குகையில்வைத்துச் சீலைசெய்து
சேர்த்து நீகுக்குடத்தி லெரித்தெடுத்து
ஆசியேது வசியிலைச்சாற்றரைத்து
அப்பனேமிளகு போலான தொக்கும் 296

ஆனதோருண் டைதனை யிஞ்சிச்சாற்றா
லருந்தவே சீதசுரமகலுமப்பா
போனதோரெருக்கம்பால் கோதும்பைமாவில்
புகட்டியே புதைத்துவைத்துப் பின்பெடுத்து
கானகத்துச்சதுரக்கள்ளிப்பாலிலாட்டிக்
கையடைபோல் தட்டி நெய்யிற்பூசி
னமாமடைசுட்டு வைத்துக்கொண்டு
சாப்பிடுவாய் கழல்பருப்பு வெல்லம் நெய்யே. 297

சீதசுரக்குளிகை

நெய்யாகுஞ் சோறுடனே மோறுமுண்ணு
நேத்தியாயப் பாண்டுகாமாலைபோகும்
நய்யுமே கெந்தகமுங்காட்டுப் பாகல்
நற்கிழங்கு கடுக்காயுஞ்சமனாகக் கூட்டி

கையினாற்செம்பிலைச்சாத் விட்டு ஆட்டி
கதிக்கவே சோற்றுத் தண்ணீரிலாட்டி
மெய்க்கவே யுளுந்தளவுவுண்டைசெய்து
வெய்யிலில்லையா தெடுத்துநிழலுலர்த்திடாயே. 298

பாண்டுகாமலைக்கு கோதும்மையிட

உலர்த்தியதோர்குளிகைதனைத் திரிகடுகிலிட்டால்
ஓடும்பதின் மூன்று சன்னிசுவாசகாசம்
பெலத்திட்டபாண்டுவுடன்கிராணி வாய்வு
பேரானபுண்ணுபதினெட்டுகுட்டம்
துலைத்திட்டவெழு வகைச் சுவாசகாசம்
சுருக்கான வுற்புதமாம்வாதந்தீரும்
மலைத்திட்டுப் போகாம லின்னங்கேளு
மகத்தான சுரக்குளிகைவணங்கிச் செய்யே. 299

வணக்கமுடன் துத்த மஞ்சு பராதமொன்று
மயிலான துருசொன்று நாபிமுக்கால்
இணக்கமுடன் தாரமொன்று கூடச்சேர்த்து
இயலாகப்பாகலிலைச் சாற்றரைத்து
கணக்குடனே பயறளவுண்டை செய்து
கவனமாய்க் கியாழம்விஷ்ணு காந்திகொள்ள
பிணக்கொன்று மில்லையப்பாசுரங்களெல்லாம்
பேசாமலோடிவிட்டுப் பேணிச்செய்யே. 300

வேறு சுராங்கிஷம்

பேணிபேயிரதமுடனப்பிரேகஞ் சேர்த்துப்
பிரகாமற்சமன் கூட்டி மருக்கொழுந்துச்சாறு
ஏணியா மிருவேலிச் சாறுங்கூட்டி
யிதமாகத் தானரைத்துக் கடுகுவுண்டை
தூணியாய்விடாது சுரம்போகவேண்டி
துடியாக விருவேலி சுத்தத்தண்ணீர்
ஆணியாமுண்டைதனை யுரைத்துக்
கொள்ளு அஞ்சியிடு தோஷசுரமெருக்கஞ்சாறே. 301

மருக்கொழுந்து – உண்டை – வேறு

சாறாமிரதங்கெந்தகமுந்தாக்குநாபிமனோசிலையும்
வேறேயாகவெண்காரம் விளங்கும் வகைக்குவோர்கழஞ்சு

சுறாவதற்கு வெட்டிடையுங்கூட்டுமிளகு பொடிசெய்து
தீரவிடித்து வடிகொண்டு தின்னப்பணவிடை சூரணமே. 302

பூபதியுண்டை – வேறு

சூரணமாம் வெற்றிலையில் மடித்துவுண்டு
சுகமாக வென்னீர் தான்குடிக்கத்தீரும்
காரணமாம் பாண்டுவுடன் சோகைதீருங்
காமாலைகுன்மமுடன் வரட்சிதீரும்
வாரணமாம்வளப்புடனே யிசுப்புதீரும்
மகத்தான குளிர் காச்சல் மாறிப்போகும்
பூரணமாம்பின்னையுமோர் பித்தந்தீரும்
புகழான குளிகையொன்று யிரதங்கேளே. 303

கெந்தகசுரக்குளிகை

இரதங்கெந்தகம் வெண்காரமேகுந்தாரமனோசிலையும்
மருவுந்தாம்பரபற்பமுடன் வண்மைதிப்பிலிமிளகுடனே
உரிமைநொச்சிகண்டாலியோங்குமாடாதோடையிலை
பெருகஞ்சாற்றாற்றானரைத்துப் பேணிப்பயறளவுண்டைசெய்யே.

செய்தவுண்டைக்கனுபானந்தேனே சர்க்கரையிஞ்சியிற்கொள்ள
ஐயங்குழையாசுவாசம் பற்றுமானயீளையிருமல்சுரம்
வெய்யங் குன்மம்பிரளியுடன் மிகுத்தசுரவகைதானனைத்தும்
உய்யவிடமுமில்லையென்று வோடிப்போகுங்கண்டாயே. 305

கண்டேயிதற்குப்பத்தியந்தான் குருதுந்துவரையரைக்கீரை
அண்டர்புகழுமிஞ்சிசுண்டியாகுமென்றாரகத்தியனார்
தொண்டர்புகழும்பராபரனார்சுக்கிற்றபாதம் போற்றியபின்
பிண்டிவினைபோஞ்சுறாங்கிஷந்தான்மிகுத்தவதிசாரந்தீர்ந்திடுமே.

சன்னிக்குஉண்டை

தீருநெல்லிதிப்பிலியுந்திக்கோரொன்றுமுக்கழஞ்சு
பாருகெந்திநாபியுடன்பகர்வோரொன்றுகழஞ்சாக
சேருமிஞ்சிச்சாறரைத்து தெளியுங்குன்றிப் பிரமாணம்
நேராயுலாத்தியிஞ்சிலிடநிகழும் வியாதிபிணிகேளே. 307

கேளீர்சுத்திபுரமேகங்கிளர்ந்தசன்னிபதின்றும்
நாளுமுடலில்வாதம்பலநன்றாய்த்தீருந்தப்பாது
ஆளுமாவின்பாலுடனேயரிசிகூடத்தான்போட்டு
மூளும்பசிக்குந்தான கஞ்சிமுன்னோருரைத்த மொழியிதுவே 308

இதுவேகேளுவெண்காரமிரதமனோசிலைமத்தவிரை
பொதுவாநாபிவகைகழஞ்சு போற்றுந்திரிகடுகு அறுகழஞ்சு
மெதுவாந்தேசிச்சாறரைத்து மீறங்குன்றிப்பிரமாணம்
அதுவாந்தேசிச்சாற்றிலிடவான சுரங்களகன்றிடுமே. 309

அகன்றிரோகணிதிரிகடுகுவானவிலுப்பைப்பூவுடனே
புகன்றுமிகவுங் கோழியதிற்புகழுமஞ்சட்கரு வெடுத்து
அகன்றவிதுவுஞ்சரிசமனாயான முலைப்பாலிட்டரைத்து
இகன்றசுண்டைக்காயளவுயிஞ்சி முலைப்பால் குணமாமே. 310

இதுவும் உண்டை

குணமாந்திப்பிலிசுக்குட்னே கூட்டுகடுகுமிளகுடனே
மணமாங்காயமோமமுடன் மறக்காதிப்பிலிக் கட்டையுடன்
தணலாமிஞ்சிச்சாறுவிட்டுத் தயங்காதரைத்து முழுகிடவே
இணமாம்வாய்வுயிருமலறுமெல்லாச்சுரமும்விட்டேகும். 311

கர்க்கடகசிங்கிசூரணம்
வேறு

ஏகு மேகற்கடக சிங்கிதேக்கு
இதமான திப்பிலியும முர்ந்ததான்றி
போகுமேசடாமாஞ்சிசுக்கு கோஷ்டம்
பொருந்தியதோர் வழுதிலையுமிளகுயிந்து
ஆகுமேதூதுவளை கண்டங்காலி யடுத்த
நெல்லிப்பருப்புடனே பொரியுங்கூட்டி
வாகுபெற வறுத்துநீ பொடியதாக்கி
வளமாகத் தேனிலுண்ணயிருமல் தீரும். 312

கியாழம்

திருமேசுக்குடன் சீந்திகூட்டிச்
சேருநீ யிருவேலி லா்மிச்சோடு
பாருயிருநாழிநீ ரெட்டொன்றாக்கிப்
பதறாமற்றிப்பிலியை வறுத்துக் கொண்டு
சேருநீகியாழத்தில் மேலே தூவிச்
செலுத்துவாயிரு நேரங்கியாழந்தன்னை
மாறுமே சுரங்க ளெல்லாம் விட்டேபோகு
மயக்கமுடன் தாகமெல்லா மாறிப்போமே. 313

வேறு – சுரக்கியாழம்

போமே தான்றிகடுகு நெல்லி போற்றுந்தாமரையி லவங்கம்
ஆமேகொன்றைத் தோலுடனே யரியகழஞ்சுக்கோரொன்று
நாமேசொன்னோமிருநாழி நல்ல நீரில்வெந்திறக்கி
தாமேதிப்பிலிதூவியுண்ணத் தாங்காச்சுரமுந்தங்காதே. 314

வேறு

தங்காததாமரையின் கிழங்குசாறு
சம்மட்டிமதுரமுடனோ மங்காயம்
பங்கமில்லாநன்னாரிவேருமிந்து
பகரிலுப்பைப் பூவுடனே சமனதாக
சிங்காரமான தொன்றிரு கழஞ்சு
சேரவேகாய்ச்சிநீயொட் டொன்றாக்கி
பங்காமில்லாத்திப்பிலிமேற் பொடியைத் தாக்கிப்
பாவனையாய்க் கொள்ளச்சுரம் பாழதாமே. 315

வேறு

ஆமேநெல்லிக்கடுகுதான்றி யாகுமழிஞ்சியிருவேலி
தாமேசொல்லுமிலாமிச்சு தமர்த்தந்தாமரைக்கிழங்குடனே
ஓமேயோரென்றிரு கழஞ்ச வொளியுநீரிலெட்டொன்றாய்
வேமேவெந்துகுடிப்பீரால் வெதுப்புமில்லைவிதியெனவே. 316

விதியேயெண்ணும்வெண்காரம் வேண்டுந் தண்ணீர்ப்பதக்காக
கொதியாநின்ற வெதுப்புடனே கூட்டிக் கொள்ளக்கொள்ளுமதிற்
சதியாதிருந்ததெமக்கென்று தாமமதியச்சாறுடனே
பதியெயல்லக்காணுமது பாரீர் சுரமும்பையெனதே. 317

பையேசிறுகாஞ் சோரியுடன் பருத்தசீந்திற்றொடையிலையும்
செய்யுஞ் சிறியவழுதிலையுஞ் சேருஞ்சுக்குவன்னியோமம்
வையவிடிக்கவகைகழஞ்சு மறுக்கக்காய்ச்சி யெட்டொன்றாய்
நையவெடுத்துக் குடிப்பீராய் நமனுஞ்சுரமும் நாடாதே 318

நாடுஞ்சீந்தில்வேப்பீர்க்கு நல்லநெல்லிக்கடுதான்றி
பொடாப்புடலும் ரோசினையும் போற்றுஞ் சிறுகாஞ் சோறியுடன்
பாடாபகரும் பெருங்குரும்பை பதித்தபட்டை வேருடனே
கோடாதிருத்துயெட்டொன்றாய்க்குடிப்பீர்கழஞ்சிதேனுடனே.319

தேன்சிறுதேக்குநிலவேம்பு திப்பிலிகோஷடமுத்தக்காசு
வான்சிறுகாஞ்சிபற்படக மதிக்குஞ்சீந்திகத்திரிவேர்
தான்சிறுசுக்குநாழிநீர் நன்பாய்க்காய்ச்சி யெட்டொன்றாய்
தானதுமூன்றுநாள்குடிக்க சகலசுரமும்வாராதே. 320

சுரக்கியாழம்

வாராய் சுக்குச்சீந்தியுடன் மருவும் வழுதிலைக்கத்திரிவேர்
நாறுங்கோஷடமுடன் கழஞ்சா நண்பாய்த்தகத்திருநாழிநீர்
பாராய்க்கியாழமெட்டொன்றாய்ப் பருகக்காய்ச்சி குடிப்பீராய்
சீராய்வந்தசுரங்களெல்லாஞ் சிதறிப்போகுங்கண்டீரே. 321

வேறு

கண்டதொருசந்தனநன்னாரிவேரு காட்டில்
கொட்டிக் கிழங்கு செங்கழுநீர்கோஷ்டம்
மிண்டதொரு முந்திரிகையிலுப்பைப் பூவு
மீறாமலிருகழஞ்சுகூட்டிக்காய்ச்சி
சுண்டவே யெட்டொன்றாய்க்கியாழங் கொண்டால்
சுரமனைத்தும்போவதுதான் சுருக்கைக்கேளு
பண்டுள்ளசுரங்களெல்லாம் பறந்துபோகும்
பாகமாய்க்கி யாழமதைப் பகருவீரே. 322

வேறு

பருகிப்பழத்தின் முந்திரிகை பருத்தவிலாமிச்சிறுவேலி
வரும்பேரீச்சுசரிசமனாய் மறுக்ககாய்ச்சிக் குடிப்பீராய்
குறுகிச்சுரமும்பரதாபங் குதித்துவோடிப்போவதற்கு
மறுகக்கியாழந்தனைக் கொள்ளு மருண்டுபோகுங்கண்டீரே. 323

வேறு

கண்டதொருகியாழமொன்று சொல்லக்
கேளுகசடானசுரமற்றுப்போவதற்கு
மண்டலத்துச் சீந்தி பதினைங் கழஞ்சுகூட்டி
வகையான சுக்குநாற் கழஞ்சுகூட
தண்டாமலிடித்திடுவாய் தூளதாகத்
தனிநீராலெட்டொன்றாய்க்கியாழங்கொண்டால்
பண்டுள்ள சுரங்க ளெல்லாம்பறந்துபோகும்
பாவனையாந் தேன்கூட்டிப் பருக நின்றே. 324

வேறு

நன்றேநமதுரஞ்சுக்குடனே நறுக்கு மூலந்தோடையிலே
இன்றேநீர்தானிருநாழி யிடித்துக்காய்ச்சியெட்டொன்றாய்
சென்றேகுடிக்கச்சுரங்கள் விட்டுத் தெறித்துப்போகுங் கண்டீரே
குன்றேமுலையாள்காந்திமுத்தங் கூட்டிக் கொள்ளக் குணமாமே.

குணமாம்ரோகணி செவ்வியமுங் கூட்டுங்கடுக்காய் சுக்குடனே
மணமாஞ்சாரளைமரமஞ்சள் வைக்குந் தேவதாரமுடன்
பணம்போல் நீரிலெட்டொன்றாய்ப் பறக்கக்காய்ச்சித் தானிறக்கி
உணவாய்த்திப்பிலிமேற்றூவி யுகந்து கொள்ளக் சுரமறுமே. 326

அறுமேமிளகுகோஷ்டமுட னான்குமிருவேப்பலகுடனே
குறுகுங்கொத்தான்முத்தமுடன் கொள்ளுந் தேவதாரஞ்சேர்
மறுகொங்காணிபெருங்குறும்பைவைக்கும்புடோலவிடையமுடன்
சிறுகாஞ்சோறிகீழ்நெல்லி சேர்த்தேகியாழஞ்சுரமகலும் 327

அகலுங்கொன்றைத்தான்றியுட னாகும்ரோசினை வேப்பலகு
புகலுமுத்தக்காசுசுக்கு பொதுவாமூலசீரகமும்
வகையாய்க்கழஞ்சுதான் வாங்கி வற்றக்காய்ச்சிக்குடிப்பீராய்
தகையாதிப்பிலிமேற்பொடியாந் தங்காதெடுத்துக்குடிப்பீரே. 328

குடிக்குஞ்சுக்குமுத்தக்காசு கூட்டுசாறணைவேப்பலகு
முடிக்கக்கேளாயோரொன்று முருகுமெள்ளுமுக்கழஞ்சு
படிக்குப்படியேமேலிட்டுப் பையக்காய்ச்சி யெட்டொன்றாய்
மடிக்கப்பொடியைமேலிட்டு மதித்துக்குடிசுரம்வாராதே. 329

வாராய்சிவதைகண்டங்காலி வளருஞ்சுக்குமிளகுடனே
ஏராதென்னச் சொல்லுகிறோ மிதுவுமோரொன்றுமுக்கழஞ்சு
காராய்குழலேயெட்டொன்றாய்க்காய்ச்சித்திப்பிலிமேற்பொடியை
சீராய் மலையாயிப் போதிற்றிகழப் பருகிற்றிண்ணமதே. 330

திண்ணமதுவேதோடையிலே சீந்திற்கொடியும் வழுதிலையும்
தண்ணுஞ்சுக்குவகையொன்று தாங்கக்கொள்ளுமுக்கழஞ்சு
வண்ணம்புதிய நீரிலிட்டு வற்றக்காய்ச்சி யெட்டொன்றாய்
தண்ணுந்திப்பிலிமேற்பொடியாய்த் தாகசுரமுந்தருகாதே. 331

சுரக்குளிகை – வேறு

தருகாது கடுக்காயுஞ்சிவதைவேருந்
தாக்குசுக்குரோகணியுங் காந்தங்கூட்டி

முருகியதோர்களிப்பாக்கு சீந்திற்றண்டு
மோதுகண்ணிச்சாறுடனே மொறுக்கிநன்றாய்
உறுதியாய் நீரிலிட்டுயெட்டொன்றாக்கி
யுடனாகத்திப்பிலிமேற் பொடியுங்கொள்ள
தருகாதுகரமேகும்வயிறுபோகுந் தனிக்
குளிகை கெந்தகத்தைச்சாற்று வோமே. 332

கெந்தகம்பச்சைநாபி கேளுநீமிளகுசூதம்
வெந்தநேர்வாளந்தன்னை விஷமதுதள்ளிக்கூட்டி
புந்திபூசனிபருப்பு பொருந்தவேதானுங்கூட்டி
இந்தமாமுளுந்துதன்னை யிஞ்சியிலரைத்துறுட்டே. 333

வேறு

உறுட்டுங்குளிகைசுக்கிலிட்டு வோடுஞ்சுரங்களனைத்தினுக்கும்
இறுக்குஞ்சன்னிகள் பதின்மூன்று மேகுமின்றிச்சாற்றிலிட
அறுக்கும்வயிற்றுநோயெல்லா மழிக்குந் தேனுமிஞ்சிரசம்
குறுக்குமுந்திமலக்கூடு கோழையறுக்கும் விளக்கெண்ணெய். 334

பாஷாணக்குளிகைகுளிர்சுரத்துக்குமோரிற்கொடுக்க

விளங்குந்துத்தம் நாலுடனே வேணபாஷாணமூன்றாகும்
களங்கமற்ற வாளம்ரண்டு காட்டுசாத்திரபேதியொன்று
பிளங்கமோருவிட்டரைத்துப் பேணிக்கடுகுபோலுருட்டி
உளங்கள் குளிருஞ்சுரமனைத்து மோடியொளியுமோரிலிடே. 335

மோராமத்துவிரைநாலு முளிவெண்காரமஞ்சாகும்
பாராய்கெந்தகமாறாகும் பகருநாபியேழாகும்
கூராயிரதமெட்டுடனே கூட்டிச் சேர்த்துநிறைகொண்டு
வேராஞ்சித்திரவேர்ச்சாற்றில் விளங்கக்குன்றிமுத்தாமே. 336

முத்தாமுண்டைதனையெடுத்து மோதுஞ்சுரத்திலிஞ்சியிடு
மெத்தவலிக்கும் வலிகுன்மம் வெள்ளையுள்ளிச்சாற்றிலிட
பித்தமிகுந்ததலைசுழற்றல் பேணிநொச்சிச்சாற்றிலிட
சுத்தவாதப்பிடிப்புக்குத் துலங்குநொச்சிச்சாறருந்தே. 337

சந்தனபாஷாணக்குளிகை

அருந்தும் வெள்ளைப் பாஷாண மானகழஞ்சுரண்டாகும்
பொருந்துஞ்சந்தன முக்கழஞ்சு போதக்குழிக்கல்லதனிலிட்டு
வருந்தி முலைப்பால்விட்டாட்டி மறுகமூன்றுநாளரைத்து
திருந்தமிளகுவென்னீரு தீரும் வெண்ணைசுரமிருமல். 338

சுரமாந்துத்தம்பத்துடனே துலங்கும்பாஷாணநாலாகும்
வருமேயிதனையிடைகொண்டு மத்துமெருக்கஞ்சாறரைத்து
பருவமாகரண்டுநாள் பாங்காயரைத்துக்கடலைபோல்
சருவசுரமுமாவின்பால் தன்னிலருந்தச்சாந்தியதே. 339

சாதிலிங்கம் வெண்பாஷாணந் தானே யூமத்தஞ்சாற்றரைத்து
மேதமாகச்சாமமரை விளங்குமுளுந்துப்பிரமாணம்
போதவுருட்டிக்குளுந்தண்ணீர் பொருந்தக்குடிக்கவல்லீராய்
மாதேகுளிருஞ்சுரமாறு மன்னுவிருமாஸ்திரமிரதம். 340

இரதஞ்சுத்தியிறுகழஞ்சு யேமத்தேசிப்பழச்சாற்றால்
நிருதமாகநாளொன்று நிகழ்ந்தசத்திசாறணையும்
மரிதேசுக்குத்திப்பிலியு மதுக்குக்கழஞ்சுவகைகொண்டு
பருதுவாகவெலுமிச்சம் பழமுமிஞ்சிச்சாற்பகரே. 341

பிர்மாஸ்திரங்குளிர்ந்ததண்ணீரில் சுராங்கிஷம்

பகலுமுதலாய்நாள்மூன்று பரிந்தேயரைத்துப்பயறளவாய்
எகலுமாகக்குளிகைசெய்து யிஞ்சிதேனிற்றானிடவே
தொகலுஞ்சன்னிவாதமுடன் சொல்லுங்கைகால் குளிர்ந்தசுரம்
அகலுஞ்சன்னிவிஷமாறு மதிசாரமுமஞ்சியதே. 342

அஞ்சுமிஞ்சிச்சாற்றிலிட வாகுமாடாதோடையிலை
மிஞ்சும் பூசனிகொத்தமல்லி மிகுந்தகுமரி சாறுசுக்கு
விஞ்சும்பற்பாடகமிரையும் விளங்கச்சமனாய்த்தான்காய்ச்சி
அஞ்சாருண்டைதானிடவே யாகுஞ் சுறாங்கிஷமதுசாதி. 343

சாதிலிங்கம் பெருங்காயந் தானேநாபியெலிகாரம்
ஏதமிளகுசமனாக யென்றும் வாளமுக்கழஞ்சு
போதக்கற்றாழஞ்சாற்றிலுண்டை பொருந்தமிளகுப்பிரமாணம்
மாதேயிஞ்சியிவையன்றி வருந்துங்கருப்புக்கூட்டியுண்ணே. 344

உண்ணுஞ்சுரங்கள் தான்றீரு மோடுமதிசாரமொழிந்துவிடும்
பண்ணுஞ்சீதசுரமாறும் பரதாபசுரங்கள் பயந்தோடும்
எண்ணும் வாதசுரமேகு மேகபித்தசுரந்தீரும்
திண்ணமிதுவேயனுபானஞ்செய்யக்குளிர்சுரந்தீர்ந்திடுமே. 345

கிராணிக்குச்சாதிக்காய் மாத்திரை

தீர்ந்திடுஞ்சாதிக்காய் குடைந்து திறமா முருங்கைப் பிசினியிட்டு
சேர்ந்திடப்பின்னுங்காய்குடைந்து சீரகநிறையத்தான்முக்கி
போந்தவாழைத்தண்டுரித்துப் பொருந்தநாராற்றான்சுற்றி
வார்த்தமாகப்புடங்களிட்டு மறுத்தும் வாழைத்தண்டுதான். 346

வாழைத்தண்டுமருந்தோடேமகிழச்சுட்டுத்தானரைத்து
மீளச்சுண்டைக்காயளவு மிகுத்தகியாழஞ்சிறுகீரை
தாளவெட்பூலாவேரிலையுந் தக்ககியாழத் தோருண்டை
ஆழவமைக்குஞ்சுரங்களெல்லா மதிரிட்டோடுமதுகேளே. 347

கிராணிமாத்திரை

கெந்தகமிரதமதிவிடையங் கிளர்ந்தகடுக்காய் முத்தமுடன்
குந்துகற்கடகசிங்கியுடன் கூறுஞ்சவர்க்காரமிலவம்பிசின்
முந்துவசம்புசமனாக முனிந்தகஞ்சாயிலைச்சாற்றால்
அந்தம் பெறவேதானரைத்து அப்பால் கரிசால்சாறொருநாள். 348

ஒருநாளரைத்துஎலுமிச்ச முகந்தசாற்றிலொருநாளாம்
வருமேதேற்றான்விரைபோல மகிழவுலர்த்தியனுபானம்
மருகும்வாய்வுதேனிலிட மங்கும்பித்தமெருமைத்தயிர்
தருமேசேட்டுமந்தனிலிடத் தங்குந்திப்பிலிமேற் பொடியே. 349

பொடியாமிந்துதிரிகடுகு புகழும்விடையநாபியபின்
விடியுங்கலமதஞ்சீரகமு மேவுமோதகம்வெண்காரம்
துடியாங்கெந்தமுமத்து துலங்குமலிங்கமாங்கொட்டை
படியாம்புளியவிரைத்தோலும் பகருங்கூகைநீறாமே. 350

நீறாஞ்சந்தனஞ் சாதிக்காய் நேரும்வசம்புகிராம்புடனே
போராங்காஞ்சி சொறிவாசி பின்னுநொச்சியிஞ்சிகஞ்சா
நேராய்சாத்திரக் குன்றியுண்டை நேர்ந்தசர்க்கரை தயிர்தேனில்
கூறாயருந்தக்கிராணிகடு கூட்டுவிசுளிகுடிபோகும் 351

போகுங்குறும்பைப்பாண்டுடனே புகழும்பாளையப்படியே
ஆகுங்கெந்தகமந்திடையே ஆறுங்கழஞ்சுசுக்காகும்
வாகுமுத்தமந்திடையே வளர்காரீயமாறாகும்
பாகுமவாரைபனிரண்டு பாளைச்சாற்றிற்கிராணிக்கிடே. 352

இடுநீயி ரதநாபிகெந்தி யியன்றகருவாய்த்தோல்வசம்பு
திடமாமிவையொன்றொருகழஞ்சு தீர்ந்தமிளகுவிருகழஞ்சு
அடமாதளைப்பழச்சாற்றரைத்து அன்பாயுளுந்துப்பிரமாணம்
படுபாவிநோய்களனைத்தினுக்கும் பறக்கவிடிக்குமிதுவடவாம்

இராமபாணம் காசத்துக்குமாத்திரை

அடவாம்வாதசுரத்துக்கு ஆகுநொச்சிச்சாற்றிலிட
அடவாம்பித்தங்கொத்தமல்லி யானசன்னிசுரத்துக்கு
அடவாந்திரிகடுகிந்துப்பு அந்தப்பொடியிலமைத்துண்ண
அடவாங்கண்ணினோய்கட்கு மாகுமெருக்கன்பழுப்புச்சீர்ற். 354

சாறாநீலகாசமுடன் சாற்றுமாவினீராகும்
தீராமெரிப்புக்காமாலை தீர்க்கமாவின் பாலாகும்
பாராயுதிரவியாதிகள் போம் பாலாஞ்சீனிசந்தனமாம்
சேராய்வாதம்வாயுவுடன் நீருமாமணக்கெண்ணையிடே. 355

இடுவாய்நசியந்தலைவலிக்கு யேகுமகத்திச்சாற்பகரும்
தொடுமேதிரிபலைதிரிகடுகு தூளாஞ்சேத்துமந்தான்வாதம்
விடுமேமூலகெந்தகத்தை விளங்குங்கழஞ்சுபொடியதனில்
கொடுநீகிராணிதான்றீரக் கொள்வாய்வாழைப்பழம்தனிலே. 356

அதனமானவிசுளிக்கு ஆகுமிளகுசூரணமாம்
விதனமானவயிற்றுநோய் விளங்கும்வென்றாளித்தயிலமதாம்
சுதனமானசீதசுரம் துடர்ந்தயிஞ்சிதேனாகும்
பதனமானமாத்திரையாம் பறக்கும்ராமபாணமிதே. 357

இதமாயிரதமாட்டியுட னேகுங்கெந்திதிரிகடுகு
பதமாந்திரிபலைவெண்காரம் பருகுந் துருசுதுத்தமுடன்
நிதமாந்தாரமோதகமு மநிகமும்சமனாம் பழச்சாற்றில்
மிதமேயொருநாள் தானரைத்துவிலங்கக் குழிக்கலதனில்வையே

வைத்தமருந்துயிதனோடே வழங்குந்தாம்பரபற்பமதை
அத்தோடிதையுஞ்சரிகொண்டு ஆனதேசிப்பழச்சாற்றில்
மற்றநாளுந்தானரைத்து மருவமூன்றுநாள்வெய்யில்
உற்றபுசத்திற்றான்வைத்து வுகந்தகடலையளவிஞ்சி. 359

இஞ்சிச்சாற்றிற்றானிடவே யியங்கும்வியாதிகூறக்கேள்
வஞ்சக்குன்மகாசமுடன் மருவும்பித்தசயகாச
மிஞ்சப்பாண்டுகாமாலை மிகுத்தகிராணிபருங்குன்மம்
அஞ்சியோடுமிதுவெல்லா மலைக்கும்வியாதிபலவாய்வும். 360

வாய்வுபற்றும் பலநோயு மருவும்வாதமெண்பதுடன்
ஆயுங்குழலாய் தீர்ந்திடுங் காணான் ஆன பத்தியம்பகரக்கேள்
நேயம்பித்தமதனுக்கு நெய்பாலாவின்பிஞ்சுடனே
காயமென்றும்பூசனிக்காய் கருதுமென்னாமிவைகூட்டே. 361

ஆனந்தவைரவன் சுரஅதிசாரத்துக்கு

கூட்டேயுப்புளிப்பதுதான் குலாவும்பித்தர்க்காகாது
வாட்டமில்லாச்சயரோகம் வாளுங்கைப்புவிடத்தீரும்
தீட்டும்பசுவினெய் கழஞ்ச திடமாமுருங்கைபுடலங்காய்
ஆட்டுவற்றல்தானாகு மானாற்பீர்க்கங்காயாகும். 362

காயாம்பகரும்வாழைக்காய் காடையுடனேமானிறைச்சி
ஓயாதுலர்த்தியுண்டுவிடு வுகந்தபிரண்டைச் சிறுபயறு
தாயாமுள்ளங்கிப்பசுவின்பால் தாக்குங்கரணைதானாகும்
பாயுஞ்சம்பாவரிசியுண்ணப் பறக்கும்வியாதிபதியை விட்டே. 363

விட்டேசாதிக்காய்லிங்கம் விளங்குங்கிராம்புசுக்குடனே
கட்டுநாபிபொன்மத்தை கதித்தவினாயுந்திப்பிலியும்
திட்டமுத்தக்காசுடனே சேரவோர்நிறைதான்கொண்டு
தொட்டுமிஞ்சிச்சாறதுதான் துலங்குமூமத்தையிலைச்சாறே. 364

இச்சாறொன்றுமும்மூன்று வியன்றநாளுந் தானரைத்து
வைச்சகுன்றிப்பிரமாணமருவுமிஞ்சிச்சாற்றிலிட
அச்சமில்லாச்சேத்துமமுமானசூலைசுரமனைத்தும்
இச்சகரையின்றன்னிலிடவியங்கும் வியாதியறுஞ்சுரமே. 365

நவக்கிரகம் – மகோதரம் – பஞ்சசயம் – பஞ்சகுன்மத்துக்கு

சுரமதிசாரஞ்சூலையுடன் சுக்கிலமாகுமிந்திரியம்
இரவிக்குரிய கிராணிக்குயிலுப்பைப்பட்டைநாற்கழஞ்சு
அரவங்குழலாய்சுக்குரண்டு ஆனவிருநாழிநீருழக்காய்
பரவுங்கியாழங்குளிகையிடப்பறக்குங்கிராணிவகைநெல்லி 366

நெல்லிமுள்ளிக்கியாழத்தில் நிகழுந்தயிருமதனாலும்
வல்லதிசாரசுரத்துக்குமருவுங்குளிகைதானிடவே
நல்லாய்க்கியாழ நாம்சொன்னோநயந்தவியாதிக்கனுபானம்
எல்லாந் தீரும் வச்சிரமாமேகுமானந்தவைரவனே. 367

வைரமான வெண்காரம் வளருநாபிரசமிளகு
கயிறாஞ்சுக்குதிப் பிலியுங்கனத்தலோகசெந்தூரம்
பயிராமூமத்தை விரையுடனே பாங்காய்ரண்டும்பங்கிட்டு
உயருங்கெந்தகமொருபங்கு ஊமத்தஞ்சாற்றிலரைக்குன்றி 368

குன்றிபோலவுண்டையது கொம்புத்தேனிற்கவளமிட
நன்றாஞ்சுவாசகாசமுடன் நயந்தமந்தாரஞ் சேட்டுமமும்
என்றேயறிய பயித்தியமுமியன்றவாதமதுவெல்லாம்
சென்றதிசாரகிராணியுடன் தீர்க்குங்குளிகை நவக்கிரகம். 369

கிரகதாம்பரமெட்டுடனே கெந்திரண்டுரசமொன்று
துரகமனோசிலை மூன்றாகுஞ் சொல்லரிதார நாலாகும்
விரகநாபிரண்டுடனே மேவியதனைநிறைகொண்டு
உரகங்கையான்சாறாகு மோங்கு நொச்சிச்சாறதனால் 370

நாலுநாளாய்த்தானரைக்கநன்றாய்க்குன்றிப்பிரமாணம்
மேலாந்திரிகடுபொடியுடனே விளங்குந் தேனிற்றானிடவே
பாலாமகோதரம்பஞ்சசயம்பருத்தகவிசைபஞ்சகுன்மம்
சேலாம்பறதிவினைமாறுஞ்சிதறுஞ்சூதராட்சதகுளிகை. 371

சகலரோகத்துக்கு துத்தமாத்திரை

குளிகையிரதங்கெந்தகமுங்கூட்டுயிருவிவெண்காரம்
அளவாநாபியரிதாரமானதிரிபலைதிரிகடுகு
புளவாந்துத்தம்பெருங்காயம் போன்றும்விடையஞ்சாதிக்காய்
தளமாங்கிராம்பு யெட்டிவிரைதாக்குங்காரநதச்சாரம். 372

சாரந்துருசுவாளமுடன் சமனாமிதனைச்சரிகொண்டு
சோரவிடித்துத்தூளாக்கித் துலங்கச்சீலைவடிகொண்டு
தீரக்கற்றாழஞ்சாறொருநாள் திகைக்ககையானாள் பத்து
மீரப்பழுத்துமிளகளவு மேவியதனை நிழலுலர்த்தே. 373

எழுவகைக்குளிகை

உலர்த்துங்குளிகையோமப்பொடி யுடனாஞ் சீதக்கழிச்சலுக்கு
குலர்த்துநாபிபொசித்தாக்கால்கொள்ளேயாமணக்கெண்ணைதனில்
நலத்துச்சர்ப்பம்வேப்பெண்ணை நின்றவாய்வுக்கிஞ்சிரசம்
பெலத்தசொரியுஞ்சிரங்குக்குப் பின்னும் பசுவினெய்யேழே. 374

ஏழுநாட்கொள்ளச்சொறிபறங்கி யீளைகையாந்தகரைச்சாற்
வாழும்பிரமியமெட்டுக்கும் வளருங்குறிஞ்சானிலைச்சாற்றில்
தாழும்பித்தஞ்சீனிதனில் தாக்கப்போகுமதுவல்லால்
மீளுமேகமனைத்தினுக்கும் வெண்ணெயாவினெய்தயிரே. 375

தயிராம்போடுபசுவின்மோர் தாங்காப்பித்தம்வெல்லமுடன்
அயிராமேழுநாட்கொள்ள வாகாதிருமலகீழ்நெல்லி
முயிராஞ்சீனம்பெருங்காய முற்றும் வசுவாசிவசம்புடனே
துயிராம்பாண்டுகாக்கணவேர் துலங்கக்குடிக்கச்சுகமாமே. 376

சுகமாமூத்திரக்கிரிச்சிக்குந் துலங்குங்கோமய மொருமோதம்
தகமாமருந்துயரையாண்டு சயமுங்குன்மந்தான்றீரும்
அகமாபித்தந்தான் கழியவாமணக்கெண்ணையதிற்றீரும்
பகமாமாதாக்கினிக்ககுப்பகருங்கடுக்காயிளநீரே. 377

நீராஞ்சருவவிஷம்போக நிச்சயமானினெய்யாகும்
பாராய்கண்டசொரிசிறங்கு பகருமாவின்பாலாகும்
தீராப்பித்தகற்பூரஞ் சேருங்காலசுவாசத்துக்கு
கூராய்திப்பிலிப் பொடியாகுங் கொள்ளுமூஷணஞ் சண்பகச்சாற்

சாந்தவைசூரிவருவது முன்தாக்குங்குளிகைதேனிலிட
வாந்தம்பலபலவியாதிகட்கு வையே வெற்றிலைச்சாற்தனில்
போந்ததலையின்வலிதனக்குப் புகட்டு மணித்தக்காளிச்சாற்
சோந்தசூலைதான் போகத்தேடுமாவினெய்யாமே. 379

ஆமேகுன்மமிந்துப்பு ஆகாவாய்வுவாதசன்னி
போமேயூமத்திலைச்சாறு பொல்லாவிஷம் போநறுந்தாழி
தாமேபிரமியுமாவின்பால் தாக்குங்கண்ணோயதுவாகும்
காமேமூலவியாதிபோங் கரணைபிரண்டைபொடியிடவே. 380

இடவேசரக்கினிடாக்கினிபோ லேகுஞ்சோற்றிற்றானிடவே
தொடுமேவாய்வுமுதிரனிலை துலங்கும்வாய்வுபலமனைத்தும்
விடுமேநொச்சிச்சாற்றிலிட விளங்குமந்திரவாய்வதுவாம்
கடுகுந்தீபனமாமோதங் கழறுமுள்ளங்கிவாய்நாற்றம் 381

நாற்றமிருமலீளைபோம் நன்றாச்சாஸ்திரபேதியினில்
கூற்றனுதிரந்தான்சாயற் கொல்லுஞ்சன்னிபசுவினெய்
ஏற்றமானவாய்வுக்கு மேகுஞ்சயத்தின்வாய்வுக்கு
நீற்றஞ்சிறுகீரைச்சாற்றருந்த நீயனுபானமானதுகேள். 382

ஆனவாவின்பால்நெய்யா மாகாப்புளிப்புகைப்புவிடு
போனகாசசுவாசமுடன் பொருந்துங்கரந்தைச்சாறாகும்
ஏனம்பாங்கிகாற்பிடிப்பு எடுக்குஞ்சூலைபெரும்பாடு
தானாமாவின்சாணாகஞ் சந்தனநீருந்தானாகும். 383

ஆகுஞ்சருவவியாதிகட்கு வானபசுவினெய்யதினும்
போகுங்கொத்தமல்லியுடன் பொருந்துமாங்காய்கூட்டியுண்ணு
வேகஞ்சண்பகப்பட்டைச்சாற் விளங்கும்ரத்தப்பிரமியம்போம்
தாகம்பார்வைகுறைந்திருந்தால் தாக்குமெள்ளுத்தோல்போக்கி

போக்குங்காதுசீய்வடிந்தால் புகட்டுசிறுநீர்குளிகையுடன்
தாக்குகண்ணின்படலத்துக்குத் தாங்குகதலிச்சாற்றிலங்கு
ஏக்குவைசூரிதான்வந்தா லேகுந்திரிபலைச்சாற்றிலிட
ஆக்குங்குளிகையனைத்தினுக்கு மடவாமெழுவாகுளிகையிதே

முருக்கிலைகோடாசுளிமாத்திரை

இதுவாமலிங்கம்வெண்கார மேவுங்கெந்திநாபியுடன்
அதுவேதிரிபலைதிரிகடுகு ஆகப்பதின்கழஞ்சடவாக
பொதுவாந்தாரம் பதின் கழஞ்சு புகழும்வாளம்பதின்கழஞ்சு
மெதுவாமருந்துபன்னிரண்டு விளங்குங்கழஞ்சுமுப்பதுவே. 386

முப்பதுகழஞ்சுமுடவாக முருக்கில்ல பூவரசினிலைச்சாற்றில்
தப்பாதோரொருநாட்சாமந் தானேஐந்து நாளரைத்து
மிப்பார்புகழுமிளகவாம் மீறுங்குளிகைநிழலுலர்த்தி
ஒப்பாம்வியாதிக்கனுபான முரைப்போமிஞ்சிச்சாற்றிலிடே. 387

இஞ்சிச்சாற்றிற் சீதசுர மியன்றதாபசுரம்பசும்பால்
மிஞ்சும் வெள்ளுள்ளித்தயிலமதில் மேவும் பழஞ்சுரமதுக்காகும்
வஞ்சசயத்துக்காய்ச்சலுக்கு மகிழுஞ்சுக்குவிடை நீராம்
அஞ்சாவிஷமாஞ்சுரத்துக்கு ஆகுமுலைப்பால் சர்க்கரையே 388

சர்க்கரைப்பசும்பால் காமாலை தானேபாம்புகடித்தாக்கால்
மிக்கதேசிப்பழச்சாற்றில் விரையவுரைத்துக்கலிக்கமிடு
தக்கதிரிபுரச்சாறரைத்து தானேதேட்கொட்டுவாயிலிடு
ஒக்குமாம்பட்டைச்சாற்றிலிட வொடுக்குங்கிராணியது கொள்ளே

கொள்ளுத்தண்ணீர் தானிடவே கூசாதோடும்வாதமெல்லா
மெள்ளபத்தியம்பாற்சோறு மிளகுநீருந்தானாகும்
உள்ளவாதக்காய்ச்சலுக்கு வுகந்தகஞ்சிதானாகும்
கொள்ளுங்கிராணிதயிருடனே கொண்டேசோறும்வெந்நீராம் 390

வென்னீர்நீக்கிச்சாதிக்காய் விளங்கநறுக்கித்தான்வெதுப்பி
தின்னீர்பொடியைத்தேன்கலந்து தியக்கும் வயிற்றில் நோயதுமே
பின்னீர்வெள்ளைக்கழிச்சலுக்குப்பெருத்தகளர்ச்சிப் பொடியுடனே
மன்னீர்வெண்ணைதான்கலந்து மதித்துத்தின்னமாறிடுமே

மாறுங்கறுத்தசீரகத்தை வாகாய்க்கியாழந்தேன்கூட்டி
கூறாயிரத்தக்கிராணிக்கு கொடுக்கத்தீருமதுவல்லால்
ஏறாந்தாபசுரத்துக்கு யிடுகீழ்நெல்லிச்சாறதனில்
மாறுநாலாமுறைக்காய்ச்சல்வாங்குங்கையாந்தகரைச்சாற் 392

சாறாங்காரைச்சாறதனில் தாக்கவசீரணந்தான்போகும்
பாராய்த்தயிர்வடிதண்ணீரிற் பருத்தவயிற்றுக்கழிச்சல்போம்
தீராசெவ்வட்டைகடிதனக்குத் தேசிப்பழச்சாற்மேற்பூசி
நேராங்கற்றாழஞ்சாறதனில் நெகிழப்பூசிப்பாள் முழுங்கு 393

முழுங்கமூத்திரக்கிறிச்சிமஞ்சள் முனிந்தசாற்றில் வெண்காரம்
பிளங்கப்பொரித்துக்குளிகையுடன் பேணியுண்ணவதுதீரும்
களங்கமானவிருமலறுங் காட்டுத் துளசிச்சாற்றிலிட
விளங்கும்பித்தமதுதனக்கு மீறுமூமத்தைச்சாற்நசியம். 394

நசியம்பண்ணவெறிபித்தம் நன்றாமூமத்தையிலைச்சாற்றில்
இசையவெள்ளாட்டுப்பாலதனி லிடுமோர்குளிகை தலைதனக்கு
அசையாம் வெள்ளாட்டுப்பாலரைத்து அதுவுந்தலை யிறப்பிடவே
நிசமாம்பிரமிகியாழத்தில் நிச்சயபித்தந்தீர்ந்திடுமே. 395

தீர்ந்திடும் வேப்பிலைச்சாறதனால் தெளியுங்குட்டமனைத்தினுக்கும்
ஆர்ந்திடுமெருக்கின் பாலதனா லானசீலைதானூட்டி
வார்ந்தகுளிகைதானரைத்து மடித்துத்திரியுந்தானுருட்டி
போந்தநெருப்பிற்றான்கொளுத்திப் புகையை நாசிதனிலேற்றே

வேறு

ஏற்றியதோர் புகையதனை நாசிக்கேற்ற
எழுந்தோடுந்தலை நோய்வு யெங்கேயென்று
கோற்றிடுமே கோவையிலைச் சாற்றினாலே
கூறுபடக்கஞ்சனமாய் நோய்கடீரும்
தேற்றிய தோர்சலகல நோய்கள்
தீரும் பாருதிறமான சிலவிஷமும் தீரும்தீரும்
போற்றியதோர் மருந்திட்டுப் போகவுண்ணு
புகழாக வின்னமொரு மருந்துபுகலக்கேளே. 397

வேறு

கேளுந்திப்பிலிதேனுடனே கேட்கும் விக்கல்சத்திபல
வாளுந்தேள்கள் கொட்டினாக்கால் மதித்துயிஞ்சிச்சாற்றிலிடு
தாழுமகோதரஞ்சிறுநீரில் தாக்குமணித்தக்காளிச்சாற்
வீழும்பூரநட்டுவக்காலி யதுவுமிஞ்சிச்சாற்நசியம். 398

நசையாமகோதரமணத்தக்காளி நாட்டும்வயிற்றிற்பூசவிடும்
வசையாங்கண்ணோய்தேசிப்பழ மனிதர் முலைப்பாலஞ்சனமாம்
மசையாதிருமல்தான்றீரு மானகொள்ளுந்திரிபலையும்
சைகொன்றில்லாசூரணத்தில் பேணிக்குளிரை பொடித்துண்ணே

உண்ணும்வாய்வுமணலிச்சா றுரைத்துக்குளிகைதானுண்ண
திண்ணம்வாய்வுவுடன்றீருந் தெளியாக்குன்மம்பலதுக்கம்
நண்ணுநொச்சிச்சாற்றிலிடு நாட்டுங்கண்ணீர் சூட்டுக்கு
எண்ணுமெள்ளிலைச்சாற்றிலிட வேகஞ்சூடுதான்கரையும். 400

கரைக்குமமுக்குறாச்சூரணத்திற் கலந்துகுளிகைவெந்நீரும்
உரைத்துக்குடிக்கச்சந்து நோயுடனேவாதம்பலதீரும்
திரைக்கும்வயிற்றுவாய்வுக்குத் தீரும்வீழியிலைச்சாற்றில்
குறித்துச் சொன்னோம்பலதீருங் குணமாமின்னந்திரிபலையே.401

திரிபலைசூரணம் வெந்நீரிற் றிறக்கவைந்துவுண்டையிட
குறியாமுப்பிசந்தான்போகுங் கொண்டேதாதுவிர்த்திக்கும்
நிறையாந்தழுதாழைவெண்குன்றி நிச்சயஞ்சாற்றிற்றானிடவே
குறிபாஞ்சயரோகந்தனக்குக் கொண்டேபுசிக்கத்தீர்ந்திடுமே. 402

தீர்ந்திடுமோமம்வெந்நீருந் தெளியுங்காசுக்கட்டியுடன்
பாந்தமாகக்கலக்கியுண்ணப் பறக்குஞ்சயகாசநோயெல்லாம்
வார்ந்திடுவயிற்றினோய்கட்கு மகிழுமாவின்றயிரிலிட
ஏந்துங்கிராணிக்காவின்மோர் இயன்றவிரோசனம்விளக்
கெண்ணே. 403

சுரக்குளிகை

எண்ணும்பசுவினெய்யிலிட விருக்காதோடும் வாயு வெல்லாம்
நண்ணும்பிரமியம்வெள்ளாட்டுப்பால் நாட்டமுடம்புயெரிவுக்கு
உண்ணும்பச்சைக்கழுநீரி லுகந்துகுடிக்கத்தான்றீரும்
திண்ணம்நரைதிரைமாறலுக்குத் தீரும்ஆட்டுப்பாலாகும். 404

ஆகுங்கற்சுண்ணந்தெளிப்பள மலையும்பல்லுந்தானிறுக்கும்
போகுஞ்சன்னியூமத்திலைச்சாற் புகட்டுதீப்பட்ட புண்ணுக்கு
ஏகும்வெல்லத் துடன்கொள்ள யிதமாம்வல்லாரைச்சாறதனால்
வாகுபெறவேயனுபானம் மருவிக்குடிக்கத்தீர்ந்திடுமே. 405

தீருஞ்சூதரோகணியுஞ் சிலையோரிடையுமொன்றாக
வாருந்தான்றிதிரிகடுகு வகைக்குரண்டுயிடையாகும்
சேரும்வாளஞ்சுத்தியிடை சேர்த்துமூன்றுகழஞ்சாக
பாரும்பாகலிலைச்சாற்றாற் பருத்திவிரை போற்றானுருட்டே. 406

உருட்டுங்குளிகைசீதசுர மோமமிஞ்சிச்சாற்றிலிட
திருட்டுப்பித்தந்தீருதற்குத் தெளியாந்தேசிப்பழச்சாற்றில்
விரட்டுவாதந்தான்றீரவெண் ணொச்சிச்சாற்றிலிடவாகும்
பிரட்டுகுன்மமாவின்பால் பேசாதோடும்வாய்வெல்லாம் 407

வெள்ளெருக்குகஸ்தூரியுண்டை

எல்லாந்தீரும்லிங்கமுட னேகுநாபிவெண்காரம்
நல்லதிப்பிலியெவச்சார நாட்டுமிளகுகாந்தம்கெந்தி
சொல்லுநிமிளைதற்சமனாய்த் துலங்கவிஞ்சிச்சாறரைத்து
மெல்லக்குன்றிப்பிரமாணம் விளங்குமிஞ்சிமறுளறுமே. 408

அறுமேகஸ்தூரிபணவிடையைந்து ஆகுமரோசினைபண்மரையும்
பெறுமேகிராம்பு மரைப்பணமும் பின்னுங்குங்குமமப்படியே

இறுகஞ்சாதிப்பத்திரியு மிதுவும்பணவிடையரையாகும்
குறுகுங்காட்டுமிருகரத்தங் குறையாதந்தவெடைசேரே. 409

வேறு

சேருநீவெள்ளறுகு படிச்சாற்கூட்டி தெளிவாக
மேனியின்சாற் தின்னாப் பாளை
வாருநீபொடுதலையுங் கரிசலாங்கண்ணி
வகையான கரந்தைகோட்டான்சாறுங்கூட்டி
பேரான வேழுவகைச்சாறுங் கூட்டி
பிசகாம லரைத்திடுவா யேழுநாளும்
கூறாகத்தானரைத்துக் கடுகுபோலக்
குவியவே நிழலுலர்த்தி வைத்துக்கொள்ளே. 410

தோஷாமுர்தம்வாய்வு சன்னிவிஷத்துக்கு

கொள்ளுவாய் குளிகைதனைப் பதனம்பண்ணிக்
கூறறிந்து கொடுத்திடுவாய் கூற்றன்போல
தள்ளாதசன்னி வகையனைத்தினுக்கும்
தாங்காதசுரங்குளிர்காய்ச்சலெல்லாம்
மெள்ளவேதிரிதோஷபிணதோஷம்
போகவிளங்கவேயனைத்தினுக்கும் விருப்பமாக
உள்ளபடிதேனிலேகுளிகையொன்று
வுரைத்து நீ கொடுத்திடவொழிந்து போமே. 411

ஒளிவான மனோசிலை சலாசத்து
வுதவுகின்ற குங்கிலியகர்ப்பூரங் கூட்டி
தெளிவானயிருவிகெந்திதாளந்தாரந்
தெகட்டும்படிகா ரமிந்து துருசுகூட்டி
வளியாகவகையொன்றுவிராகனொன்று
வாளஞ்சுபலமொன்று வகையாய்க்கூட்டி
களியாக வரைத்திடுவாய் சாமமட்டுங்
கறுத்தநிறக்கம்பிளிபோற்காணும் பாரே. 412

பார்த்து நீவெல்லமொருபலமும்போடு
பாங்கானகொட்டவச்சிக்கரியும்பலமாகும்
சேர்த்திடுவாய் தேங்காய்ப்பால்விட்டு ஆட்டி
சிமிழ்மாட்டுக்கொம்பதனி லடைத்துக்கொண்டு
கூத்தறிந்து வெற்றிலையில் பயறதரகக்
கொடுத்திடவெண்பதுவாதம் வாய்வுதீரும்

வீற்றிருந்தசன்னிபதின் மூன்றுந்தீரும்
விஷமெல்லாம்பறந்துவிடுமேன்மைகாணே. 413

இரசலோகசெந்தூரம்விஷபாகத்துக்கு

காணவேவெள்ளையாஞ் சீலையூட்டிக்
கயிறாக்கித்திரியுருட்டிப் புகையுங்காட்டி
தோணவே பலவிஷமுஞ் சில் விஷங்களெல்லாஞ்
சுறுக்கானபுகைகாண வோடிப்போகும்
பூணவே காமாலை பாண்டுதீரும்
புகழானசூதகவாய்வுபின்னிட்டோடும்
வேணதொருவியாதியெல்லாம் விட்டேபோகும்
விதமானதினமுறையைவிரைந்து செய்யே. 414

செய்யவேயரப்பொடிபன்னீர்கழஞ்சு
செயமான பலமொன்று யிரதங்கூட்டி
பையவே கெந்திதான் கழஞ்சியேழு
பருத்ததொரு வெண்காரம்நாலுகழஞ்சு
துய்யவே குமரிச்சாற்நாலுசாமந்
துலங்கவேயரைத்திடுவாய் சாந்துபோல
ஐயமுடன் கம்பிளிபோல் நிறமதாகு
மதையெடுத்து அடைதட்டி சட்டிவையே. 415

வேறு

வைக்குஞ்சட்டியதற்குள்ளே மருவிக்குமரிச்சோற்றையிட்டு
மெய்க்கவதன்மேலடையைவைத்துமேவிப்பின்னுஞ் சோறு வைத்து
தக்கசட்டியுடனே கொண்டு தானேசீலைமண்செய்து
ஒக்கவடுப்பினாலுநா ளுரைக்க வெரிக்கச் செந்தூரமதே. 416

வேறு

செந்தூரம்பணவிடையுந் தேனிற்கொண்டால் தீருநோய்சொல்லுகிறோஞ் செப்பக்கேளு
வந்ததொருவிஷபாக சுரங்கடீரு மகத்தானமேல்வீக்கம் வாடிப்போகும்
எந்தெந்த பயித்தியமுஞ் சோகைதீரும்மிதமானகாமாலையிடறிப் போகும்
உந்தியுள்ளமகோதரமும்பாண்டுந் தீகமுருந்திடவேயின்ன வெள்ளை யுள்ளிகேளே. 417

வேறு

வெள்ளையுள்ளிதயிலமதில் மிகுந்தசெந்தூரம் பணவிடைகொள்
உள்ள அகுவைபீலிகையு முகந்தநீருமுவைநீராமை

மெள்ளசத்திகுன்மமுடன் மிகுத்தகுன்மமெரிகுன்மங்
கொள்ளும்வியாதிதான்றீருங் குறித்துயிதனைக்கொள்வீரே. 418

லோகசெந்தூரம்

ஈரவெங்காயம்வெள்ளிரிக்கா யிசைந்ததண்ணீர்முக்கழஞ்சு
பாராய்செந்தூரம்பணவிடைகொள் பரிந்தசதையுநீரடைப்பு
மாரத்தீருங்கல்லடைப்பன் மதுக்குமிந்தவனுபானம்
தீரச்சொன்னோஞ்சம்போகஞ் செய்யுங்குணங்களிதுபகரே. 419

பகராயரப்பொடிகழஞ்சுபத்துபன்னுமேதினப்பொடிபத்து
மிகராய்க்காந்தம்பத்துடனே விளங்குமிரதமிரண்டரையாம்
தகருங்கெந்தகந்தானைந்து தகர்த்துயிவைகள் பொடிசெய்து
புகருமரைவாசிச்சட்டியிட்டுப் பொருந்துஞ்சட்டி மேல்மூடே. 420

மூடியஞ்சுசீலைமண்ணு முடுகியெட்டுச்சாமமெரி
நீடுங்காமாலை பெருவயிறு நிகழ்ந்த சோகைசலக்கழிச்சல்
வாடுமீளை யிருமலுக்கு மகிழ்ந்து தேனிற் பணவிடைகொள்
நாடும்வியா தியிவையெல்லாம் நடுங்கியோடு நலமறியே. 421

அரிதாரச்செந்தூரம்

அரி தாரசுத்தி முக்கழஞ்சு ஆன கொன்றை யிலைமேலே
நெரிதான யெண்ணை தனைத்தடவி நோந்தவரி தாரமிலை
யில்வைத்து
குரிதாஞ்சட்டி தன்னில் வைத்துக் கொண்டோர் சீலைமண் செய்து
பரிவாய்பெறத் தான்வைத்துப்பின் பண்பாய்த்தீ யெரியோர்விறகே

ஒருநாழிகைதானெரித்தபின்பு வுகந்தகெந்தநாற்றமதாய்
வருமேயப்பதானெடுத்து மகிழவாற்றிப்பொடியாக்கி
தருமேசங்கம் வேர்ப்பட்டை தானேபொடியாயிழைத்தூத
திருவேரனையாய்ச்சாற்றினிலேதிருந்தவெற்றிலைச் சாற்றில்
வையே 423

வைத்தவெற்றிலைச்சாறுடனே மருவுஞ்செந்தூரம்பணவிடை
கொள்

இத்தனையீளையிருமலுட னியன்றமந்தாரகாசமுடன்
உத்தக்காய்ச்சுவாசமுட னுகந்ததாழைவிப்புருதி
இத்தனைவகையுந்தீருமென்று இயலாயகத்தியர்தாமுரைத்தார்
424

உரைத்துளமாந்தைகோழைபல வுகந்தவிப்புருதிரண்டாகு
மரைத்தயீளைமூசைக்கு மனதுயிரைப்புசயமைந்தே
இரைத்தசேத்துமமேகமொன்றா யிதுவும்பக்கமந்தாரம்
கரைக்கும்பொறாமைதிரட்சியுடன் காணுஞ்சலமும்ரத்தசயம். 425

சயமாம்பத்துவகைதனக்குந் தானேபிரமியமுள்ளதெல்லாம்
நயமேசெய்யுமருந்துகொண்டால் நாரணன்பாதம்மிகப்போற்றி
பயமேயுற்றுமிகத்திரிவார் பாதஞ்சுமக்குமாருதிதான்
அயமேபாரில்மிகவுலகுக் கனுமானந்தமருந்திதுவே. 426

இதுவாம்பத்தியம்பெரியவிரா லேகுஞ்சுறாவுநெய்த்தொலியு
மெதுவாமிறைச்சிமாங்கிஷமு மீறுமுடும்புகாடை முதல்
அதுவாங்கோழிமுட்டையுட னாகுமுருங்கைத் தூதுவளை
பொதுவாமுள்ளிகொடுக்கையுடன் புகருமுள்ளான்
கூட்டியின்னம் 427

இன்னமொன்று சொல்லக்கே ளிருளேதோன்றுமுதலாக
சின்னபேய்கள் பூதம்பல் சேர்ந்தநெருப்புமிகமாயம்
நன்மைபலவாய்க்கனாக்காணும் நாடாதுலகில்வேறு கொள்ளு
மன்னவிழியாய்க்குளமாந்தைக்கதிலே குணங்களாயிடுமே. 428

இடுமேயிரத்தமூன்றுசீலை யேகமாண்டுகெந்திரண்டு
தொடுமேதாளகமரிதாரந் துலங்கும் லிங்கம் வெள்ளீயம்
விட வேயிவையொன்றிரு கழஞ்சு வேண்டுமேகம் பதின்கழஞ்சு
நடுவாங்குமரிச்சாறரைத்து நன்றாய்க்கலத்தில் நடுவில்லையே. 429

குன்மத்துக்குச்சுயமாக்கினி

வைத்தகலத்திற்பற்பமதைமகிழவொருகிண்ணிதான் மூட்டி
இத்தைச் சூரியபுடம் போட விதவாம் பற்பமிருகுன்றி
உத்தேதேனிற்றான்கொள்ள வோடும் பஞ்சகுலமெல்லாம்
அத்தரருளால்வியாசமுனி யருளும்படியேதான்செய்யே. 430

செய்யுங்கெந்தகமரிதாரஞ் சீறுமிரதமனோசிலையும்
உய்யுங்காந்தமிவைசமனா யுகந்துவரைத்துயிருபலமாய்
அய்யமாவாரையரைப்பலமு மாகுமொசுக்கைசாறரைத்து
பைய்யரண்டுசாமமரை பரிந்தேயுருக்குகாரீயம். 431

காரீயமுருக்கு முகந்தனிலே கதித்தபொடியுமதிற் கூட்டி
பாராய்கிராம்புசாதிக்காய் பரிந்ததிப்பிலிவசுவாசி
நேரேசமனாயொருகூறு நிகமுஞ் செந்தூரமிருகூறும்
வாராய்முலையாள் கூட்டிவைத்த மருந்துசீனிபணவெடையே. 432

காரீயச்செந்தூரம்

விடையாங்காரீயம்பலம்நாலு மிகுந்தசட்டிதனிலிட்டுத்
திடமாநாயுருவியோர் கட்டு தீர்க்கநறுக்கிச் சட்டிக்குள்
பிடமாய்வறுக்கக்கரண்டியினாற் பின்னுமதனைநறுக்கியிட்டு
அடவாய்ச்சட்டியடிபோனால் மைப்பாய் சட்டியிப்படியே. 433

இப்படியேழுபரிகாரமேழுநட்டுநாயுருவி
தப்பாநறுக்கித்தானெரிக்கச்சட்டியேழுமிகவுண்டாம்
ஒப்பாப்பருத்திப்பூச்சிக்கப்பாமுகந்தநிறமேயானக்கால்
தப்பில்லாதவியாதிகட்குத்தானேயனுபானமாவாரையே 434

ஆவாரைசமூலந்தானுலர்த்தி அப்பாலிடித்துவடிகொண்டு
மாவாரை கழிஞ்சிப் பொடியுடனே மருவுஞ் செந்தூரம் பண விடையாம்
மேவித் தேனிலொன்பது நாள் மிகுத்துக் கொடுக்கத் தான்றீரும்
நாவாலுரைத்தாரகத்தியமுனி நன்றாயிம்முறைசெய்திடவே. 435

இடவேநெல்லித்தான்றியுட னெரிக்குங்கிராம்புசாதிக்காய்
திடமாம்வகைக்குமுக்கழஞ்சு சேரவிடித்துப் பொடிசெய்து
விடவேகழஞ்சுப் பொடியுடனே மேவுஞ்செந்தூரம் பண விடைகொள்
அடவாமந்தேனிற்கொண்டிடவே அகலுஞ்செந்தூரம் பண விடையே. 436

இரசபற்பம்

பணமாநாழிக்கொள்ளதனைப் பாங்காயரைத்துக்குகைபிடித்துக்
குணமாமிரதமிருபலமுங்குகைக்குள் விட்டுத்துளசிச்சாற்மணமாம்
வெற்றிலைச்சாற் கூட்டிமகிழச் சமனாய்க்குகைக்குள் விட்டு
தணலாஞ்சட்டியதுக்குள்ளே தாங்காச்சிறுகீரை வேகவையே. 437

வைத்துச்சட்டியதனுள்ளெமருவுஞ்செங்கல்லுப்புடனே
ஒத்தச்சமனாய்த்தானிடித்து வொடுங்கச்சட்டிதனிலிட்டு
வெத்தகுகையையதனுள்வைத்து மேலைச்சட்டிமணஞ்செய்து
சித்தமுடனேமண்ணேழுதிறமாஞ் சீலைசுத்தியிடே. 438

சுத்துஞ்சட்டியடுப் பேற்றித் துலங்குநாலுசாமமட்டு
மெத்தவனலைத்தானெரிக்க வெளுத்து நன்றாயாறுமட்டும்
இத்தையெடுத்துமறுபடியுமிந்தப்படியே குகைபண்ணி
வைத்தசட்டிவிட்டு அப்பால் மறுத்துஞ் சட்டிவைத்தெரியே. 439

எரித்தபற்பம்ரெண்டாநாளெடுக்கச்சுத்தப்பற்பமதாம்
மரிக்குமண்டைவியாதிகட்குமறலிதனக்கும்பயம் பிறக்கும்
விரிக்குஞ் சடையோன்மலர்ப்பாதம் வேண்டிவினையை நிவர்த்தி செய்யே
அரிக்கு மருகன்கரிமுகவன்னந்தசயனம் போற்றியதே 440

சகலகழிச்சலுக்குலேகியம்

போற்றுஞ்சாதிக்காய்பின்னும் புகழுங்குறாசானிசுத்திகஞ்சா
ஏற்றுங்கிராம்புலவங்கப்பட்டையே றுங்குளிகை நீராகும்
மாற்றுங்கருவேம்புசமனாகவறுத்து இடித்து நிரைகொண்டு
ஆற்றும்வெல்லம் அந்திடைக்கு ஆவாரப்போடியுஞ் சேர்த்திடியே 441
இடிக்கும்லேகியந்தனை யெடுத்துயிதவாய்ச் சுண்டைக்காயளவு
மடிக்கவுருட்டியிருநேரமருவிக்கொள்ளவல்லீராய்
நொடிக்குமுன்னேசலக்கழிச்சல் நுறுங்கவடித்துப்பின்னுங்கேள்
வடிக்குங்கிறாணிவகையேழுமாறிப்போகுங்கண்டீரே. 442

வேறு

கண்டீரேசர்க்கரைப்புல் கொண்டுவந்து
கடுகவேநீர்ச்சோற்றுத்தண்ணீர்விட்டு
பண்டுள்ளவுப்புவுள்ளி கூடச்சேர்த்து
பதறாமலிடித்துநன்றாய் வடிநீகொண்டு
மிண்டியதோர் நெஞ்சுகட்டு வயிற்றுவுப்பல்
மீறுகின்றதலைகனப்பு சேதமெல்லாம்
அண்டாமலோடிவிடுங் குழந்தைநோய்க
ளாச்சரிய மிம்மருந்து அறிந்து பண்ணே. 443

அரிதாரசெந்தூரம்

பண்ணவேயரிதாரம் பொடியாய்ச் செய்து
பண்புடனே பூசனிக்காய்ச்சாறு தன்னில்
நிண்ணயமாய்வையவித்துப் பின்னுமப்பா
நேரானகற்சுண்ணத்தண்ணீர்வார்த்து
உண்ணவேசரிசமனாய் நல்லெண்ணைகூட்டி
யுடன்வித்துப்பின்னு நல்லெண்ணைதன்னில்
கண்ணவேயவித்திடுவாமுக்காலப்பா
கசடறுமேய்ரிதாரஞ் சுத்தியாச்சே. 444

ஆச்சப்பா மூக்கரைச்சா றெண்ணைதன்னை
அரைத்திரண்டடையாகத் தட்டியப்பால்
வாச்சந்தசட்டிக்கு ளடையைவைத்து
மாசற்றவரிதாரமேலேவைத்து
தாட்சியில்லா மறுஅடையை மேலேவைத்து
தளம்பாமற் மேற்சட்டி கொண்டுமூடி
பாச்சிடுவாய் சீலைமண் தானேழு செய்து
பதறாமலடுப் மேற்றியனலை மூட்டே 444

மூட்டியேயெரித்திடுவாய் சாமமெட்டு
முகிழ்விரியாமண் சீலைநன்றாய்ச்செய்து
நீட்டியதோர்பற்பத்தையெடுத்துக் கொண்டு
நினைவாகவனுபானந்தன்னில்வைத்து
தாட்டிகமாய்த்தேனிலிடு மண்டைசூலை
தவறிவிடும்விஷங்களெல்லாந்தளர்ந்து போகும்
வாட்டிவிடுங்கண் ணோய்வுமிகுந்து கண்டால்
மாசற்ற பழச்சாற்றில் மருவித்தாக்கே. 446

வேறு

தாக்கும்வாதமதுதனக்குத்தாங்காப்பன வெட்டில்பணவிடை
கொள்
ஆக்கும்பிரமேகமதுகண்டாலதற்குப்பூசனிபழச்சாறு
போக்கில்லாதநீரடைப்பன் பொருந்தும் வெள்ளரிக்காய்தண்ணீர்
மாய்க்குஞ்சூதகவாய்வுக்கு வாருமாவின் பால்குணமாம். 447

மலமுஞ்சலமுங்கட்டிவிட்டால் வறுத்துக்கோழிமுட்டையோடு
எலியின் புழுக்கைகோழிக்காரமியன்றகோழிக்கருவுடனே
நலமாயிவை யெல்லாம் பொடிசெய்து நன்றாய்வெள்ளரிக்காய்
வெதுப்பி
அலமாந்தண்ணீர்தானிடவேயானகல்லுமகன்றிடுமே. 448

தாளகபற்பம்

அகண்டசட்டியதற்குள்ளேயமுக்குச்சாறணைதானிடித்து
நெகண்டரிதாரமேல்வைத்து நிரையாய்ச்சாரணைமேலிட்டு
துகண்டசட்டிமேல்மூடி துலங்கவேழுமண்செய்து
புகண்டவடுப்பிற்றானேற்றிப்புகலாநாலுசாமமெரி. 449

சாமம்நாலுதானெரித்து தாங்கரெடுத்து ஆறவைத்து
வேமாமிலையையெடுத்தெறிந்து மிக்கமருந்தைப்பொடிசெய்து
காமம்பொடியைப்பரணிவைத்துக்வறாநோய்கட்கனுபானம்
ஆமாம்சொல்லவகைகேளீ ராகும்வெருகங்கிழங்காமே. 450

வெருகங்கிழங்கும்விளாம் பொருக்கும்மிகுத்ததயிலமுண்டுபண்ணி
உருகுந்தயிலம்பணவிடையுமோங்குந்தாரம்பணவிடையும்
இருக்காம்பொழுது தானுண்ண வியன்றகுட்டந்தான்போகும்
அருக்கும்புண்ணுக்கடுப்புக்கு ஆகுந்தேனுமனுபானம். 451

பானமுப்புப்புளிதவிர்த்துப் பால்நெய்வாழைப்பழமாகும்
ஆனகருப்புக்கட்டியுமாமதற்குச்சூத்திரம் வெள்ளாட்டு
தானாமுப்புக்கண்டமுமாந்தாங்கும் வெந்நீர்தானாகும்
கானமயிலேயரிதாரங்கருப்புக் கனுபானமதுவென்றே. 452

இரசலோகபற்பம்

ஒன்றேரசமுமொருபலமாமுகந்தவரப் பொடிபலமொன்றரையாம்
நன்றேகெந்தகம்பலமொன்று நல்லவெண்காரமரைப்பலமும்
இன்றேகாந்தமுக்கழஞ்சுயேகுமேனிச் சாறரைத்து
அன்றேசட்டிதனிலிட்டு அப்பாற்சட்டிமேல்மூடே. 453

முடிச்சட்டிச்சந்துவாய் முசித்துயேழுமண்சீலை
நீடியிரண்டுசாமமதுநிகண்டாயெரித்துப்பொடிசெய்து
கூடியவாந்திவெடிசூலை கொள்ளீர் பணவிடைமும் மூன்றாய்
தேடித்தேனில்வெல்லத்தில் திறமாய்த்தீரும்வியாதியைப்பார். 454

பாண்டுகாமாலைவிஷபாகம்பண்ணிமகோதரஞ்சத்திகுன்மம்
மீண்டுவலிகுன்மமுளைமூலமிகுத்தவாய்வு திரட்டியுடன்
தாண்டவர்பாதமலர் போற்றித்தானே தீரும் வறுமைகள்போல்
மாண்டுபோமேவியாதியெல்லாமகிழ்ந்து கொள்ளீர்பத்தியமாம்

பத்தியமாவின்பாலாகும் பருத்தமுருங்கைக்காயிலையு
முத்தசுத்திவெள்ளாடுமுகிந்தவுப்புக்கண்டமதா
மெத்தரைக்கீரைதர்னாகுமேவுமிருபதுநாள் மருந்தே
அத்தமருந்துவகத்தியனா ரடவாய்ச் சொன்னார்சுத்தமுடன் 456

வெள்ளீயபற்பம்

சுத்தவெள்ளீயமிருபலமுந்துலங்கு கெந்தகம்ரசமுடனே
வைத்தரண்டுமைங்கழஞ்சு மருவுந்தேசிப்பழச்சாற்றில்
இத்தழமென்னத்தானரைத்து யிலங்குந்தகட்டிற்றான்பூசி
அத்தையொருநாள் சட்டிவைத்து ஆதித்தன் வெய்யிற்புடமிடவே

புடமிட்டரசம்பட்டைதானே பெரியசட்டிக்குள்ளேவைத்து
திடமாந்தகடுமதற்குள்வைத்து திருந்தவோடுதான்மூடி
அடவாஞ்சீலைமண்ணேழு ஆனகுழிதான்வெட்டவகை
இடமேயாழமுள் வளவாயியன்ற குழியிடுயெருமுட்டையே. 458

உமுரிகெந்திசூரணம்

எருமுட்டைமேலேசட்டிவைத்து
யிதின்மேலொருமுழமுட்டை கொட்டி
திருவேரணையாய்ந்திருபட
வேத்திருந்த நெருப்பைத்தானிட்டு
மெருவேயெடுத்துக் குழிக்கல்லில்
மிகவே யரைத்துப் பொடிபண்ணி
பொருவேலனையாயனுமானம்
பொருந்தவகை தான்சிறுகையைக்கேள். 459

கேளாய்சிறுமுதிர்வேருடனே கிளர்ந்ததிப்பிலியேலங்கெந்தி
சூளக்கழஞ்சிசூரணமாஞ்சுகித்தபற்பமஞ்சாடி
ஆளும்பச்சைக்கழுநீரில தனைக்கொள்ள கரத்தநீர்
வாளுமுதிரநீரிழிவுவாங்கம் பிரமியமாய்ந்துபோம். 460

போகுமேவிளாம்பிசினும் நெருஞ்சிவேரும்
பூனைக்காலிவிரையுடனே சிறுபூளைவேரும்
வாகுடனே சூரணந்தான் கழஞ்சிதன்னில்
மஞ்சாடிப்பற்பமதை மருவிக்கொள்ள
ஆகுமேபுதயாதியுமுண்டு வந்தா
லப்பனேதாதுவிர்த்தி மிகுதியுண்டாம்
தாகமாயிம்மருந்து ஆவின் பாலுந்தாக்குவாய்
மேகமெல்லாந் தவறிப்போமே. 461

தவறியதோர்நீரிழிவு நாவற்பட்டை
தாங்காதவாவாரைக் சூரணங்கழஞ்சு
பவமானபற்பமது தேனிற்கொள்ளப்
பணவெடையாம்வங்கபற்பம்பரிந்து கொள்ளு
நவமில்லாமேகமெல்லா நடுங்கிப்போகும்
நாட்டிலுள்ள வயிற்றுநோய் நாடாதோடும்
அவமில்லைசூரணமும்பற்பங்கொள்ளு
அகன்றிடுநோய்களெல்லாமதிரிட்டோடும். 462

வெள்வங்கபற்பம்

வேறு

ஓடுமேவெள்ளித்தகடுதட்டி வுற்றவரசும்புளிபொருக்கும்
நீடுஞ்சட்டியடுப்பில்வைத்து நினைவாய்த்தகடும்பொருக்குத்தூள்
வாடாத்ததனையுள்ளிட்டு வறுக்கக்கறனிடவதனிலிட்டு
கூடும்பற்பந்தனை யெடுத்துக் கொடுக்கவனுபானந்திரிகடுகே. 463

திரிகடுகுடனேசாதிக்காய் தேடும்லவங்கம்வசுவாசி
அரியசமனாய்க்கொண்டிடவே ஆனசூரணங்கழஞ்சுதனில்
நெறியாம்பற்பம்பணவிடைகொள் நிச்சயஞ்சீனியிருகழஞ்சு
குறியாமிருபதுநீரிழிவு கூசாதோடுங்குணங்கேளீர். 464

வங்கசெந்தூரம்

குணமாம்வங்கப்பொடியுடனே கூட்டுப் பூலாநிலாவாகை
மணமாங்குமரிவேர்ச்சாற்றில் மகிழவரைப்பாயிலையும் வங்கம்
நிணமாமடை போற்றட்டியதைநிண்டாய்முழுப்புடந்தான்போட்டு
பணம்போலதனைப்பார்த்தெடுக்கப்பர்ப்பங்காணுங்கண்டீரே.465

கண்டதிரிபலைகியாழத்திற் கடிகிக்குடிக்கப்பிரமியமும்
உண்டோமற்றவாதமுடனுகலுங்கோஷ்டந்தன்னுடனே
பண்டேயிஞ்சிச்சாறுடனே பறக்குந்தேனிற்பரிந்துதின்ன
அண்டாவிட மூத்திரக்கிறிச்சி யானவிவையெல்லாம்வங்கம். 466

வங்கஞ்செந்தூரந்தான் பண்ண மகிழவெள்ளீயம் பலம்ரண்டு
இங்கிதமானவாட்டுப்பா விலங்குமெண்ணெய்காடியுடன்
அங்கந்திரிபலைகியாழமுடனாவின் பாலுமதுகளிலே
தங்குமின்பம்வெள்ளீயந் தணலைக்காய்ச்சித்தோய்த்திடவே.467

தோய்த்தேழும் மூன்றுதான்சிலவுஞ் சொல்லும் வெள்ளீயங்காய்ச்சித்தோய்
மாய்க்கப்புளியஞ்சிறாயிடித்துமருவுஞ்சட்டியில்தான்வைத்து
நீக்கும்வெள்ளீயமதிலிட்டு நிம்பக்கொம்பால் மத்தித்து
வாய்க்குந் தணலாய்த்தானெரித்து வர்ணங்குங்குமநிறமஞ்சள் 468

மஞ்சட்பொடியுமொருபலமு மருவுமோமமொருபலமு
மிஞ்சவெள்ளீய மிருபலமு மேவியதனைத்தான்வறுக்க
மொஞ்சுவங்கச்செந்தூர முசியாமல்நான்கு பணவிடைகொள்
அஞ்சியோடும்பீணிகளெல்லாமனுபானஞ்சொல்வேன்பிரம்புகேள்

பிறமேகமென்னுமிருபதுக்கும் பேறாங்குமரிமணப்பாகாம்
மறமேயுதிரம்போற்கழிந்தால் மாறும்பசுவின்பாலிற்கொள்
ளறமேவெகுகழிச்சலுக்கு அனலாமெருமைமோர்தன்னில்
நிறமேயாவாரங்கொழுந்தரைத்து நிச்சயத்தின்னப்பிரமியம்போ

பிரமியமைந்துவகைதனக்குப் பேசுமாவின்வெண்ணெயிற்கொள்
நிறமியவாய்வுகிரந்திக்கு நினைவாயேலமரிசியிற்கொள்
மறநோய்சரீரந்தான் பெருக்கமறவாதேனிற்கொண்டிடவே
விறவேசலந்தான் மிகக்கழிந்தால் மிகுத்தகியாழமதிமதுரம். 471

மதுரங்கைகால்வயிறெரிந்தால் மாறுங்கற்பூரந்தன்னிலிட
அதிருஞ்சன்னிபலவுக்கு மானதெளக்குத் தேங்காயும்வரு
மெதுவாம்வயிற்றுக்கட்டுபோம் விளங்குமம்மான்பச்சரிசி
சுதமாஞ்சாறு ஆழாக்கு துலங்கவுண்பீர்சுகமிதுவே. 472

சுகமாமூத்திரமுதிரமென்ற துலங்குசர்க்கரையதனிற்கொள்
தகமேமூக்கிலிரத்தம் வந்தால் தாக்குமமுக்குறாச்சாற்றிலிட
அகமேகைகாலெரிப்புக்கு ஆகும்பூசனிச்சாற்றிலிட
வகையாநோய் கட்கனுபானமருவுமிஞ்சிச்சர்க்கரைதேன். 473

தேனேகாயும்வறண்டாக்கால் தேடுமெண்ணை வெண்ணையிற்கொள்
கானம்வாழைப்பழமாகுங் கனத்தபிரமியமிருபதுக்கும்
மீனங்கைகால்சயித்தியமா மிருவுந்தேனிற் கொண்டிடவே
பானகல்லுதானடைத்தாற் பகரக்கோழிமுட்டையதே. 474

முட்டையோடுமெலிப்புழுக்கைமுசியாவெண்காரத்துடன் பொரித்து
மட்டடாப்பொடியிற்றான் கொள்ளீர்மருவும் வெள்ளரிக் காய்வெதுப்பி
முட்டச்சுரையின்றன்னீரு முசிய வெள்ளாட்டுப் பாலின்நீர்
இட்டுப்பாரீர்கல்லடைப்புபனிதுவோமின்னஞ்சதையடைப்பேன்

கருவங்கசெந்தூரம்

றதையேயடைப்பன்கிறிச்சிபலதயிரேயிந்தவனுபானம்
விதமாங்கழிச்சலதுதனக்கு மேவும்பலபலவியாதிகட்கும்
பதமாஞ்செந்தூரத்துடனே பலவகையுள்ளசெந்தூரம்
மதிநேருடையீரனுபானம் வகைநீயறிந்து செய்வீரே. 476

செய்வீர்கருத்தயீய்க்கட்டி திறமாமிரண்டுபலம்வாங்கி
அய்வீர்மஞ்சளோமமுட னதுவும்வகைக்குப்பலமிரண்டு
எய்வீர்சட்டிதனில்வறுக்க யேறக்குங்குமநிறமாகு
மைவீர்விழியேசெந்தூரம் வகையாய்க்கொள்ளமகிமையிதே. 477

இதுவாஞ்சாத்தியமிகக்கழிந்தா லிதற்குச்சர்க்கரைகற்கண்டு
பொதுவாங்கிராணிவகைக்கழிச்சல்புகட்டு மாவினெய்தேனா
மதுவாந்தேங்கினீரருந்த மறக்குஞ்சலத்துப் பிரமியமே
மெதுவாயுரைத்தாரகத்தியனார் விளம்பக்கேளீர்வாதம்போம். 478

வாதமாகில்வேர்க்கொம்பு மருவுங்கியாழமதிற்கொள்ள
சீதமுடனே பித்தகுன்மஞ் சேருமெரிகுன்மவலிகுன்மம்
போதமுள்ளசத்திகுன்மப் பொருந்துந்திப்பிலிதெனிலிட
வேதமிகுச்சிச்சாறுடனே விளங்கும்வியாதிக்கனுபானம். 479

அனுபானமில்லாப் பானைதனி லாகுங்கொள்ளையதனிலிட்டு
இனிப்பாய்படிரண்டுகல்லுப்பு யேகமொன்றாச்சமனாக
கனிவாய்க்கமலம் தீயெரிப்பாய் கடிகையாறுநாழியதாய்
மனுப்பானைநிறையவிட்டு மண்ணாமேழுசீலைசெய்யே. 480

குன்மத்துக்குச்சதுரக்கள்ளி அவியல் சூரணம்

சீலைமண்செய்துகுருவெட்டி சேர்ந்தவுமியும் ஆட்டெருவும்
கோலமானயெருமுட்டை கொண்டேமூன்றுநாளெரித்து
சாலவெடித்துப்பொடித்து நன்றாய்த் தாங்காச்சீலைவடிகொண்டு
காலைவெந்நீர் வெருகடிகொள் கதித்துவோடும்பஞ்சகுன்மம். 481

பஞ்சகுன்மம் பறந்திடவே பாகம் வெந்நீர் வெருகடிகொள்
மிஞ்சாதெரியும் யிற்தன்னில் மேவும்பசுவின் பாலிலுண்ண
அஞ்சாதோடும்பாண்டுவுட னானதிரிகடுகு தேனிலிட
தஞ்சமென்றேயிதனையுண்ண சகலநோயின் சத்தியும்போம். 482

சத்திசாரணைசூரணம்

சத்திசாரணைகிழங்குவெட்டித் தறித்துக்குறுணிபொடியாக்கி
மெத்தவாவின்பாலவித்து மேவுநிழலிற் சுக்கதுபோல்
வைத்தேயிடித்துப்பொடிசெய்து மருவும்வெருகடிரண்டுதான்
தித்ததேனிற்குழைத்து நன்றாய்த்தீரும்வியாதிதெகிட்டக்
கொள்ளே 483

கொள்ளநாற்பதுநாளதுதான் கோலக்காயங்குறித்து நோய்தான்
உள்ளவியாதிக்கிதுவாகு முகந்தவுப்புப்புளியிடவே

மெள்ளவாவினெய்யாகு மிகுந்தமுருங்கை திருக்கைசுறா
தள்ளாதிதனைக்கொண்டாக்கால் தாங்குநோய்கண்மாண்டிடுமே

மண்டூரம்

மண்டூரத்தைக்கொண்டுவந்து மகிழவிடித்துப் பொடியாக்கி
கொண்டவெற்றிலைநொச்சியிலை கூறுஞ்சாற்றிலிம்மூன்று
மிண்டக்காய்ச்சியூறவிட்டு மிகுத்தவாட்டுக்கோமியத்தில்
ரண்டுமூன்றுநாளூறவிட்டு நயந்தேயரைகற்றாழஞ்சாற் 485

கற்றாழஞ்சாற்றிலொரு சாமங்கடுகவரைத்துமடக்கல்வைத்து
அத்தவாலிலையதன் மேலேயரைத்தமருந்தையதனிலிட்டு
உற்றவோடுதான்மூடி யொடுங்கச்சீலைமண்செய்து
அத்தராவில்புடமாக அறுபதுபுடமுமப்படியே. 486

அப்பாலெடுத்துப்பாணிவைத்து ஆகுமிரண்டு பணவிடைதான்
மெய்ப்பாந்தேனிற்கொண்டிடவே விளங்குமிருமல்மகோதரமும்
ஒப்பாம்பாண்டுகாமாலை வுடம்புசோகைவீக்கமுடன்
எய்ப்பாமிரைப்புபெருவயிறு யேகங்கைகாலசதியும் போம். 487

போமேபத்தியமுருங்கைக்காயிலை புகழுங்கீரைத்தண்டுடனேற்
ஆமேபசுவினெய்பாலா மாகுமாடுகுருவிகொக்கு
நாமேபத்தியமிகவிருந்தால் நன்றாய்த்தீரும்நோய்களெல்லாம்
தாமேசொன்னாரகத்தியமுனி தவிரயின்னமீருள்ளி 488

தாரபற்பம்

ஈரவெங்காயமறுநாழி யேறபிண்டைதான்றுவைத்து
மீரவிருநாழிச்சாறதுதான்மிகுந்தபசரிச்சாற்சரியாய்
வாரேமுலையாயிச்சாறு மருவுங்குறுணிநானாழி
தீரவிடித்துத்தான்பிழிந்து செலுத்துவகைகேளச்சாறே. 489

அச்சாறதனால்நாலுபல மரிதாரத்தைத்தானரைத்து
வச்சசாறுவற்றவற்ற மகிழ்ந்து குழிக்கல்தானரைக்க
அக்கமில்லாச்சட்டிதனி லடைபோல்தட்டியதனில்வைத்து
இச்சையுடனே குழிக்கல்லை யிந்தச்சாற்றால் கழுவியிடே. 490

கழுவுஞ்சாறுமடைமேலே கலந்துசட்டிக்குழம்பாக்கி
வழுவில்லாதமறுசட்டி மகிழ்ந்துமூடிச்சீலைசெய்து
அழகாயேழுமண்செய்து அப்பால்புரைக்குமண்ணப்பி
நழுவிப்புகைச்சார்போகாமல் நாற்பதுநாழிகை யெரித்தேடு. 491

எடுத்துக்கரண்டிதனைக்காய்ச்சி யிதிலேபற்பம்பொடிபோட
மடுத்துயிருந்தால்நல்லபற்ப மறுகப்புகைந்தால்பற்பமில்லை
தொடுத்தசட்டிமண்செய்து துலங்கத்திரும்பவடுப்பேற்றி
கடுதமாகச்சாமமொன்றுகனலாய்த்திரும்பவெரியிடவே. 492

எரித்துவதனையெடுத்துவைத்து யிதவாய்ப்பற்பம்பதங்கண்டு
தரித்தயனுபானந்திரிகடுகுதந்தப்பொடிதான் பணவிடையு
முறித்தபற்பமதிற்பாதி முழுங்கலிருமல்தான்போகும்
எரித்தசயரோகந்தான் போகுங்கனத்துக்கொள்ளும்பிறநீர்போம்

பிறநீர்க்கோவை கேனுடனே பெருகும்பற்பம்பணவிடைகொள்
ளருமேநோய்தேசிப்பழச்சாறரும்பாந்தா மரைக்கதுபோகும்
வருமேயூதுகாமாலைமருவுங்கையாந்தகரயிலை
தீருமேகுட்டம் வெண்குட்டந்தெறிக்கும் நிலப்பனைக்கிழங்காமே

ஆகுங்குட்டஞ்சீரகத்திலானசந்நிபலவாதம்
போகுமக்கினிமாந்தமுடன் பொருமல்தீருந்தேனிலிடத்
தாகமுடம்புசோகையெல்லாந் தவறிப்போகுங்கையாஞ்சாற்
ஏகவீக்கம்பொருமலுக்கு யிடுநீகடுக்காய்கையாஞ்சாற் 495

சாறாந்தெற்பைபுற்சாறு தளம்பக்காரசாரமுடன்
நேரேகொண்டால்கருங்குட்டம் நெகிழ்ந்து போகுமின்னம்நீ
பாருங்குமரகண்டனுக்குப் பண்ணும்திப்பிலிதேனிற்கொள்
வேருஞ்சிவந்தசெங்குட்டம் விட்டேபோகுங்குமரிச்சாற் 496

குமரனுடம்புமாப்போலே கொண்டேயுதிர்ந்துதானிருந்தால்
தமரமக்ராகாரமதைத் தகர்ந்தேபொடியிற்பறங்கொள்
அமிர்தமானதிமிர்வாத மடிக்கும்நிலப்பனைக்கிழங்கதனால்
எமர்க்குங்காயசுவாசத்துக்கு யேற்குந்திரிபலைச்சூரணமே. 497

சூரணமுடனே அரிதாரந் துலங்குபற்பம்தான்கொண்டால்
காரணமானபுளிபுகையுங் கத்திரிவெள்ளரிபூசனிக்காய்
வாரணங்கோழிபன்றியுடன் வாங்குஞ்சேமத்தண்டு மொச்சை
ஆரணங்கவளுமாகாது அப்பாதயிர்மோரகத்தியதே. 498

சாரணைச்சூரணம் வாய்வுக்கு வேறு

அகத்தியமாஞ்சாரனையின் கிழங்கு கொண்டு
அதையரைத்து யிருகழஞ்சு நாழிப்பாலில்
சுகத்துடனே நீர்ப்பாலுஞ்கண்டைக்காய்ச்சி
துயிலதனில் வடிகொண்டு கொள்ளும்போது

செகத்திலுற்ற வாயுவெல்லா தெறித்துப்போகும்
தேகத்தின் குணமெல்லாந் தெளிந்து போகும்
நிகழ்த்திடவே பழம் புளியுமிஞ்சிசுண்டி
நினைவாக கழற்கறியுமுனைந்து கொள்ளே. 499

அரையாப்புக்கு பூசுமருந்து

கொள்ளவே யரையாப்புக் கட்டிபோக
கொடி கழஞ்சியி ரதமென்றுயீயம்ரண்டு
தள்ளுரசகர்ப் பூரமொன்று கூட்டித்
தாங்காத அண்டத்தோடதுவு நாலாம்
விள்ளாம் வெண் கருவாலாட்டிப்
பின்னு மிளகனவாய் வெள்ள்ளயது கூடச்சேர்த்து
எள்ளளவுயிடையில்லாக் கட்டிமேலே
யிதவாகப் பூசிடவே யிகழ்ந்து போமே 500

இகழ்ந்துதான் கெர்ப்பம் வீழின்னங்கேரு
யிதமான சூடன்ரண்டுகாயமூன்று
புகழ்ந்திடவே விராதனெடை நன்றாய்ச்
சேர்த்துபூடுமொரு பலமுரித்து கூடப்போட்டு
தகந்திட மாவிலிங்கை துளிர் பிடிதானொன்று
தருகாமலிவ்வளவுமிலை யோடாட்டி
உகந்திடவே பின்னைக்காயவு மூன்று
வுண்டையது தானருந்தவுந்தியாமே. 501

குன்மத்துக்கு
வேறு

முந்தின் சாரணை மூன்றுபலமுருகு வெல்லஞ்சரிகொண்டு
உத்தக்குழிக் கல்லிற்றானரைத்து வுண்டுமாவினெய்யிற் கொள்
மெத்தவுருட்டு நெல்லிக்காய் மேவும் பிரமாணந்தான் கொண்டு
குத்தவில்லாமற்றான் கொள்ளக் குணமாம் வியாதி குணங்கேளே.

குன்மந்தீருஞ்சுறோணிதம் போம்கூறும் வியாதி பலதீரும்
........ன்ம மில்லை கிருமியுடன் வகுத்துக் கிராணியறுவகையும்
......ன்னி மலங்குங் காமாலை சொல்லும் பாண்டு சயரோகம்
............மயாகும் வாதமெல்லாம்புகலுஞ்சாரனைப் பர்ப்பங்கெந்தி

கெந்தகபிற்மபச்சைக்கிரந்த சூலைக்கு

கெந்தக சுத்திதான் கேளீர் கிளர்ந்த பசுவின்பால் மோரா
........லர்ந்தகரடிவெள்ளாடு மருவும் நெய்தான் பூசனிக்காய்

விந்தை மாதளைசம்புரச மிகுத்த கருப்பஞ்சாற் தன்னில்
சந்தேகமில்லாமலிவ்வகையில் தானே சுத்தி பண்ணுவதே 504

பன்னுமந்தாதாமரையும் பகருஞ்சாலை நீர்முள்ளியும்
.... லர்ந்தகரடி வெள்ளாடு மருவும் நெய்தான் பூசனிக்காய்
விந்தைமாதளைசம்புரச மிகுத்தகருப்பஞ்சாற் தன்னில்
சத்தேகமில்லாம லிவ்வகையில் தானேசுத்தி பண்ணுவதே. 505

எடுத்தே பார்க்கச் சுண்ணாம்பா யேகவிரியுங் கெந்தகமு
மடித்துவாசனை தானுமில்லை வாசம் பணவிடை
தேனெய்ச்சர்க்கரை
தொடுத்த மருந்துபாகமதாய்த் துலங்கும் வயிற்றுப்பிணி போ
...... வெடித்தவியாதிதான் போகவேறேமறுக்குங் கெந்தகமே 506

கெந்தகத்தின் குணங்கேளாய் கிளர்ந்தவலியுந்தான் போகும்
வந்தகுன்ம குட்டமுடன் மருவுங்கிருமிப் புழுவுடனே
சொந்தமான சுவாசகாசந் துலங்கு சூலைவாய்வு சுரம்
........தையான வீரியமுமிகவுந்தாது வுண்டாமே 507

கிரந்திசூலைக்கு நாகசெந்தூரம் மேகத்துக்கு

உண்டாந்தண்டு வியாதியுமாமோடு மூலவியாதிகள்போம்
கண்டதம்பனமுண்டாகக் காந்திசரீரம் புளகிக்கும்
மண்டலத்தோர்கள் தானறிய மன்மதனாவார் கண்டீரே
பண்டே யுள்ளவியாதியெல்லாம் பற்பங்கண்டு நெகிழ்ந்திடுமே

நெகிழ்ந்த நெல்லிக்கெந்தகத்தை நேரேநாலுபலம்வாங்கி
உகந்து வெங்காயச் சாறுவிட்டு வொருமூன்று நாளுந்தானரைக்க
புகழ்ந்தமுள்ளங்கிச்சாறுவிட்டுப் பின்னு மூன்று நாளரைக்க
பகர்ந்தபற்பந்தேனிற் கொள் தாறுகிரந்தி சூலையும் போம் 509

போகுநாகம்பலமஞ்சு பொருந்துமிலுப்பையெண்ணைதனை
வாகயிருப்புக்கரண்டிதனில் வளமாய்த்தடவிநாகமதை
ஏகமுருகிவெள்ளாட்டு யினியபாலிவீரண்டுபத்து
ஆகமுடனே தான்சாய்க்க அதுவுஞ்சுத்தியானதுபின். 510

பின்தான்குண்டுசட்டிதனில் பிலத்தநாகமதைவைத்து
வன்தான்சுக்குபலமொன்று மருவுமோமம்மரைப் பலமே
மின்பமஞ்சளொருபலமு மேகவெடியுப்பு நாலுபலம்
முன்போலிடித்துப்பொடிசெய்து மோதநாகமேற்றூவே. 511

தூவித்தூவித்தான்வறுக்கத் துலக்கமாக வெந்துவரில்
மேவிச்சிவந்தநாயுருவி மெத்தநறுக்கிப் போட்டுவறு
ஆவியந்தச்சட்டியிட்டு அப்பால் மறுசட்டியிட்டுவறு
கூவிச்செந்தூரமாதளம் பூ குறித்தநிறமாய்வந்தபின்பு 512

வந்தசெந்தூரம் பணவிடைதான் வறுத்துப் பொடிசெய் திரிகடு
செந்தேனதனில்வெருகடியுந் திரட்டிக் கொள்ளத்தீருநோய்
எந்தயீளையிருமலுட னேகுமந்தாரகாய்ச்சுவாசம்
சொந்தசிலேற்பனமரிகுரலுந் துலங்குநெஞ்சுநோயும்போம். 513

போகுங்கெர்ப்பவூஷ்ணரோகம் பொருந்துஞ்சுக்கில பிரமியமும்
ஆகுமிந்திரியகட்டுக்கு ஆனகல்லுசதையடைப்பன்
ஏகுங்குன்மஞ்சோகையுட னெரியுமவுத்திரி முகவெரிவுந்
தாகங்கைகாலெரிவுடனே சகலந்தாய்கடீர்ந்துவிடும் 514

விடுமேயாவாரம்வேர்ப்பொடியும் விளங்கும் பணவிடை
செந்தூரம்
தொடுமேயாவாரைத்தயிலமதில் துணிந்தேகொள்ளச்சலக்கழிச்சல்
படுமேயிருபதுவகையுளதும் பரிந்தேபோகுஞ் செந்தூரம்
அடவாம்பத்தியமுப்புளியானகோழிபன்றித்தள்ளுதள்ளே. 515

வெள்ளீயக்கட்டிசெந்தூரம்
வேறு

தள்ளா மல்வெள்ளீயக்கட்டிவாங்கி
தகடாகப் புளியிலைபோல் கத்திரித்து
மெள்ளவேகடப்பங்கோட்டை மஞ்சளோமம்
விதமாகச்சமன் கொண்டு தூளதாக்கி
கொள்ளவேகோணிப்பட்டைமேலேயேறும்
குறும்பொடியைப் பரப்பியதன் மேலேயீய
வள்ளலெனுந்தகட தனைப்பரப்பி
நன்றாய்மடித்து நீ சுருட்டிடுவாய் திரணைபோலே 516

திரணைதனைப்புடம் போடப்பற்பமாகுந்
திறமாகவதையெடுத்துப் பரணிவைத்து
வருமேகம்பிரமிய முந்நீரவேண்டி
மகத்தானசெந்தூரந் தேனிற்கொள்ள
அரும்பாவி கிரந்தியுட சூலைபோகும்
அக்கமுநீர்க்கடுப் புடனே தீரும்
பிரளையமா மூத்திரக்கிரிச்சி தீரும்
பின்னைவெகுரோகமெல்லாம் பெலக்காதோடும். 517

கெர்ப்பஸ்திரீகளுக்குப்பற்குறி

பெலமாகமுதல்மாதகெர்ப்பமாகி
பெண்வயிறுநொந்திட்டால் மருந்துகேளு
சிலைநுதலேசந்தனமு மிலாமிச்சோடு
சேர்த்து நீசமன் பாலில் கரைத்துக்கொள்ள
விளிகாமல்மறுதிங்கள் வயிறுநொந்தால்
வெள்ளிலோத்திரநெய்தற்கிழங்குமண்சிட்டி
துளையவே நீரரைத்துப் பாலிற்கொள்ளச்
சுகமான மூன்றான திங்கள் கேளு. 518

திங்கள்தனில்வயிறுநொந்து சூலை
தோன்றில் சேருநீகச்சோலன் சீரகந்தா
பொங்கமுடன் சந்தனமு மப்பாலிற்கொள்ளு
புகழுவே யின்னதென்று புகலக்கேளு
மங்க முடனாலாந் தான்றிங்கள் சூலை
வயிர் நோகில் நெரிஞ்சிவேர் வாளக் கட்டை
அங்குள்ளதாமரையு நெய்தல்வேரும்
ஆவின்பால் சந்தனமு மனத்துவுண்னே. 519

உண்ணுமைந்தாந்திங்களிலே சூலைதோன்றி
லுரைக்கின்ற சந்தனமுநெய்தல்வேரும்
திண்ணமாமாவின்பால் கரைத்துக்கொள்ளு
தீருமாறாந் திங்களிலே நொந்துசூலை
எண்ணாமற் கண்டாக் கோல்சீந்திற்றண்டு
யினிப்பானமுந்திரிகை நெய்தல்வேரும்
கண்ணானகுங்குமப்பூசந்தனமுநீரில்
கரைத்தரைத்துப் பாலிற்கலந்து கொள்ளே. 520

கலந்தேழாந்திங்களிலே சூலைதோன்றில்
காட்டிலுள்ள விளங்காய்ச்சாற்நெய்தல்வேரும்
பலங்காணசர்க்கரையும் பாலிற்கொள்ளப்
பதறாமலெட்டாந் திங்கள் தன்னில்
மலங்காமற் காரையிலைசந்தனமிலாமிச்சு
மறுத்துதிப்பிலி யரைத்துப் பாலிற்கொள்ளு
துலங்கிடவேயொன்பதாந்திங்கடன்னில்
சூலையிற்பாலையிடித்துத்தின்னத்தீரும். 521

தீருமடா திங்கள்சேர்ந்து பிள்ளைபெற்றால்
சீறியழும்பாலனுக்கு மருந்துகேளு
கூறுடனே சிறுதேக்குந்திப்பிலியுங்கூட்டி
குறுகவேபொடிசெய்து தேனாவினெய்யில்
வேறுபட முலையில் பிள்ளையுண்ணும்போது
விக்கல்போம் பொருமலுடன் வீக்கம் போகும்
பாருசிறுதிப்பிலியும் ரோகணியுக்கூட்டி
பருவமுனெங் குழைத்து முலையிற்பூசே. 522

பூசுவாய்பிள்ளையுடவயிறுவீங்கில்
பொடிமதுரங் காடியரை பூசத்தீரும்
கூசிபோலக்குடித்தா லெரித்திட்டாலுங்
கொட்டாவிவிட்டாலுங்கூறக்கேளு
பாசமுள்ளவெள்ளுளியும் அசமோதகமும்
பாகமாய்க்கியாழம் வைத்துப் பருகத்தீரும்
தோஷங்கள்கண்டுபிள்ளைமுலையுண்ணாதாகில்
துலங்கவேயதிமதுரம் பொடியதாக்கே. 523

பொடியாகப்பாலரைத்து முலைக்கண்பூசி
பிள்ளைமுலையுண்ணவே போகு நோய்கள்
துடியாகக் குழந்தைவயிற் நொந்தழுதால்
துலங்குபுன்னை சிறுதேக்குக் கோஷ்டம் கொண்டு
வடித்ததயிர் தண்ணீரி லரைத்துக்
காய்ச்சி மைந்தனே வயிற்தடவ நோவிதீரும்
அடிவயிறுநொந்துவலங்கட்டுமாகி
லதிமதுரம் வேப்பந்துளிர் சர்க்கரையே. 524

அரைத்து நெய்யிற் புகட்டிடுவாய் மலமிறங்கும்
அதுவெல்லாநீரிறங்க வெலிப்புழுக்கை
உரைத்திடுவாய் வெள்ளரிக்காய் விரையுங்
கூட்டி உகந்திடவேயரைத்து அடிவயிற்றிற்பூச
நிரைத்திடவேநீ ரிறங்கும் பாலுமுண்ணும்
நினைவாக மஞ்சள்துத்தி வேருங்கொண்டு
பரையாமல்மங்கள நாள்குளிசங்கட்டு
பறக்குமடாதோஷமுடன் மதலைநோவு. 525

தோஷங்களுக்கு கட்டமூலிகை–வேறு

மதலையின் மேனிவாட்டி வயிற்றினிற் பாலுந்தங்கா
தலையினிற்குழியுமுண்டாய் சத்தியும் நீராய்வீழ்ந்து
நுலைநுரைசலத்தையன்றி நோக்கியே விழியுங்கெட்டு
குதலைவாய்க்கருகித்தோன்றுங் குளித்தவளெடுத்தாக்காவே. 526

தாயார்முலையில்வாயைவைத்து
சற்றேயுண்ணுந் திகைத்திருக்கும்
தேய்வாய் தேய்க்கு மெய்வெளிறுஞ்
சிறுக வெதுப்பும் வயிறொழுகும்
சாய்வாயிறங்கு மெழுந்திருக்குஞ்
சற்றேகண்டால் விரோசிக்கும்
பேய்நோய்கொண்டவள்குளித்த
பெண்ணோய் கொண்ட தோஷமதே 527

சோயுமுடம்பு செயலாலுஞ் சொல்லுமுலைப்பாலருவருக்க
காயுமுடம்புகண்குழியுங் கண்டால்தேரையறிவீரே
தேயுமுடையான்றன்னாணை தீரத்தோஷமென்றுசெப்பு
ஆயும்வேதத்தளவுகண்டா லகத்தியமுனியுமருளியதே. 528

வேறு

அருளியதோரின்னமொரு கிரிகை சொல்வே
னப்பனேபால னுமோர்மெலிந்துவாடி
சீருடனே மாந்தவகை தோஷமெல்லாந்
தெரிபடவேபோவதற்குச் சேதிகேளு
வேரான தூதுவளைகுப்பைமேனி
விளங்குகின்ற குருவிச்சுதும்பையோடு
நீருடனே யிவ்வேரு வொன்றுக் கொன்று
நிச்சயமாய்க் குளிசம்நீ நிகளக்கட்டே. 529

குழந்தைகட்குநெய்

கட்டுவாய்திருகுகள்ளிவடக்குவேரு
காப்புகட்டி ஞாயிறுநாள் பிடிங்கிவந்து
சூட்டுவாய்குளிசமுடனீர்சொரிந்து
சுகமாகக்கட்டிடவே நோய்கடீரு
மட்டாகமூன்றுநாள்நீர் சொரிந்து
மதலைக்குக் களித்திடவேமயக்கமில்லை
தொட்டிருந்த தோஷமெல்லாம் துடித்தேயோடுஞ்
சொன்னபடிகுளிசம் நீர்சொரிந்திடீரே. 530

சொரிந்தாவினெய்யுரியில் நல்லெண்ணைபாதி
சுகமானநன்னாரி தண்ணீர் மிட்டான்
கரிந்தபொன்னாங்காணியுமோர் பலமொன்றாகக்
கழஞ்சியே லரிசிசீரகமுங்கூட்டி
பொருந்தவே வாவின்பால்வார்த்தரைத்துப்
புகழுடுப்பிலேற்றியேகாய்ச்சிக்கொண்டு
திருந்தவேகுளிதோஷம் போவதற்குச்
சிறுகரண்டி புகட்டிடவே தெளியுங்கேளே. 531

லிங்கக்குளிகைகுழம்பு

கேளுநீகெருடனுடகூட்டுக்குள்ளே
கிடந்ததொருமுட்டைத்தோடெடுத்துவந்து
ஆளவேசுட்டதனைச்சாம் பலாக்கி
யப்பனே குழந்தைகட்குத்திலர்தம்போடு
வாள்கின்றமுட்கூட்டைச் சுட்டுச்
சாம்பல்மைந்தனுக்கு நெற்றிடமயக்கந்தீரும்
தாழுமேகுளிதோஷம்பட்சிதோஷந்
தான்பறக்குந்தப்பாது மீண்டு செய்யே 532

செய்யவேயின்ன மொருகுளிகைகேளு
திறமாகச் சாதிலிங்கம் பலந்தானொன்று
பொய்யல்லாவெலிகாரம் பலந்தானொன்று
புகழ்சுத்திவாளமதுபலந்தான்ரண்டு
நய்யவேகுழிக்கல்லில்பழச்சாற்விட்டு
நாற்சாமமரைத்திட்டுக்குண்டுபோல
எய்யாமலுருட்டியேநிழலுலர்த்தி
யெந்தெந்தவியாதிகட்குமிடுநீசுக்கு. 533

எடுத்திடவேயின்னமொருசேதிகேளு
யியலாகமேல்மருந்து நிரையாய்வாக்கி
கொடுத்திடவே குழிக்கல்லி லரைப்புகேளு
கொம்புத்தான் விட்டாட்டக்குழம்பதாகு
மடித்திடவேரண்டுந் தான்வகையாய்த்தானு
மறக்காமலறைத்துநீபரணிவைத்து
வெடிப்பில்லாக் குளுந்தண்ணிர் கலக்கிக்கொள்ளு
மிதமாகக்குழம்பு சுண்டைக்காயளவுதானே. 534

நீர்க்கட்டுதோஷம்சுரம்சன்னிக்குக்குளிகை

ஆகுமே சாதிலிங்கக் குழம்புவுண்டை
அப்பனேபலபலவியாதிக்கெல்லாம்
போகுமடாசன்னியுடதோஷமூர்ச்சை
போக்கில்லா நெஞ்சடைப்புவாய்வுகாந்தல்
ஏகமுடன் வயிறெரிவுவயிறு ஊதல்
இதமானயிஞ்சிச்சாற்தன்னி லுண்ண
வேகமுடன்விஷபாகம் பித்தப்பாண்டு
விட்டோடுங்கொடிவேலிவேரிலுண்ணே. 535

உண்ணவேயின்னமொருகியாழஞ்சொல்லே
னுடன்சங்கு சுட்டநீர்பலந்தானாலு
நண்ணவேலிங்கமதுவிராகனாலு
நாபிரண்டு விராகனுடனாவின்பாலால்
எண்ணாமற்சாமமதுமூன்று ஆட்டு
இயல்பாக மிளகது போல்நிழலுலர்த்தி
திண்ணமுடன் சகவநீர்க்கட்டு தோஷந்
தீருமேசுரஞ்சன்னிதெரிக்கும் பாரே. 536

லிங்கக்கட்டு

பாருநீ சுரமெல்லாம் போவதற்குப்
பச்சையிஞ்சிச்சாறுடனே துளசிப்பூண்டு
மாருநீகையாஞ் சாற்தேனிற்கொள்ள
மறுபடியுந்திப்பிலியு மிளகுவங்கம்
சேருநீயிவ்வகையிற் சுரங்கள் போகுந்
தீருமேயின்னம்வெகுரோகந்தானும்
வாருநீசிறு பூளை நீருமுள்ளி
வழுதலையுஞ்சுரைக் கொடியும் கியாழம்வையே. 537

கியாழத்தில் மாத்திரைதான் கொள்ளும்போது
கழன்றிடுமே சயரோகம் நீரடைப்பு
அசையுமேதலை நோய்வுநீர்ச்சுருக்கு
அப்பனேவுப்பிசமும் வாய்வுந்தீரும்
வசையில்லாத் தோஷமுதல்நோய்களெல்லா
மகத்தான குளிசுரங்கள் மாறிப் போகும்
நிசமாகயிந்த முறை செய்தானானால்
நிச்சயமாய் வியாதி யெல்லாநெகிழுஞ்சாதி. 538

சாதிலிங்கக்கட்டுநான் சொல்லக்கேளு
சாம்பிராணிப்பலம் ரண்டுகூடன்ரண்டு.
பேதியாதரைத்திடவேதயிலமாகும்
பிசகாமலிழைத்துணியிலதனையூட்டி
கோதிலாலிங்கபல மொன்றிற்சுத்தி
கொளுத்திவிட யெரித்திடுவாய்சீலைவேக
நீதியாய்தயிலமதுயிருக்கட்டும்
நிறையவேசீலைதனிலூட்டெரியே. 539

எரித்திடுவாய் சீலைதனிலூட்டியூட்டி
யியலாகத்தயிலமதுயிருக்குமட்டு
முரித்திட்டுப்போகாமல் பிரட்டிவைத்து
முக்கியமாயெரிந்தபின்னெடுத்துக்கொண்டு
தரித்திடவே நெல்லிக்காய்கெந்திதன்னைச்
சாதகமாய்ப்பலம்ரண்டுகரண்டிதன்னில்
பொரித்திட்டுப் போகாமலனலில்வைத்துப்
போட்டுருட்டி லிங்கக்கட்டு புதுமைகாணே. 540

புதுமையாங்குளிர்சுரங்கள் தோஷம்போகும்
பொறுக்காத சன்னி பதினெட்டுந்தீரும்
வெதுமையாம்வயிற்றிலுள்ள வியாதி தீரும்
வெறுப்பான சோகைகாமாலைபாண்டு
பதுமைபோலிருக்கின்றபித்ததோஷம்
பாரிலுள்ள மேகமெல்லாம்பறந்துபோகும்
சூதான சூலைபொங்கொடிவேலிக்கியாழந்
துலங்குமடாயிஞ் சித்தேனதனிற் பருகே. 541

ஊஷ்ணங்களுக்கு நெய்

பருத்திபோலிருக்குந்துத்திப் பண்பினாற்பிடிங்கிவேரை
உரித்ததின்றோலைவாங்கியொள்ளியபசுவின்பாலில்
கருத்துறவரைத்துநீயுங்கருதியேகுடிப்பீராகில்
எரிப்பதுவிட்டுப்பின்னுமிறுக்கின்ற நோயதுமே. 542

அறுகஞ்சாறு நாழியானானமதுர மெண்கழஞ்சு
நறுநெய்நாழிபால்நாழிநன்றாயரைத்துச் சேரொன்றாய்
குறுகவெந்தநெய்யருந்த கோடாகோடியூஷ்ணங்கள்
வெருமைகண்டவோசைகள் போல்விட்டேபோகுஞ் சுக்கு
போலே 543

சுக்குமஞ்சள்வறாம்புள்ளிதுய்யமிளகு குங்கிலியம்
ஒக்கக்கொண்டு பொடிசெய்து ஓணதயறணைமேற்பூசி
தக்கவுரலிற்றனில்வகுத்து சமைத்த பொடியைமேலிட்டே
ஒக்கயிருந்துபுகைகொள்ளிவொனிக் சூலையொழியுமட்டும். 544

வட்டமுலையாள் வசமாவாள் மாவின்றுளிர்போல் நிறமாவாள்
பட்ட புண்ணுங்கடிவிஷமும் பாத்மிளைப்புமிசுவுதீரும்
குட்டம் பதினெட்டுடன்றீருங்குன்மந்தீரும் விஷந்தீரும்
சிட்டாகேளீர் சிறுகாலேசிவனார் வேம்பைத்திண்ணீரே. 545

யோனிச்சூலைமண்டைச்சூலைசிவன்வேம்புசூரணம்

திண்ணுஞ்சுக்குமரமஞ்சள் சேந்திமிளகுமஞ்சளுடன்
வண்ணித்திப்பிலிகடல்நுரையுமகிழும் வெண்காரவிலுப்பைவிரை
கண்ணத்துவைத்துநல்லெண்ணையிற் காச்சியினிதாய்க்
கட்டிடவே
எண்ணுமுள்ளமண்டைநோவு ஏகுஞ்சொன்னோ முருங்கைகேள்

முருங்கைக்கிழங்குகொக்கழல முதுசாறடை வேர்மதியுள்ளி
நெருங்கத்துவைத்துவசம்புடனே நெருப்பைநிகராங்கொடிவேலி
ஒருங்குதேய்த்த பெருங்காயமு திருவெச்செனவேதான்கொள்ள
மருங்கைசூழ்ந்தத்திளமடவீர் வயிற்றுச்சூலைகிளர்ந்திடுமே. 547

கிள்ளுங்கீரை சிறுகீரைகிளர்ந்த முருங்கைகாயரும்பு
பள்ளிபட்டவீட்டவரை பொன்னாங்கண்ணிமிள்ளியுடன்
அள்ளிதானுஞ்சுரைக்கொழுந்து அரியகுறிஞ்சான் பிஞ்சாகும்
வள்ளைத் துளிருசுண்டியுமாமருந்து தின்னும் போதனக்கு 548

குடல்வாதம் சூலைகெர்ப்பவிப்புருதி

பெருக்கவீங்கிவயிர்வலிந்தால் பின்னுந்தின்னுமருந்துகேள்
நெருக்கத்தட்டிதழுதாழைநேரேசாறுழக்குண்டாக்கி
அருக்கிக்குடியெள்ளெண்ணையதுயசனாங்காணுங்குடல்வாதம்
சுருக்குக்காணுமிந்தமுறைதுரிதமென்னெவேறுசுக்கே. 549

சுக்குக்காச்சியுண்டீரேசூலைவாதஞ்சுரதோஷம்
நிற்குநெஞ்சிற்கரிப்புபோம் நெரித்தபித்த மேப்பம் போம்
தக்கதலையில்நீரேற்றந்தலையிநோயுவும்வாய்வுவறு
மிக்கவிவைகள் காச்சியுண்ணுவிரும்புங்காதுவெழுச்சிதீரும். 550

வேறு

தீருமடாகெற்பவிப்புருதியப்பா
செகத்திலுள்ள பலகரையைச் சுட்டசாம்பல்
வீறுடைய சாதிக்காய் பாதிகூட்டி
வினையமாய்ப் பழச்சாற்றிலரைத்துக் கொண்டு
தூரமாய்ப் போனதொருமூன்றுநாளுஞ்
சுகமாகவருந்திடவே ரோகந்தீரு
மாரமேமூன்றுநாளும்புளிவிட்டு
மங்கையர்க்குப் பத்தியம் நீவைத்திடீரே. 551

சூலைக்குதேங்காய்க்கடுகு

வைத்திடவேயின்னமொரு மருந்துகேளு
மங்காதகொப்ப ரிக்காய் நாலுவாங்கி
முத்கிட்டகாயதனைத்திருகிவைத்து
முட்சதுரக்கள்ளிமடல்கொண்டுவந்து
கத்தியினாற்கண்டமாய்த் தரித்து நன்றாய்க்
காவியநீர்பானையிட்டுவேடுகட்டி
சுத்திசெய்த நேர்வாள நஞ்சுதள்ளி
துலங்குபலமொன்று பஞ்சதிரவியங்கூட்டே. 552

கூட்டுபஞ்சதிரவியமுங்கழஞ்சதாக
கொட்டையுடன் கலந்துருவு தேங்காய்க்குள்ளே
நாட்டமாய் வைத்துமேல் சட்டிகொண்டு
நன்றாகமூடியேதீயெரித்து
வாட்டமாய் வெந்தபின் பெடுத்துக் கொண்டு
வகையுடனே மருந்ததனைத் துண்டுபண்ணி
ஆட்டுதற்குத்தேங்காய்ப்பால் பிழிந்துகொண்டு
அவித்துவைத்துத் தண்ணியுடன் கூடச்சேரே. 553

சேருநீமருந்து முற்று மொக்கரைத்து
தேங்காய்ப்பா லுடன்கலந்துபுங்கம்பாலும்
வாருழக்குப்பாலதனைக் கூடச் சேர்த்து
வைத்தடுப்பிலெடுத்துநீவடித்துநெய்யை
மீனாகற்காசெடைநெய்யுள்ளுங்கொள்ளு
வெந்தேறக்கடுகதனைக்கழஞ்சுவீதம்
சேராமல் மாலையுண்ணத்தீருநோய்தான்
சொல்லுகிறோம் புகைபுளியுமுப்புந்தள்ளே. 555

தள்ளுபக்கச் சூலையுடன் யோனிச்சூலை
　　தாங்காத பேராமை சோகை பாண்டு
அள்ளியிடு நீராமை மூலவாய்வு
　　அப்பனே மருந்தருந்த வகன்று போகும்
வல்லலே விப்புருதி கட்டிதீர
　　வகையுடனே யின்னமொருமருந்துகேளு
எள்ளெண்ணெய் படியரைக்கு மருந்து கேளு
　　இயலான மாவிலிங்கை வகையு மூணே. 556

மூணாகும் வேர்க்கொழுந்து பட்டைகூட்டி
　　மூக்கரைச்சாரணைவேருமெட்டிவித்துந்
தோணவே குன்றிமணி கழல்பருப்பு
　　துலங்குதைவேளை வேருகுப்பைமேனி
வேணுமே கொடிவேலி வசம்புசுக்கு
　　வெள்ளையுள்ளி மிளகுடனே கழஞ்சுவீதம்
பேணியேயிதையரைத்துயெண்ணைக்குள்ளே
　　பிசகாமற்போட்டுநீ வடித்திடாயே. 557

விப்புருதிகட்டி அரையாப்புபிளவைவீக்கத்துக்கு இருமலுக்குகியாழம்

வடித்திட்டயெண்ணைதனைத் துட்டளவுதானு
　　மக்களேயுள்ளருந்திவீக்கந்தன்னில்
எடுத்து நீபூசிடவே கண்டிப்பெல்லா
　　மிருந்திவிடம்விட்டப்பாலேஏகிப்போகும்
தொடுத்ததோரரையாப்புபிளவைவீக்கந்
　　துடைவாழைசிறங்கு செவ்வாப்பூச்சிலந்தி
மடித்திட்டுப் போவதற்குமேலும்பூசி
　　மறக்காமலுள்ளருந்த வேறுவேலி. 557

வேறு

வேலிப்பருத்திமுடக்கொத்தான் விளங்குநொச்சிக் கொடிக்கள்ளி
கோலக்கொழுந்துவொருபிடிச்சாற் கொள்வெங்காயமுள்ளியுடன்
வாலசிற்றாமணக்கெண்ணை வைத்தேயுண்ணக்குடல் குன்மம்
பாலப்பழகுங்குடல்வாதம் பறந்தேபோகுங்கண்டீரே. 558

கண்டவட்டத்துத்திவேர்லவங்கைப்பட்டை
　　கற்கண்டுகொத்தமல்லிசமனதாக
துண்டறவேயிடித்து நன்றாய்த்தூளதாகச்
　　சுத்தசலமிருநாழிதண்ணீர்விட்டு

மிண்டாமலெட்டொன்றாய்க்காய்ச்சிக்கொண்டு
வேடுகட்டியிறுத்து நீகுடிப்பீராகில்
மண்டியேசயகாச மிரைப்புத் தீரும்
வறட்சியினாற் புகையிருமல் மாறிப்போமே. 559

காசத்துக்குகியாழம்

மாறிப்போந்திரிகடுகுதிரிபலாதி
மறவாமல் வாய்விளங்கமுத்தக்காசு
கூறுபடச்சமனெடையாய்ப் பொடியைச்
சேர்த்துகூட்டிட்டு அரிசிவகைசுத்திசெய்து
வீறுடனேமுன்பொடிக்குரண்டுபங்கு
விதமாகப்பொடியிடித்துக் கூடச்சேர்த்து
வேறுபடவிடிகொண்டுவெந்நீர்கொள்ள
வெருண்டோடுஞ்சளியிருமல்கிருமிபோமே. 560

சிவதைசூரணம்விக்கலுக்கு

போகும்விக்கல்சத்திநிற்கப்பருத்திவித்து
புகழேலந்திப்பிலியுநெற்பொரியுங்கூட்டி
தாகமுடன்சமனாகப்பொடியதாக்கித்
தப்பாமற்சர்க்கரையுஞ்சரியாய்க்கூட்டி
வேகமுடன் வெருகடிநீதேனிற் கொள்ள
விட்டேகுஞ்சத்திவிக்கல் குடல்பிரட்டு
ஆகமுடனெஞ்செரிவு அசாத்தியமெல்லா
மப்பனேதீர்ந்துவிடுமதற்குச் செய்யே. 561

செய்யவேதேங்காயைத்திருகிப்பாலைத்
திரளவேகாய்ச்சியதில்விளக்கெண்ணெய்சேர்த்து
மெய்யாகச்சமன்கொண்டு கொள்வீராகில்
விட்டுவிடுமலக்கட்டுகிருமிபோகும்
வையகத்திற்கடுக்காயுங்கரிப்பான் சேர்த்து
மறுகசட்டிபிட்டவித்துப் பிழிந்துகொண்டு
தையலேகோமயமுஞ் சரியாய்க் கொண்டால்
தவறிடுங்காமாலை மலக்கட்டுப் போகும் 562

அரையாப்புக்கெண்ணை

போகுமண்டவாதம்வல்லாதிகண்டால்
புகழ்பறங்கிப் பட்டையெள்ளுக் கருப்புக் கட்டி

வாகுசேராங் கொட்டை வொக்கக் கொண்டு
வகைக்குப் பலம் நாலாகவாங்கிக்கொண்டு
சோகந்திப்பிலியேலஞ்சாதிக்காயுஞ்
சுகமான பத்திரியுங்கிராம்பு கோஷ்டம்
ஏகமுடனிம்மருந்து விராகன்ரண்டு
இத்தனையு மொன்றாகவிடித்துச் சேரே. 563

சேர்த்து நீவைத்துக்கொண்டு கொட்டைப்பாக்கு
செலுத்துவாயிருநேரந் தின்னத் தீரும்
கூற்றுவன் போல் வந்ததோரண்ட வாதங்
குதித்தோடு மேகமெல்லாங் கூடப் போகும்
வேர்த்ததோரரையாப்புக்கெண்ணைகேளு
வெள்ளச்சிபாலொன்றுயெண்ணைரண்டு
பார்த்துமாவிலிங்கை வேரிலையுங்
கூட்டிப் பதறாமற்றைவேளைத் தூருங்கூட்டே. 564

பிளாஸ்திரி

கூட்டுவாய்வசம்புசுக்கு சித்திரமூலங்
கூறுபடவெள்ளுள்ளி சமனாய்த் சேர்த்து
வாட்டமில்லாப்பெருங்காயம்விராகனொன்று
மறக்காம லிவையெல்லாநறுக்கிச் சேர்த்து
தாட்டிக மாய்முன்னெண்ணைபாலுஞ்
சேர்த்துதருகாமலடுப்பேற்றிவெதுப்பக்காய்ச்சி
மூட்டிடுவா யிருநேரமஞ்சுநாளு
முக்கியமாய்ப் புளிபுகையுமுழுதுந்தள்ளே. 565

தள்ளாதசாதிலிங்கந் துருசுதுத்தந்
தாங்குரசகற்பூரம்ரசமுங்கூட்டி
வெள்ளையுள்ளிகடுக்காயுங்காசுக்கட்டி
விதமானகளிப்பாக்கு சமனாய்ச்சேர்த்து
உள்ளதெல்லா நெய்யிலிட்டுயரைத்துநன்றா
யுடன்தண்ணீர்கூடவிட்டு அலசிப்போட்டு
துள்ளவே சேர்த்தரைத்துச் சிமிளில் வைத்து
துலங்கவே புண்ணிலிடத் துஞ்சிபோமே. 566

பித்தத்துக்குத்திப்பிலிலேகியம்

துஞ்சுதிப்பிலிசெவியம் லவங்கப்பட்டை
துலங்கு பத்திரிகண்டு பறங்கியேல

மிஞ்சாததக்கோலம் போட்டுசுக்கு
மிளகுடனேவாய் விளங்கம் நறுக்குமூலம்
மஞ்சாததாளிசையுமக்கராகார
மதிமதுரங்கண்டங்கத்திரியுங்கோஷ்டம்
கொஞ்சியதோர் சீரமுடன் சிற்றரத்தை
கூட்டியிடிவகைக்கழஞ்சுவிராகன்சேரே. 567

விஷத்துக்குமருந்து

சேருநீசர்க்கரையும் பலமுமஞ்சு
தேக்கிடவே யாவினெய்யபடிதானொன்று
வாருநீ தேனுமரைப் படியுஞ்சேர்த்து
மக்களே லேகியம் போற்கிண்டிக்காய்ச்சி
மீறாமற்பதங்கண்டு யிறக்கிக்கொண்டு
விருப்பமுடன் புன்னைக்காயளவுகொள்ள
ஆறாத கிருகிறுப்புப்பித்தந் தீருமப்பனே
பித்தமெல்லாமஞ்சிப்போமே. 568

அஞ்சுபோம்வகைகேளுசுரையும் பீர்க்கு
மடுத்தபுடல் கொமட்டியுஞ்சிமிட்டிகூட
பிஞ்சுகாய்சமூலமுடனறுக்கிக் கொண்டு
பின்னையுமோ நிம்பயெண்ணை தன்னிற் சேர்த்து
மிஞ்சாமல் சூதமொருகழஞ்சுவிட்டு
வேடுகட்டிப் பத்துநாள் புதைத்துவைத்து
அஞ்சாமலெடுத்தரைத்துப் பரணைச்
செப்பில் அன்பாகவைத்துநீவிஷத்தைத்தீரே. 569

விஷத்துக்கு மருந்து

தீருமேநாகமெட்டும் வீரியனாரும்
சேர்ந்ததொரு சிலவிஷங்கள் மாற்றிவிக்கும்
நீரிலேயாவது வெற்றிலையில்வைத்து
நினைவாகச் சிறுபயறு மட்டும்நல்ல
பாருநீகட்டிகண்டு கொடுத்தாயானால் பறந்துவிடும்
விஷங்கனெல்லாம் விண்ணீர்போக்குஞ்
சேருநீயிம் மருந்தொன்றேபோதுஞ் செத்தவர்கள்
பிழைப்பார்கள் திண்ணந்தானே. 570

வாய்வுக்குமருந்து

திண்ணமாங்கறியுப்புவளையலுப்பு
சேர்ந்ததொரு கல்லுப்புச் சத்திசாரம்
வண்ணமாய் நவாச்சாரந்தானுங் கூட்டி
வாய்விளங்கம் பெருங்காயம் சித்திரமூலம்
சொண்ணுளுவைதிரிகடுகுசாதிக்காயுந்
துலங்கமரமஞ்சளுடன் செவ்வியமுங்கூட்டி
பண்ணு கருஞ்சீரகமும்வசம்பு மோமம்
பகருதிப்பிலி மூலமரக்கிழங்காம் 571

வாய்வுக்குப்பறங்கிபட்டை திருகுகள்ளி

கிழங்குவெள்ளைச் சாரணையு முட்காவேளையுங் கூட்டி
கிருபையுட னொருநிறையாய்நிம்பச்சாற்றில்
விளங்கவே தானரைத்துக்கழஞ்சு வீதம்
விருப்பமுடனசனத்து போல்மிகவருந்த
களங்கமறவாய்வு வெல்லாமகன்றுபோகுங்
கட்டிநின்றமலங்களெல்லாங் கசடற்றோடும்
புளங்கமறக்குளிகை போல்வைத்துக்கொண்டு
போசனத்தின் மேலருந்தப் போகும்வாய்வு. 572

வாய்வினால் வாதத்தின் பிடிப்புக் கெல்லாம்
வர்க்கமாங்கோதும் பைமாவு மரைப்படியாம்
காயவேபரங்கிப்பட்டை யிடித்துத் தூளாகக்
கத்தியாம்மந்திடைக்குக் கணக்காய்ச்சேர்த்து
பேயான திருகுகள்ளிநறுக்கிப்பானை
பேறுபடமுடாவிலிட்டுத் தண்ணீர்விட்டு
ஓயாமற்றீ யெரிநீயடுப் பிலேற்றி
யுத்தமனே வேடுகட்டி மாவைவையே. 573

வைத்திட்டமாவதனை வெந்தெடுத்து
மக்களேவெருகடிதான் மூன்றுதின்றால்
எய்த்திட்டபிடிப்பெல்லாமெங்கேபோச்சு
இப்படியே மூன்றுநாளருந்தும்போது
நைத்திட்ட சூலைமுதல்கிலுகிலுவென்று
நடுக்கியதோர் பிடிப்புடனே யிடுப்புவலியு
நொய்த்திட்டவுடம் பெல்லாம் வசரக்காயம்
நோகாமல்தீருமது நுணுக்கந்தானே. 574

றுணுக்கியதோர்திப்பிலியும் பலந்தானெட்டு
நொய்தரத்தையஞ்சுகோதும் பைரண்டு
இணைக்கமுடன் மிளகுசுக்கு செவியம்நல்ல
யின்பமுடனதி மதுரந்திப்பிலியு மூலம்
மணக்கேலஞ் சீரகமும் ரண்டுங்கூட்டி
வாய்த்தசிறுதேக்குடனே நறுக்குமூலம்
பிணக்கில்லாக் குறாசானியமுக்குறவும்
பின்னையுமோர் கூகைநீர் வால்மிளகே. 575

மிளகுடனேதாளிசையுங் கடுக்காய் கூட்டி
மீறாமல் வகைக்கெட்டுவிராகனாக
பளகியதோர்லவங்கப்பட்டை பத்தரியுங்கூட்டி
பகர்லவங்கப்பூவுடனே சாதிக்காயும்
அழகானவதின் பத்திரிவிராகனஞ்சு
அப்பனேவகைவகையாய் வாங்கிக்கொண்டு
இளகவேவறுத்து நீபொடியதாக்கி
யின்பமுடன் வடிகொண்டு வைத்துக்கொள்ளே. 576

திப்பிலிசூரணம்

வைத்திடவே பொடியுடனே கரிசலாங்கண்ணி
வாடாத தூதுவளைகண்டங்காரி
மெய்த்திடவே நிழலுலர்த்திச் சூரணித்து
விளங்கவேவகைக்குக் காற்படியுங்கூட்டி
பொய்த்திட்டுப் போகாமலெல்லாங்கூட்டிப்
பூரிக்கக்கலந்து கொண்டுபுனிதமாக
கைத்திடமாகவேதான் வெருகடியுந்தேனுங்
கலந்துகொள்ளச் சயமீளைகழன்றுபோமே. 577

கழன்று போமிளகுபலம்பத்துகூட்டி
கஸ்தூரிமஞ்சளுடகிராம்புமேலம்
தள்ளாதசிற்றரத்தைகோஷடமிலவங்கந்
தனிமதுரஞ் சதகுப்பைதேவதாரம்
புளகிக்குஞ்சந்தன முஞ்சிக்குமஞ்சள்
புகழுஞ்சிறுசண்பகப்பூதிப்பிலியுமஞ்சள்
அழகானகார்போக்கிபூடு பலமஞ்சு
அப்பனே பேய்ப்புடலும் பின்னுமோமம். 578

ஓமங்கருஞ்சீரகமுங்கொத்தமல்லியுடன்
பூலாக்கிழங்குடனே யமுக்கிறாவு
நேமமுடன்கருக்குவாய் வெட்டிலாமுச்சு
நிசமானநன்னாரி கூடச்சேரு
நாமமுடனரைப்பலமாய் வகைக்குச் சேர்த்து
நாட்டு வாய்குங்குமப்பூ செந்துருக்கு
ஆமடா சண்பகப்பூகோரோசினையு
மப்பனே சாதிக்காய் பீதறோணி. 579

தலைமுழுகத்தயிலம்

பீதரோணியுடனேமருந்தையெல்லா
பிசகாமல்வகைக்கிருகழஞ்சுகூட்டி
சூதானகாத்தட்டிகர்ப்பூரவள்ளி
துலங்கு கையாந்தகரைதிரு நூற்றுப்பச்சை
பேதமில்லாமுசுமுசுக்கை பொன்னாங்காணி
பிசகாமல் பொடுதலைவெற்றிலையுநொச்சி
நீதமுடன் கருநொச்சி கரந்தைப் பாலும்
நிம்பச்சாற்நீருங்கண்டரைப்படியே. 580

படியானகுறுந்தொட்டி வேரறுக்கம்
வேரும் பண்பான வில்வவேர்கொம்பரக்கு
துடியாகவகைக்கிருபலமுங்கியாழந்
துஞ்சவேகாய்ச்சி வகையுரியுஞ்சேரு
வடிவான யெள்ளெண்ணை படிதான் ரண்டு
மருந்தெல்லாங்கியாழஞ் சாற்விட்டு ஆட்டி
பொடியாகவடுப் பேற்றியிருக்குஞ்சட்டி
புழுகுடனே பூரமது நினைவாய்ப் போடே 581

பறங்கிப்பட்டை சூரணம் சூலைக்கட்டு

போட்டுநீமுழுகிவரப்பித்தமெல்லாம்
பொல்லாத கிறுப்பு நேத்திரவாய்வு
தாட்டிகமாய்ச்சுரங்கள்வொட்டைபிறமேகந்
தாங்காதமேற்கனப்புக்காங்கைகாந்தல்
மூட்டுடனே மூட்டெல்லாங்கடுப்புத்தீரு
முக்கியவாய்த்தீபனமும்பசியுமுண்டாம்
வாட்டமில்லாச்சனி புதனுமுழுகிவந்தால்
மக்களேசரீர மெல்லாம் வச்சிரமாமே. 582

வச்சிரமாம் பறங்கிப்பட்டை பலந்தான்
பத்து வகையாகவில்லை போல்நருக்கிக்கொண்டு
மெச்சியதோர் குப்பிச்சாற்தன்னிலூறி
மெதுவாகநிழலுலர்த்திவைத்துக் கொண்டு
உச்சிதமாய்ச்சூதமொடுலிங்கெந்தி
யுயர்ந்தகாரீயமுடனாகங்கூட்டி
இச்சையுடன் சூடகமுமுஞ்சுக்குசேர்த்து
இயல்பாகவகைக் கரைப்பலமுஞ் சேரே. 583

சேர்த்துநீபானைக்குளிட்டுநன்றாய்த்
திறமாகப் பானையில் வாய்ப்பரப்பிக்கம்பை
பார்த்துப் பானைக்குஞ் சல்லாடை மேலேவைத்து
பரப்பிவைப்பாய் பரங்கிப்பட்டைவில்லைதன்னை
ஏத்திடுவாயடுப்பேற்றிச் சட்டிமூடி
யிதமாகமண்சீலையிடு நீயப்பா
நீர்த்திடவேயனல் மெதுவாய்புகைதானென்று
நிச்சயமாயிருசாம மெரித்திறக்கே. 584

இறக்கிய தோர்பட்டை தனையிடித்துத் தூளா
இஷ்டமுடன் வடிகொண்டுவைத்துக் கொண்டு
குன்றத்திடாவெருகடிதான் தேனிற்கொண்டால்
குட்டமுதல் பரங்கிவெடிசூலைபோகு
நிறைத்திட்டபிடிப்புவகை சூலைக்கட்டு
நெகிழ்ந்தோடு மொட்டியபுண் லிங்கப்புற்று
மறைத்திடுப்போகாமலந்திசந்தி
மைந்தனே கொண்டிடவே ரோகம்போமே. 585

போகவேபறங்கிப்பட்டை பலந்தானஞ்சு
போய்யல்லமாவி லிங்சைச்சாறு நாழி
வாகுடனே பட்டைதனைச் சீவிப்
போடுவடிப்பமாய்ச் சாறுவற்ற நனையவைத்து
ஏகமுடனிழலுலர்த்திவைத்துக் கொண்டு
யின்பமுடன் சாம்பிராணிக்குங் கிலியம்வெள்ளை
வேகங்கருங்குங்கிலியங்குக்கில்கூட்டி
விதமானபானைக்குள் மிகச் செலுத்தே. 586

பறங்கிப்பட்டை சூரணப்புகை

செலுத்தியதோர் பானைதனில் வாய்சில்லாடைவைத்து
திரட்டிவைத்துப்பட்டைதனை மேலேயிட்டு
வலுத்திட்ட சட்டிதனை மூடிச்சீலை
மண்செய்து அடுப்பேற்றி யனலை மூட்டி
பெலத்திடவே தீயெரித்துப்புகையைக்கட்டிப்
பின்பெடுத்துக்கலசத்தில் தூளதாக்கி
பலுத்திடவே வெருகடிதான் றேனிற்கொள்ளப்
பறந்திடுமே சூலையெல்லாம் பஞ்சுபோலே. 587

பஞ்சாகுஞ் செம்பருத்தி யிலையின் சாறும்
பருத்த வெள்ளை நொச்சிச் சாறிஞ்சிச்சாறு
மிஞ்சாமற் கொமட்டிக்காய்ச் சாறுகூட்டி
விதமானவெள்ளுள்ளிச் சாறுகூட
வஞ்சகமில்லாம லொருவகைக்குநாழி
மறவாமற் சாறுபடி அஞ்சுங்கூட்டி
துஞ்சவேயடுப்பேற்றிக் காய்ச்சப்பாகு
துலங்கவே யிடுமருந்து சொல்லக்கேளே. 588

குன்மத்திற்குலேகியம்

கேளுரசஞ் சாதிலிங்கங்காந்தமிந்து
கிரிகைக்குநேர்வாள மிளகுமஞ்சள்
தாழ்வில்லா வெந்தயமு மத்தவித்துச்
சடாமாஞ்சிகாய முடன் சரக்கையெல்லாம்
சூழவேவகைக்குவகைவிராகன் மூன்று
துலங்கவேவறுத்து நீபொடித்துக் கொண்டு
கூழ்போலவருகின்ற பாகுக்குள்ளே குமுறவே
பொடியை யிட்டுக் கிண்டிக் காய்ச்சே. 589

காய்ச்சியதோர் பாகதனை லேகியம் போற்
கிண்டிகலசத்திலெடுத்து நீபதனம் பண்ணி
வாச்சுதே லேகியந்தான் சுண்டைக்காய் போல
மறக்காமலுதயாதிவருந்திக்கொள்ள
போச்சுதே குன்மமெட்டுங்கவிசை வாய்வு
பொல்லாதநீராம்பல் பாண்டு சோகை
நீச்சுதேபெருவயிறுமகோதரங்காமாலை
நிலையற்றதிசைவாய்வுகவுசவாய்வே. 590

வாய்வானவுதிரத்தின் வாய்வுபோகும்
வயிற்றிலுள்ள வியாதியெல்லாமாண்டேபோகும்
ஓயாமல் மண்டலந்தானரையுங்கொண்டால்
உள்ளிருந்தவியாதியெல்லாமோடிப்போகும்
தாய்முகங்கள் கண்டதொருசிசுக்களைப்போற்
சாந்தமாய்க் குளிர்ச்சியுண்டாந்தணியும்ரோகம்
நேயமுடன் புளிபுகையை நிறுத்திவைத்து
நேர்மையுடன் கொண்டிடவே நெகிழ்ந்துபோமே. 591

நவச்சாரக்கட்டு

நெகிழாமல் நவாச்சாரக்கட்டுகட்ட
நேர்த்தியாய்ப்பூநீறு சீனக்காரம்
மகிழவே வெண்காரங்கறியுமப்பா மாசிலா
வெடியுப்பு வகைப்பலமதாக
புகழிதமாய்ப்பழச்சாற்றா லரைத்து நன்றாய்ப்
புனிதமாய்க்கரண்டிதனில் வழித்தெரிந்து
இகழாதசுண்ணாம்பாந்தேனிலாட்டி
யியலான நவச்சாரந்தன்னிற்கட்டே. 592

கட்டுவாய் சுண்ணாம்பைத் தேனிலாட்டிக்
களங்கமறக் கவசங்கட்டி வெயிலுலர்த்தி
திட்டமாய்க்குண்டு சட்டிமேலிரும்பு
மணலை திறமாகயரைச்சட்டி மட்டுங்கொட்டி
மட்டானநவச்சாரக்கட்டிதன்னை
மத்தியிலேவைத்துப் பின் மணலைக்கொட்டி
இட்டமுடன் மேற்சட்டிமூடிச்சீலை
யிதமாகச்செய்தடுப்பிலேற்றிடாயே. 593

காசத்துக்குலேகியம்

ஏற்றியே யெரித்திடுவாய்ரண்டுசாம
மியல்பாகவாறினபின்கவச்சசுன்னம்
போற்றியே யெடுத்துவைத்துக்குன்மந்தீரப்
பூரணமாம் பணவிடைதான்றேனிற் கொள்ளு
நீற்றிட்ட நவாச்சாரக்கட்டிதன்னை
நீலவரிக்கற்றாழைச்சாறுதன்னில்
பார்த்துநீபண்விடை தானுரைத்துக் கொண்டால்
பாண்டுகாமாலைபோம்பத்தியங்கண்டீரே. 594

வேறு

கண்டங்கத்திரிதூதுவளைகையாந்தகரைநீர்முள்ளி
விண்டபருத்திகாய்கொடுப்பை வெல்லும் பிரமிபொடுதலையு
முண்டிமுளைத்தமுசுமுசுக்கைமூன்று பசும்பால் நெய்தானும்
கண்டதுகைதான் வகைக்குழக்குகடைவாள்மருந்து சொல்வோமே

சொல்லுங்கோடிடஞ்சிற்றரத்தைசுக்குதிப்பிலிமிளகோமம்
வெல்லுங்கடுக்காயதிவிடையமேலுங்காயம் பொரிக்காரம்
வல்லுவிளங்கமண்டூகம்வாய்த்ததிப்பிலிமூலமொடு
எல்லாமருந்துயிருகழஞ்சுயிதமாயரைத்துக் கொள்வீரே. 596

அரைத்தமருந்தையவ்வளவுமளவாய்க்கரைத்துயடுப்பேற்றி
இரைத்துக்கொதித்துவற்றியபின்னிசைகளிபோல்வரும்போது
உரைத்தசீனியிருசே ரேயுகந்ததேன்கால்படிவார்த்து
கரைத்துக்கிண்டலேகியமாங்கரண்டிதினமுங்கொள்வீரே. 597

கொள்ளும்போதுகாமாலைகுலைக்குமிருமலீளையொடு
விள்ளுங்காச்சல்நாவறட்சிமிகுந்ததாகமேலிளைப்பு
தெள்ளுஞ்சோகையரோகந்தீராச்சுவாசந்திகைப்போடும்
துள்ளுங்கபாலபயித்தியமுஞ்சுகமாங்கண்டீர்சொன்னோமே. 598

குழந்தகட்குளண்ணைதுவாலையிடமருந்து–வேறு

சொல்லுகிறோங்குழந்தைகட்குப் பரவைதோஷஞ்
    சுகமாக மருந்துநாம் சொல்லக்கேளு
நல்லேலஞ்சீரகமுமதுரங்கோஷ்டம்
    நலமானசண்பகப்பூகாட்டுசீரகம்
வெல்லுகின்றகொத்துமல்லியக்கராகாரம்
    வியன்கிராம்புதிப்பிலியுஞ் சந்தனமுங்கூட்டி
கல்லதனிலிடித்துநன்றாய்த்தூளதாக்கிக்
    காச்சியேயாவினெய்யிற்கரண்டிகொள்ளே. 599

கொள்ளுவாய்களுத்தாரமுச்சிநெஞ்சிற்
    குழறவேதடவியப்பாயிருநேரங்கொள்ள
தள்ளுநீவெறுசுக்குமிளகுதிரிபலையுந்
    தாங்காதகாணத்தூள்வசம்புவுள்ளி
மெள்ளவேசமனாகத்தூளதாக்கி
    மேவியதோராவிநெய்யுரியிலிட்டு
உள்ளி பொடுதலைசங்குநிம்பயிலைத்தூதுபழம்
    உத்தமனே மணிச்சாறுடனே வகையுழக்கதாமே 600

உளக்கான சாறுவகை நெய்மருந்தில் சேர்த்து
வுத்தமனே வெந்திறக்கியுள்ளுக்கொள்ள
வளக்கானமாந்தமுடன் பறவைதோஷ
மகத்தானயிருமல்விக்கல் வாந்திபோகும்
இளக்குசிறு புள்ளடியு முள்ளிவெங்காய்
மிதமானவசம்பு நீர்வார்த்தரைத்து
புளக்கமாய்ச் சர்வாங்கந்துவாலையிட்டால்
போகுமடா தோஷமெல்லாம் பொருந்தாதப்பால். 601

மேகத்துக்கெண்ணைபிடிப்புக்குஎண்ணை

பொருந்தாதகிரந்தி தனக்கெண்ணைகேளு
புகழ்சித்தாமணக்கெண்ணையுட்குக்கொள்ளே
வருந்தியே யெருக்கலம்பாலாழாக்கிட்டு
வசமொச்சிமுசுமுசுக்கைகரிச்சலாங்குப்பி
அருந்தவேசுடுதுரத்தி புளியிலைச்சா
ரப்பனே வகையாழாக்காகவிட்டு
திருந்தவேமிளகு சுக்குவசம்பூடு சித்திர
மூலங்கடுக்காய் சேர்த்திடித்து சேரே. 602

சேருநீயெண்ணையுடனெல்லாஞ் சேர்த்து
திரளவேகொதிப்பித்து யிறக்கும்போது
கூறுரசகர்ப்பூரகழஞ்சிசேர்த்து
குறிப்பரிந்து கொடுத்துநீமூன்றுநாளும்
பாருநீகிரந்தியென்ற புண்களாறிப்
பறக்குமேபிடிப்பெல்லாம் பசாசுபோல
மீறாமலாறுநாள்புளிபுகைப்புத்தள்ளி
விளங்கிடவே பத்தியம்வைசித்தியாமே. 603

வேறு

சித்திர மூலமிந்து திரிகடுகோமங்கூட்டி
முத்தியசீரகமிரண்டு முறைப்படிசரியதாக
பத்தியாய்ப்பொடியேசெய்து பாங்குடன் றேனிற்கொள்ள
அத்தனாரருளினாலே யதிகதீபனமுநாடும். 604

தீபனத்துக்குச் சூரணம் சுயமாக்கினிவண்டு கடிக்குவிஷத்துக்குச் சூரணம்

நாலுசூலஞ்சிலைரண்டு நல்லகெந்தகம் நாலுரண்டு
ஆலுகாந்தம் பதினாறு அதனில்ரெட்டியரைப்பொடியாம்

ஏலங்குழலாளம்மிதனி லிலங்குங்குமிரிச்சாறரைத்து
தாலந்தனிலேயப்பிவைக்கத் தணலாயெரியுங்கண்டீரே. 605

கண்டீர்குன்மபீலிகையுங்கனத்தபித்தப்பாண்டுவுடன்
உண்டாலமருக்கும் புளித்தேப்ப மோடுங்குளிருமுட்சுரமும்
பண்டேயிஞ்சிச்சாறுடனே பருகச்சன்னிபதின்மூன்றும்
கண்டால் தீருமிம்மருந்தே கருதிச்செய்துபாரீரே. 606

பாராய்வண்டுகடிவிஷம்போம் பெருத்தவழிஞ்சி தலைச்சுருளி
சீராய்வீரியமிளகரணை சிறந்த கொல்லன் கோவையப்பை
வாராயெட்டி சேங்கொட்டை வாகைப்பட்டைமாவிலிங்கை
கூராசிவனார் வேம்பருக்கு கொள்ளுஞ்சித்திரமூலமுமே. 607

வெள்ளைக்குப் பச்சைவெட்டுவெண்ணை

மூலஞ்சமுத்திராப்பழமோம முத்தக்குறிஞ்சான்குளப்பாளை
சேலப்பறங்கிப்பட்டைசுக்கு சேர்ந்தகஸ்தூரிமஞ்சளுடன்
கோலங்கடுக்காய்கார்போகி குதிக்குங்கறுத்தசீரகமும்
சாலச்சமனாயிடைகொண்டு தங்காச்சூரணமும்மருந்தே. 608

வேறு

அருந்தும் வெள்ளைகண்டவர்க்கு மருந்துகேளு
ஆனவெள்ளைக்குங்கிலியம் பலந்தானஞ்சு
திருந்தவேபொடியாக்கிவைத்துக்கொண்டு
திறமானயெண்ணைசட்டி யடுப்பிலேற்றி
பொருந்து நல்லெண்ணையுழக்கதிலேவிட்டு
புகையாமற்கொதித்துவரிற்பொடியைத்தூவி
வருந்தியே கிண்டிடவே பாகுசேரில்
மறுசட்டிக்குள் நாழிதண்ணீர் வையே. 609

வைத்திட்டதண்ணிதனிற்பாகையூற்றி
மைந்தனே பிசைந்திடுவாய்மைபோல்நன்றாய்
பையவேதிரட்டியதையெடுத்துக்கொண்டு
பதங்கானயிளநீரிற்போட்டானால்
துய்யவேகையினாற்பிசையும்போது
துண்மையுள்ள வெண்ணையாந்துலங்குநன்றாய்
மெய்யாகவெண்ணைதனை யெடுத்துவைத்து
விதமானயேலரிசி பொடித்துப்போடே. 610

தாகத்துக்கு சுரத்துக்கு கியாழம்

போட்டுநீயொன்றாகலேகித்தப்பா பொருந்தவே
புன்னைக்காயளவுகொண்டால்
வாட்டமில்லாமேகவெள்ளைநீர்க்கடுப்பு
மகத்தான வுட்காங்கைவயிறெரிவு
மூட்டியதோர்முகவெரிவுகைகால் காந்தல்
முறிந்தோடுமிந்தமுறைமுயற்சிசெய்தால்
தாட்டிகமாயின்ன மொருகியாழஞ் சொல்வேன்
தரணிக்குள் முனைத்தெழுந்த ஆலுமாமே. 611

ஆலரசுமாதளை கூவிளமுமாவு
மதின்புறணியிஞ்சுசுக்கு கிராம்பு கோஷ்டம்
கோலமுடன் விலாமிச்சுவிடையஞ் சந்தனம்பத்திரி
கூட்டிடு வாய் சாதிக்காயக்கராகாரம்
மாலையுடன் காமாலைமுக்கழஞ்சுகூட்டி
வகையான கியாழத்தை மருகக்காய்ச்சி
சீலமுடன்கியாழத்தில் கிளியைக்கட்டு
செலுத்துகின்ற மருந்ததனைச் செப்பக்கேளே. 612

வேறு

கேளாய் கிராம்புபத்திரி காயங்கிளியைக்கழஞ்சு அரையாக
ஆளவவித்துக்கியாழமதிலரைத்துக்கலக்கியுடன் கொள்ள
வாழுந்தாகபேதிசுரம் வறட்சிக்காந்தலுழலையெல்லாம்
தாழப்போகுமென்று சொன்னோந் தரணியோரேநிச்சயமே. 613

துருசுவெள்ளைநீர்ச்சுருக்குக்கு
வேறு

நிச்சயமாந்துருசுபலமொன்றுவாங்கி
நேசமுடன்கவசங்கட்டமருந்துகேளு
பச்சைக்கற்பூரமுடன் வீரங்கூட்டிப்
பாவணையாய்விராகனாலுமிநீராலாட்டி
மெச்சவேதுருசுகட்டிதன்னிற்பூசி
வெயிலில்வைத்துக்காய்ந்தபின்பெடுத்துக்கொண்டு
வைச்சிடுநீபூ நீறுபலந்தானாலு
வாங்கியே துருசுகட்டி கீழுமேலும் 614

கீழுமேலுங்கொட்டிநன்றாய்ச்சட்டிதன்னிற்
கீழ்மரத்தீமெதுவாய்கடிகைரண்டு

மீளவேயெரியிட்டுயெடுத்துப்பாரு
வெண்மையாய்ச்சுண்ணாம்பூ வேகமெத்த
தூளாக்கியெடுத்துநீ வைத்துக் கொண்டு
துலங்குபற்பம் பணவிடையாமாவின் வெண்ணை
தாளாமற்கொண்டிடவே நீர்ச்சிறுப்புவெள்ளை
சதையடைப்புமேகமெல்லாந்தவறிப்போமே. 615

சாம்பிராணித்தயிலம்பூவும்

தவறிப்போம் நீரேத்தந்தலைப்பாரங்கள்
சாம்பிராணிபளிங்குபோலகட்டிவாங்கி
கமறியேயிடித்திடுவாய் தூளதாக்க
கனத்த குண்டுச்சட்டிதனிலிட்டுமேலே
உப்பரியாமேற்சட்டிகவித்துநீயு
முத்தமனே சீலைமண்செய்துநன்றாய்
சுவறிடவேயடுப்பேற்றியகிலுச்சட்டி
துலங்குநல்லெண்ணெயிட்டுத்திரியுமரண்டே. 616

ரண்டுதிரியேற்றியேயடுப்புக்குள்ளே
நலமாகவைத்துநீயெரிக்கும்போது
மண்டியேபுகையெல்லாகவிழ்த்தசட்டி
மாசிபோலபடர்ந்து நன்றாய் மடித்துவொட்டும்
கண்டுபதமறிந்து நீயெடுத்தாறவைத்து
கவசங்கட்டுபண்பிரித்துக்கவிழ்துஞ்சட்டி
தூண்டுபடவெடுத்து நீவடித்துக்கொண்டு
தூளாக்கிநாசியினிற்றுலங்கச்செய்யே. 617

துலங்குகின்றசாம்பிராணித்தயிலங்கேளு
சுத்திநிறபளிங்கு போல்கட்டிவாங்கி
இலங்குகின்றபாங்குபோலநறுக்கிக் கொண்டு
இதமான குண்டுசட்டியடுப்பிலேற்றி
கலங்காமல் சட்டியில்தண்ணீரை விட்டுக்
கசகாமற்குண்டுசட்டிக்குள்ளேவைத்து
மலங்காமல் சாம்பிராணிப்பொடியை நன்றாய்
மக்களேயகிற் கட்டியைசுத்தி வையே. 618

வைத்திடுநீமேற்சட்டிமல்லாத்திவைத்து
வாய்மட்டுங்கீழவே மண்சீலை செய்து
மெய்த்திடவே மெதுவாகத்தீயெரித்து
மேற்சட்டிதண்ணிதனை துலாவிக்காம்பால்

எய்த்திட்டுப்போகாமற் கிண்டிகிண்டி
யிதமாகக்கடிகையொன்றெரித்துபின்னும்
கைத்திட்ட மாகவேதானிறக்கிவைத்துக்
கசிந்துவிழுந் தயிலமதைக் கண்டுகொள்ளே. 619

கற்பூரசிலாசத்து பற்பம்

கண்டிடவே கற்பூரசலாசத்துதன்னைக்
கருதியே பலம்வாங்கிக்கல்லுச்சுன்னம்
மிண்டவேகவசங்கட்டியதன்மேற்சீலை
மீறாமற்சுத்தியே மேதைச்சாணம்
விண்டுவிடாமற் பொதிந்துகுக்குடமேபோற்று
வெந்தவுடனெடுத்துநீ வைத்துக்கொண்டு
பண்டுசத்திகுன்மமெல்லாம் பறந்து
போகப்பாகமுடனாவின்பால்கருதப்போமே. 620

இரசகற்பூரம்கிரந்திக்குலேகியம்

பருகரசகற்பூரம் பலந்தான் வாங்கி
பாவையர் பாலூறவைத்து மற்றாநாளு
முருகாமல் நீர்தன்னிலலசிப்போட்டு
முத்தமனேகாய்ந்தபின் பொடியைத்தாக்கி
நெருகான கொப்பரைக்காய் கொத்தமல்லி
நேற்றியாலவங்கப்பூ வோமம்வெண்ணை
வருகிறது தோரதுவார்கும் பனையின்வெல்ல
மக்களே பணவிடைதான் வைத்துக் கொண்டே. 621

கொண்டிடவே பறங்கிக்குட்டம்கிரந்திசூலை
கொடிதான வரையாப்புயோனிச்சூலை
நொண்டியிடும் வாதமுடன் பிடிப்புப்புண்கள்
நொறுக்குமே பௌத்திரமு நொடியிற்போகும்
கண்டதொரு மேகரணஞ்சூலைக்கட்டு
கமரியே போயிடுங்காண் கருதிப்பாரு
தெண்டிசையில்வயித்தியத்துக் கொன்றே போதுஞ்
சித்தித்துப்புளிபுகையைத்தீரத்தள்ளே. 622

விஷத்துக்குகருங்குழம்பு

தீராதவிஷங்களெல்லாந்தீர்ப்பதற்குத்
தெளிவாகக்கருங்குழம்பு செப்பக்கேளு

நேரானகருநாபிவெண் காரமிந்து
தெரிவிஷ முங்கருஞ்சீரகமுங்கூட்டி
சீரானகெந்திரசமனோசிலையும்
வாளத்திறமாகச்சுத்திசெய்துசாரமறையாக
பேரான குழிக்கல்லி லாட்டித்தூளாய்ப்
பின்னுமோர் வேலியிலைச்சாற்றாலாட்டே. 623

வேறு

ஆட்டுவாய் சுரமூன்று அதற்கப்பால் தேங்காய்ப்பாலு
கூட்டுவாய்கருப்புக்கட்டி கொட்டவச்சியின்கரியும்
வாட்டமாய்த் தேங்காய்ப்பாலு மகிழவிட்டரைத்துநன்றாய்
மூட்டுவாய் விஷங்களெல்லா முசியறக்குன்றிபோலே. 624

வேறு

குன்றிபோல்கிள்ளரக்கைசுத்தியாகக்
கூட்டுரசந்துருசுபூவந்திவாளம்
வென்றிடவே சமன்தேங்காய்ப் பாலாட்டி
மெழுகது மோல்வரும்போது மேவிப்பின்னுந்
தின்னுவிடுந்தேங்காய் நெய்விட்டு ஆட்டிச்
சிறுகவேசுருக்கிடுவாய் கரண்டிதன்னில்
நன்றாக விஷங்கள் கண்டு குன்றிபோல
நாட்டுவாய் வெற்றிலையில் சிறுகவைத்தே. 625

முன்னையிலைபேதிமுறை

வைத்திடுவாய் பேதிக்குவாளஞ்சுத்தி
மணமுன்னைச்சாறதனால் மகிழ்ந்தரைத்து
கைத்திட்டமாகவேதான் சுண்டைக்காய்போல்
கடுகவேயுருட்டிக்கொள்ளப்பேதிகாணும்
மெய்த்திடவே சுகபேதிமிகுதிகாணும்
வெதுப்பமில்லைதகையில்லை மெய்யாச்சொன்னோம்
நைய்த்திடவழித்ததுகண்டால் ஆவின் பாலும்
நலமானகயத்தால் சோறுமுண்ணே. 626

இரைப்பிருமலுக்குலேகியம்

உண்ணயின்னமிளைப் பிருமல்காங்கைபோக
உத்தமதாளிசபத்திரிபலந்தானொன்று
நன்மைபெறும் அதிமதுரம் கோஷ்டந்தானும்
நாடுபெருந் திப்பிலியும் நறுக்குமூலம்

கண்ணான வரத்தைசிறுநாகப்பூவுங்
கராம்புடனேலவங்கப்பட்டை கூட்டியேதான்
திண்ணமாயவகைக்குக்கால் பலமதாகச்
சேர்த்திடித்து வடிகொண்டு சேர்க்கைகொள்ளே. 627

சேர்க்கையாம் பலம் நாலு பஞ்சதாரை
செலங்கரைத் தடுப்பேற்றிப் பாகுக்காய்ச்சி
ஏர்க்கவே நெய்தேனுமுழக்குவிட்டு
யிடித்திருந்தசூரணத்தைமேலேதூவி
கார்க்கவே லேகியமாய்க் கிண்டிக்கிண்டி
கலசத்திலெடுத்துவைத்துக்கழஞ்சிபோலே
ஊர்க்குள்ளவீளையிருமலோடிப்போக
வுத்தமமா விலேகியத்தை யுறுதிபண்ணே. 628

சுரத்துக்கு அஸ்தாக்கினித் தயிலம்

உறுதியா யின்னமொரு தயிலங்கேளு
ஓமமுடன் திரிகடுகு கொத்தமல்லி
பிறிதியாஞ்சதகுப்பை வெட்டியிலாமிச்சு
பெருமருந்துசந்தனமுந்தேவதாரம்
கரியசீரக மிரண்டு லவங்கப்பட்டை
கஸ்தூரிமஞ்சளுடன் காரசாரம்
சிறுதேக்கு ரோகணியுமரத்தைகோஷ்டஞ்
சேர்த்திடுபேய்ப்புடலுடனே லவங்கப்பத்திரி. 629

பத்திரியாம் நன்னாரிமஞ்சிட்டிமாஞ்சி
பகர்காட்டுச் சீரகமுமமுக்குறாவு
முத்தியதோர்நிலவேம்பு வகைக்கரைப்பலமா
மெழுகுபோலரைத்திடுவாய் பின்னுங்கேளு
சுத்திவெரு கங்குபலம் பத்துவாங்கிச்
சுகமாகவரைத்ததிலை யெண்ணைபடிநாழி
சித்தி பெறக்காய்ச்சி நீபதங்கண்டுமுழுகத்
தீருமேசகலசுரநோயு மதிசாரம். 630

நிலவாவாரைச் சூரணம்

நேர்வெல்லாம் போவதற்குமலங்கழற்ற
நுணுக்கமா யின்னமொருபொடியைக் கேளு
ஆவலுடனிலவாகையிந்து கூட்டி
யப்பனேதிரிகடுகுசமனதாக

பாவகமாய் வெதுப்பியேசூரணித்துப்
பண்பாகவெருகடி போசனத்துமேலே
மேவியே மண்டலம் நீ கொண்டாயானால்
விடியுமுன்னே மலங்கழன்று சுத்தியாமே. 631

மூலத்துக்குப் பேய்ப்பீர்க்குச் சூரணம்

சுத்தியாம் வாளமதுபலந்தான்காலாந்
துலங்கு கொல்லன் கோவையிந்து பலமாமொன்று
முத்தியதோர்மிளகோமம் வகைக்கரைப்பலமா
மூன்றேகால்பலமதுதான் வாங்கிக்கொண்டு
பத்தியமாய்க்குளுந்தண்ணீராட்டிவில்லை
பண்பாகச்சூதகமோர் மூன்றுநாளும்
உத்தமமாம் நீச்சத்தண்ணீர் கலக்கிக் கொண்டா
லுடன் சூதவாய்வும் போங்கெர்ப்பமாமே. 632

ஆமடாமூலமதற் கெண்ணைகேளு
அப்பனே பேய்ப்பீர்க்கின் ஒட்டைதானும்
ஓமடாசூரணித்து ஆவின்பாலு
முடனருந்தமுளை மூலமோடிப்போகும்
நேமமுடன் கரணை வகைரண்டுகூட்டி
நேர்த்தியதாயாவின் பால் நெகிழவுண்ணு
போமடாமுளைமூலம்ரத்தமூலம்
பொய்யல்லபறந்துவிடும்புகையைக்கேளே. 633

புகைகூழ்ப்பாண்டுக்கிருதம்

கேளுநீ தாளகமுந் துருசுவாங்கி
கிருபையுடன் பொடித்துநீ தூளதாக்கி
தாழ்வில்லா மூங்கிலிலைபிடிதான்ரண்டு
தணலாகப் புளியன்சிறாயனலதாக்கி
நீளவேபொடியிலையுந் தணலிலிட்டு
நிச்சயமாய்ப்பவனவாய்புகையைக்கட்டு
மேளமாங்குதிரைநகக் குளபுதன்னை
மெத்தெனவேய்த்தணலிலிட்டுப்புகையைக்கட்டே. 634

கட்டினேன் கரிமுகவன் பாதந்தன்னைக்
கனத்ததிரிகடுகுதிரிபலையுங்கூட்டி
திட்டமுடன் சீரகமுஞ்சித்திரமூலஞ்
சேர்த்திடு நாகேசரமுமேலஞ் சேரு

முட்டுசிறுநாகப்பூ தாளிசபத்திரியு
மோனுயிந்து நிலவாகைசிவதைமாவேர்
மட்டாகநன்னாரி லவங்கப்பூவு
மக்களே லவங்கப்பட்டைமுத்தக்காசே. 635

காசுடனேவகைக்கரைப் பலமுங்கூட்டி
காயவைத்து யிடித்துச் சூரணமேசெய்து
கூசாமற்பூசனிக்காய் பழமேரண்டு
குடைந்து மேசாறதனைவாங்கிக் கொண்டு
பேசாமலதிப்பிதனை யுலர்த்தி நெய்யிற்
பிலமாகவறுத்திடித்துச் சூரணத்திற் சேர்த்து
வாசனையாமுன்சாற்றிலாவின்பால் நாழி
மறக்காமற் கூடவிட்டுச்சர்க்கரையுஞ்சேரே. 636

சேருநீராப்பு சர்க்கரையும் வீசை
திறமாகச் சாற்பாலில் கரைத்து நீவடித்து
வாருநீசட்டிதனிலடுப்பிலேற்றி
வளமாகக் காய்ச்சிடுவாய் பாகுபோல
மீறாமற்பதங்கண்டுயிறக்கிக் கொண்டு
விதமானசூரணத்தைமேலே தூவி
பாருநீதுழாவியேநெய்க்குளவிட்டுப்
பண்பாகலேகியமாங்கழஞ்சு கொள்ளே. 637

கொள்ளவே யந்திசந்திதீரு நோய்கேள்
குணமாகும் பேதியறுமேகமெல்லாம்
தள்ளவேசயகாசமீளைகாசம்
தவறிடும் பிரமியமுமிருமல் தீரு
மெள்ளவே சுவாசமுடன் காசந்தேமல்
மிகுத்த தொருகுட்டமெல்லாந்திமிர்தினவுமாறும்
வள்ளலேலேகியத்தை மருவிக்கொள்ளு
வளமாகப் பத்தியத்தை மருவிக்கொள்ளே. 638

தாளிசபத்திரிசூரணம்

மருவாத நல்லெண்ணை யகத்திக்கீரை
மக்களே கொள்ளவரைகோழிபன்றி
உருவானபாவற்காய் தேங்காய்ச்சுண்டை
உளுந்துதட்டை மொச்சையுடன் கொம்மட்டிக்காய்
பெருகியதோர்சுரைக்காயும் பார்தன்முன்தள்ளப்
பெண்மங்கை யில்லாமற் கொண்டேயானால்

வருகிறதோர் வியாதியெல்லா மாண்டுபோகு
மக்களே கூழ்ப்பாண்டக்கிருதங்கொள்ளே. 639

கொள்ளுதற்குத்தாளிசைபத்திரியைக்கேளு
கோஷ்டமிலா மிச்சேலமக்கராகாரம்
தள்ளாதமதுரமுடன் சாதிக்காயுந்
தக்கோலஞ்சிறுநாகங்கொத்தமல்லி
வள்ளாதகிராம்பு சிறுதேக்குதான்றி
மிகுத்த தொருகடுக்காயுங்கூகைநீரும்
துள்ளுகின்றநேர் பொரியுமிளகுமுத்தந்
துலங்குநெல்லிப்பருப்புடனே லவங்கப்பத்திரி. 640

பத்திரியா நன்னாரிதிப்பிலியுங் கூட்டிப்
பருத்தி விரைப்பருப்புடனே சீரகமுஞ் சேர்த்து
சுத்தமாய்வகைக்கிரண்டு விராகன்வாங்கித்
துலங்குதாழிசைப்பத்திரிவிராகனாலு
மெத்தவேயிளவறுப்பாய்வறுத்து நன்றாய்
மிறுகாமற் சூரணித்துவறுத்துக் கொண்டு
குத்தமில்லாச்சீனிபலம் நாலுசேர்த்துக்
கொடுத்திடுவாய் வெறுகடியுங் குணங்களாமே. 641

ஆகுமடாநோய் தீரும்வகையைக்கேளு
அப்பனே சோகை விஷபாகங்காமாலை
போகுமேவயிற்றுவலியிரு மலரோசியமும்
பொல்லாதகுன்ம மெட்டுங்கிராணியாறும்
தாகமேகிறு கிறுப்பு பெரும்பாடுபித்தந்
தவறாத்நெஞ் செரிவுவுளமாந்தையீளை
ஏகமாயிருந்ததொருவியாதியெல்லா
மேகமெங்குமற்றுப்போம்பத்தியமிச்சையே. 642

இச்சையாம் குளிரசம் போம்தும்பைவேம்பு
இதமானமுருங்கையுடப்பூவுங்கூட்டி
கொச்சிமரிசமுடனே வசம்புபூடுகுறையாமற்
சமன்கொண்டு கூடச்சேர்த்து
மெச்சியதோர் சிறுநீராலரைத்துப்பின்னு
மீறாமல்கரைத்துநீயுண்பாயானால்
அச்சமில்லைசுரமே குங்குளிரும்போகு
மப்பனேயுபயகாலத்திலெண்ணே. 643

சுரத்துக்கு உபரசவுபமதுரமாங்கிஷம் சகலவியாதிக்கும் வேறு

காலமறிதலிடமறிந்தால் கலைநூலகற்றபண்டிதரே
ஏலமதுரஞ்சீரகமு மேழுமிலர்சீனமிளகோமம்
மூலைநெல்லிதிரிகடுகு முத்தகாசுநிலவாகை
ஆலம் பொதிந்த விழிமட வீர்முத்தந்தான்றி யேரிடையே. 644

இடைதான் சேருஞ்சிவதையுடன் யிம்மூன்றுடனே யீராற்நாள்
வடிதூளாக வெருகடிதானமதுதேனது கொள்வீராய்
விடுமேயுந்திமலக்கட்டு வேண்டுஞ்சீதக்கிருமியுடன்
துடுமேமேகநீரடைப்பு துன்மாங்கிஷமுந் துலைந்திடுமே. 645

துலையுமூலஞ் சொறிகுட்டஞ்சுவாசகாசம் நெஞ்சுவலி
அலையஞ்சோகைநீர்க்கனப்பு அண்டவாய்வுமனல்வாதம்
மலைபோல்சனத்தவுடம்புவற்றும் வச்சிரகாயமாக்கிவிடும்
கலைநூலாய்ந்தபொதியை முனிகண்டதறிந்தமுறைகொள்ளே. 646

பிடிப்புக்குபதங்கசூரணம் குளிர்சுரத்திற்கு வேறு

கொள்ளவேயின்ன மொருபதங்கங்கேளு
கூட்டுநீபரங்கிப் பட்டைப்பிராயன்வேரும்
தள்ளாதசினைவேம்புஞ்சித்திரமூலஞ்
சங்கம்வேர் சமனாக வேகவைத்து
விள்ளாமாப்பானையில்வேடுகட்டி
விதமான குருவைநெல்மாக்கோதும்பைமாவும்
துள்ளவேமாவிடித்துச் சமனாய்ச் சேர்த்து
துடிப்பாகபறங்கிமா சமனாய்ச் சேரே. 647

சேர்த்தந்தமாவுடனே பனவெல்லங்கூட்டிச்
செப்பமாய்ச் சாதிலிங்கமரச் செந்தூரம்
மாற்றுபழச்சாற்றில் முலைப்பாலிற் சுத்தி
வைத்தெடுத்துமாவிற்குள் நடுவேவைத்து
நீற்றிடுவாய்பிட்டு போலவித்துக் கொண்டு
நினைவாகவெருகடிநீமூன்று கொண்டுமேதான்
வார்த்திட்டுக்கொடுத்திடுவாய்கியாழந்தன்னை
மாறுமே பிடிப்பெல்லாம் வாங்கிக்கொன்றே. 648

வேறு

கொண்ணைப்பட்டை கொத்தமல்லிகுமரிசருகுங் கடுக்காயும்
உண்ணுங்கடுகு ரோகணியு மொக்கக்கியாழங் கொள்வீராய்
கண்ணிக்கிடந்தமலங்களெல்லாங்கழன்றுபோகவகை
சொன்னோம்
விண்ணிற் கொடியவேந்தருக்கு வெப்புங்குளிருந் தான்போச்சே
649

வீழியெண்ணை

போச்சப்பாவீழியெண்ணைகற்பங்கேளு
புகழான யேரண்டத்தெண்ணெய்படியொன்று
வாச்சப்பாநறுநெய்தான் படிதானொன்று
வசமாகவீழிச்சாற்படிதான்ரண்டு
கூச்சப்பாதிரிகடுகு வசம்பீருள்ளி
கோஷ்டமிலவங்கம் வெள்ளுள்ளியேலம்
காச்சப்பாவகையொன்றுபலங்கள்வீதங்
கட்டாகவேபதத்தில் வடித்துக் கொள்ளே. 650

கொள்ளவே கெர்ப்பவாய்வகலுநாடி
கோடி சுத்தல் கிருமியொடுகுளிர்ச்சிசூடு
கள்ளமாஞ் சதையமுடல் திருட்டிபேய்கள்
காணாதேயோடிவிடுங்கருவேதங்கும்
பள்ளமாங்குழிவிழுந்த கிடங்குநேராம்
பங்கமாமலர் பூதத்தாலமுர்தம் வீசும்
உள்ளதாங்குறி கோணல் நிமிரும்பாரு
உயர்த்தியாம் பிள்ளையுண்டாம் வயதுநூறே. 651

சொன்னார் நூலாய்கருக்கிடையாந் தோற்றுமிந் நூல்வட
மொழியாம்
அன்னேயுமைக்குவரனாரும் அன்பாயுரைத்தவேதமிது
பன்னார்லட்சங்கிரந்தங்களைப் பகர்ந்தார் திரட்டிக்குருநூலாய்
முன்னோர் சித்தர்க்குறுதியுடன் மொழிந்தாரறு நூற்மொழிந்தாரே

அகஸ்தியர் வயித்தியம்

முற்றுப்பெற்றது

அகத்தியர் ரசவாதம் 100

காப்பு

ஆதியா மணக்கோலஞ் செய்யு நாளில்
ஆதிமுதல் தேவரிஷி கூட்ட மாச்சு
வேதியனு மாயேனுந் தானும் நிர்
மலனா ஷ்சுவனுக்கு வரத்தை ஈந்தார்
நீதி பெற சாருதிறமான தெட்சணாயன
நிலையான சார்பொதிகை கிரி சென்றேன்
ஆதியொரு காரணத்தால் பறைதா னின்ற
வாகடந்தா பராபரமா அருளைப் பாரே. 1

நூல் வரலாறு

பாரப்பா வாதத்தி லெட்சம் காப்புப்
பாடினேன் வயித்தியத்தி லிரண்டு லட்சம்
சீரப்பா காவியத்தில் ஆயி ரந்தான்
சிறப்பாகப் பாடியதோர் என்னூ லப்பா
சாரப்பா ஆயிரத்தை இருநூ றுக்குட்
சகல சேதியெல்லாம் மடக்கிப் போட்டே
நாரப்பா என்பாட்டுக் கொ ப்புமுண்டோ
அரகரா அடிமுடியில் அமர்ந்திட் டேனே. 2

கார சாரம்

அமர்ந்தோர் ஆனைக்கல் அறிய மாட்டார்
அப்பனே அண்டமது அறிய மோடா
சுமந்தபிணம் போல்திரிவார் வேதை காணார்
சொல்லுகின்ற உப்புவதை அண்டஞ்
சரகந்த மாகையிலே போன உயிர் மீண்டு
தானாலே நந்தீசர் இந்தமுறை அருளிச்செய்வார்
சமன்சிறுகக் கொல்லுங் கொல்லுங்
தண்டான மது உப்புசார மாச்சே. 3

சாரமென்றும் காரமென்றும் வழலை என்பார்
தன்னுக்கூடப் பயனொன்றும் சொல்லார் சொல்லார்
பூரமென்று சொல்லுவதற்கும் பரவிப் பேசார்
புகழான மதயானைக் கல்லைப் பேசார்

வீரமென்று அண்டமென்றும் விள்ளார் விள்ளார்
வேதைகளைப் பாடிவிட்டார் வெறுநூ லாகப்
காரமென்ற கடுங்காரம் சாரங் காய்ச்சல்
கம்பியுப்பே பூரமப்பா அடிதான் பாரே. 4

அடியொன்று முடியொன்று அண்ட பேரண்ட
ஆகாசம் சுவருப்புக் கம்பி யாச்சு
படியொன்று சொல்வதற்கு தலைதெரித்துப் போகும்
பேசாத மௌனமிது பூமிநா தங்கு
குடியென்று சொல்லுதற்குத் தண்ணீ ருண்டாம்
குலையானை பட்டுவிடும் சாரச் சுண்ண
மடியுமப்பா சரக்கெல்லா மிதிலே மாட்ட
மக்களே காயசித்தி மகிழ்ந்து பண்ணே. 5

பண்ணப்பா பண்ணப்பா உரிசை சாரம்
பரிவான வழலைநில உப்பென் பார்கள்
மண்ணப்பா பூத்தானந்த வழலைக்கு
பெரிது போல் பிண்டமாச்சு
விண்ணப்பா தண்ணீரா மேலுண் டாச்சு
விதமான கல்லுப்பு வழலை நாதம்
ஒண்ணப்பா கடுஞ்சாறு இந்தினாலே
ஒகோகோ வழலைவிட்டார் கடற் தண்ணீரே. 6

கல்லான கல்லு முப்பு சேர்ந்து
கல்லுப்புச் சுன்ன மென்ற பேருமாச்சு
சொல்லான விந்தாலே சூடன் கட்டும்
துடிவழலைப் பாம்பெனலே சொல்லாச்சு
வெல்லுகின்ற காரத்தால் சாரம் கட்டி
வெடிச்சத்தம் கண்டல்லோ முடிதான் போச்சு
வல்லான புயத்தானை கட்டி தென்றால்
வளமான ஆகாசமடிந்து போமே. 7

மடியாத விந்தாலே ரவிதான் கட்டும்
வாதிகாள் உங்களுக்கு வழலைச் சுண்ணம்
பிடியானை கைவசங்காண மதயானைக்கு
பற்றி பாதநிலவு அறப் பெருமை பேசார்
அடி என்றால் வாய்மூடப் பிடரிபேசு
அப்பனே சுக்கிலத்தை அறிய மாட்டார்

படியான உட்கருதான் தண்ணீரானால்
பரியாச வேதையிது கொஞ்சந்தானே. 8

கொஞ்ச மென்று சொல்லாமல் சொல்லக் கேளு
கொடிதான மேற்தோட்டைச் சுன்னம் பண்ணி
வஞ்சியென்று உட்கருச் சேர்க்கை முறையாய்
மக்கள் மகத்தான வழலையினால் தண்ணீ ராகும்
சஞ்சீவிக் கெங்கை பாச மூலமெல்லாம்
தாரணியின் அப்பாலே இவ்வளவு மாச்சு
நஞ்சுதின்று செத்தவன் போல் சரக்கெல்லாம்
சாம அதிகாரசாரத்தால் மெழுகுண் டாமே. 9

மெழுகான உப்பாலே பூரம் கொல்லும்
விஷமான காரத்தால் சாரம் சாகும்
பழுதான சேதியல்லா வழலை போக்கு
பண்பான ரகசியமது பூணத்தான்
எழுதரிது என்னாலே முடியாதப்பா
என்னைப்போல திறமாகச் சொல்ல மாட்டார்
ஆகாகபின் பரிச வேதை கோடி
அடிமூல பூரணத்தால் அறிந்து பாரே. 10

அஞ்சிடையாய் இன்னுமோ வென்று கூட்ட
வெறிவு கொள்ள வெடியுப்பு ரெண்டும் கூட்டி
விசையான சத்தியடி அஞ்சும் கூட்டி
சரிவதற்கே பூநீராலரைத்து வந்தால்
செப்பமுடன் புடம்போடச் சுன்னமாச்சு
அறியில் வெண்ணையிதுதானே கல்லுப்பாச்சு
ஓகோகோ கல்லானைக் காரந்தானே. 11

காரமென்ற கடுங்காரம் கல்லா னைக்குக்
கடியதொரு சின்னவந்து சேர்ந்தாலே
காரமென்ற கடுங்காரஞ் சொல்லப் போமோ
கல்லுப்புச் சுன்னம் என்ற பேரே யாச்சு
சாரமென்ற கடுஞ் சாரஞ் சூடனப்பா
சாரமிது செத்தாக்கால் கார சாரம்
வீரமொன்று சொல்லுவதற்கு வாய்தானாகும்
வின்ளார்கள் பெரியோர்கள் வேதை போக்கே. 12

திராவகம்

போக்கான சேதியப்பா சொல்லக் கேளு
பூரணத்தி லப்பாலே எல்லா மாளுந்
தாக்கான சேதியப்பா திராவ கந்தான்
தனித்த வெடியுப்பென்று உழத்தானொன்று
வாகான சூடனொன்று கறியுப்பொன்று
வளர்சின கற்றமொன்று சார மொன்று
நீக்கா க..............ங்கொன்று இந்துப் பொன்னு
நினைவாகச் சம்பழத்தா லரைத்துக் கூட்டே. 13

அரைத்த மருந்தை ரவியிலே காயவைத்து
அப்பனே பொடியாக்கிக் கலசத் திட்டு
கரைக்கவசற் தனைமேலாய் மூக்குக் கீழாய்
கைமுறையாய் எண்சீலை மண்ணாற் செய்து
புகைக் கடங்காப் புகைநீரா லெரித்திட்டாலே
போதமுள்ள நீராலே உப்புச் சுன்னம்
கரைக்குள்ளில்லை கற்பூர மீதிலே ஏற
கரையில்லை நிலையில்லைச் சுன்னப் போக்கே. 14

கட்டு, செயநீர், மெழுகு, செந்தூரம்

சுன்னமுப்புச் சுன்னமப்பா சொல்லக் கேளு
துரைவெள்ளைப் பாஷாண வீரஞ் சுக்கும்
சுன்னமப்பா மஞ்சாடி தடவிச் சென்று
சுண்ணாம்புக் கல்லப்பா மரக்கால் பத்து
எண்ணமுள்ள தாழம்பால் மரக்கால் பத்து
இதைநீற்றுப் பாஷாணம் கட்டிப் போகும்
உண்ணவது தாம்பிரமது கழஞ்சிக் குத்தான்
ஒரு மஞ்சாடி கொடுக்க வெள்ளையாமே. 15

ஆமப்பா ஒன்பதரை தப்பா துண்மை
அதிகசுண்ணத் திராவகந்தாஞ் சொல்லாச்சு
ஆமப்பா கண்டபடி சொன்னோம் சொன்னோம்
நலமான கட்டுக்குச் செயநீர் கேளு
நேமப்பா அரிதாரஞ் சூடன் சீனம்
சங்குபொரி காரம்பூ வீரம் சாரம்
மாமப்பா வகைக் கொன்று திராவகந்தான்
அரகராக் கட்டுவகை செயநீர் தானே. 16

தானென்ற நீர்தனிலே சகல மெல்லாம்
தண்டுண்டு சாகுமப்பா மெழுகு பண்ணு
வேனென்ற மெழுகுவகைத் திராவ கந்தான்
எளிதல்லத் துருசிபூ வீரஞ் சாரம்
சீனமொடு வெடியுப்பு மடல்பூ ரந்தான்
சோகவிது சுழஞ்சி யொன்று வகைவீ தந்தான்
றூணுறவே நுணுக்கி ஒரு கலசத்திட்டு
உத்தமனே எரியிடவே செயநீ ராமே. 17

செயநீரால் கட்டியதோர் சரக்கெல் லாந்தான்
திறமாக மெழுகாகும் வேதை காணு
மானதொரு செயநீரின் வகையைக் கேளு
அப்பனே வழலையோடு வீரம் பூரம்
மூணான கெந்தி மால்தேவி லிங்கம்
உத்தமனே வெடியுப்பு அன்ன பேதி
தானான புகைநீரைப் பேசப் போமோ
சகலசரக் கெல்லாம்செந்தூர மாமே. 18

தூர மென்றால் தூரமல்ல சொல்லக் கேளு
துடியான வெடிசத்தம் கண்ட லாச்சு
பாரமல்ல குரு முடிக்க அப்பா கேளு
பாழிலே கரிச்சிட்டுப் போகாதேநீ
தூரமென்ற கல்லானை மாட்டு தானல்
கடுஞ்சார இந்தாலே கட்டிப் போச்சு
ஆரமிட்ட கருங்கல்லுச் சொல்லவில்லை
அப்பனே அந்தானைக் காதியாமே. 19

ஆதியென்ற மூலமப்பா சத்தி யாச்சு
அருளான பிண்டமப்பா ஆணைகள்
பாதிபிறை இந்தாலே வழலை யாச்சு
பார் நின்ற பூவாலே சித்தி யாச்சு
சோதியிட்ட பூரணத்தால் விரைச்சுப் போச்சு
சொல்லுவது காய்ச்சலாம் தானே
நீதியென்ற வாதமெல்லாந் துலங்க லாச்சு
நேரான பூரணத்தி லிருந்து பாரே. 20

இருந்துரைத்தார் முன்மாதியிலே திங்களொன்று
ரெண்டு திங்கள் சென்றவுடன் கல்லுப்பாச்சு

அருந்தவத்தால் பெரியோர்கள் சொன்னார் காணு
அப்பனே பூவெடுக்க வாழ்ந்த மூர்த்தி
பொருந்துவது பூவாலே கட்டிப் போச்சு
பூரணத்தால் முழக்கட்டுக் கண்ட தாச்சு
திருந்துவது பெண்ணென்ற ஆணைக் கூடி
செத்தார்கள் கைமுறையாய் செனித்த வாறே. 21

வாறுகொண்ட முப்பூவே குருவாச்சு
மகத்தான குருவாலே பூரச் சுண்ணம்
ஏறுவது கல்லானைக் கட்டின் மேலே
இந்தாலே பூரணமாய்ச் செயநீ ராச்சு
ஊறுவது கூறநீகாண உப்பு க்கட்டு
ஓசையிட்ட வீரமிட வேதை யாகும்
தேறுவது கோடான கோடி அற்புதத்
திறமான வேதையப்பா மலைப்பொன் னாமே. 22

பொன்னான தோர்கார சார மாகு
பூமிபூர சாரமப்பா பூமி நாத
மின்னான பூவாத்தாள் வெள்ளை முந்தி
வீறுகளையே கொடுக்கும் பூர ணந்தான்
சொன்னாக்கால் தோணுமப்பா நூலைப் பார்த்து
துறை காணா மடையரைப் போலே சுடாதே நீதான்
சன்னாசம் கொண்டதொரு வீணரைப் போல
எழுத்திலே விழாதே குருவைச் சென்றே. 23

குருவான பெரியோர்கள் தம்மைச் செங்கை
குப்பிலே தெண்டனிட்டு சிஷ்யனாகி
திரிவதற்குச் சிந்தைகளை சோதிப் பார்கள்
திடமான சிந்தையுற்று இருந்தா யானால்
தருவிப்பார் வாதமெல்லாஞ் சீஷ னென்றே
சகலகலைக் கியானமெல்லாந்தானே தங்கும்
மருளாகும் பொருளாகும் ஆசான் தன்னை
அடி பணிந்தா லடி முடியை அறிவிப்பாரே. 24

அறிவதற்கு குருச் சொல்லார் பாடல் தோறும்
அப்பனே குருவறியார் மூட வாதி
செறிவுகந்த உவர்ப்பூவாம் வேதை யாம் சாம்
சென்ற காய்ச்சல்ல அப்பா சொல்லக் கேளு

உறியில் எண்ணெய் தனை உருக்க நெய்யாய் போகு
உத்தமனே வழலை எனும் கார மப்பா
இறுதியப்பா இருந்தாலே குருவாச் சொல்லும்
மேறட்டியே சொல்லுமப்பா உப்பு தானே. 25

உப்பூறி உப்பல்ல சொல்லக் கேளு
உவர்க் கண்ணிலேவிளைந்த வழலை யப்பா
உப்பென்று அதுக்கடுக்க வாழ்த்து வாரப்பா
ஓகோகோ வாலைநீர் என்று என்று
முப்பூவும் கூட்டியல்லோ குருவாய்ப் போச்சு
முழக்காரந் துரை மேலே ஏற லாச்சு
உப்பான வழலையிது பூரணந் தான்
உயர்ந்துவெடி யாகாச்ச உப்பு சாமே. 26

சாகுமப்பா கற்பூரம் செத்துப் போச்சு
தனிப்பூரம் கல்லானை வழலைக் காச்சு
போகுமப்பா ஆணைக்கலவுவது பட்டுப் போச்சு
பூரணத்தா இந்தாலே ரவிதான் கட்டி
வேகுமப்பா சரக்கெல்லாம் கண்ட போதே
வெடியுப்பே தாயான மூல மாச்சு
ஆமப்பா இத்தனையு மூவர் கண்ணில்
ஆதித்தன் கண்டல்லோ சோதி யாச்சு. 27

சோதியான சிவமான நிலவுப் புத்தான்
சொல்லுவது வழலையுப்பு மவுன மாகும்
மாதியினம் பிறந்தவனே முடித்த வாதி
அப்பனே ஆக்கியிருப்பா லாச்சு
வேதையென்ற பொருள்எல்லா முப்பு வாகும்
விமலனார் வழ்லையுப்பை அறிய மாட்டார்
பூதலத்து மானிடரே அறிய மாட்டார்
பொற்பூவும் வாசனைதான் கல்லுப் பாமே. 28

கல்லுப்பு கற்றுப்பைக் கட்டிக் கொள்ளும்
கல்லானை பட்டுவிழக் கருவுண்டாகும்
வல்லாமையாய் முப்புவும் முடித்தா யானால்
மகத்தான கல்லானை மடிந்துபோகும்
சொல்லார்கள் சொல்லார்கள் பெரியோ ரப்பா
சுத்தரவி வழலையுப்பு சொல்லுங் காணார்

எல்லாரும் கண்டது வராகநீறு
ஏகவெளிச் சிவ அறியார் கல்லுப்பென்றே. 29

கல்லுப்புக் குருவிலானைக் கல்சாரம்
கடுங்கார ஏறுதற்கு பூமி நாதம்
சொல்லக்கேள் நீராலே சுத்தி பண்ணி
துடியான கல்லானை சுத்தி யாச்சு
அல்லக்கேள் சீன மொன்று மூப்பு வென்று
அடங்காத ஆகாச வெடியும் பென்று
அல்லலொத்த சூடனென்று பச்சை யொன்று
வளமான நுரையண்ட சுண்ணம் ரெண்டே. 30

ரெண்டுடனே காந்தமொன்று சிப்பி பத்து
நேராக இதையாட்ட சம்பழத்தால்
ரெண்டுசாண் புடம்போடச் சுன்னவேகம்
நாதமிது பூவாலத் தனையு மாச்சு
உண்டு கொள்ளு முளைக் கருத்தான் சரிய தாக்கி
ஒன்னாக விரவியதைப் பீங்கானில் வைத்து
பண்பின வாகாச் சீன மோடு
பழச்சாற்றில் மோர் கூட்டப் பூர மாச்சே. 31

ஆச்சப்பா வழலையிது சுண்ணம் பண்ண
அப்பனே துரை அண்டஞ் சீன மோடு
வாச்சப்பா சாரமிட நீறாப் போகும்
வளமான சூடனுக்கே அங்கி பூட்டிக்
காய்ச்சப்பா கல்லானைத் தோட்டுக் குள்ளாய்
கைமுறையாய் ஊதிவரச் சுன்ன மாகும்
வாச்சதொரு பீங்கானி லிருந்து காண
வளமான வழச்சுன்ன மேவி யாடே. 32

ஆடினா இந்தாலே சிவமாய்ப் போச்சு
அப்பனே மதயானைப் பட்டுப் போச்சுத்
தேடினால் வாராது சோதி யப்பா
திறமான நீருக்குப் பேர்தான் கேளு
ஓடுகிற பாம்பாடும் வழலை யப்பா
உத்தமனே இந்தாகும் பூரணந் தான்
சாடித்துப் பூரணத்தால் சார காரம்
தனிமுப்பு வாதிளன்ற குருவ தாமே 33

குருவான நீராலே சுன்னம் கோடி
கொண்டதோர் செந்தூரம் கோடி கோடி
குருவான நீராலே கட்டு கோடி
குகைதனிலே ஆடுதற்கு களங்கு கோடி
குருவான நீறாலே செயநீர் கோடி
குறிப்பான சாரணைகள் குளிகை யாகும்
குருவான நீறாலே ஆகும் சுத்தி
கொடுஞ் சுருக்கு கொடுஞ் சுருக்கு வழலை தானே. 34

வழலை கட்டு முறை

தானென்ற உப்பாலே இத்தனையு மாச்சு
தனிப்பூரச் சுன்னத்தா லாட லாச்சு
ஏனென்று பேசுமிது வழலை யப்பா
ஏகாங்கி யாய்க் குகையில் இருக்க வேண்டும்
பானென்ற தடங்காட்டில் சரக்கெல் லாந்தான்
படுமுன்னே கொன்று விடும் பாவி யுப்பு
நான் என்ற அகம் பிடித்தால் தெறித்துப் போகும்
நட்ட ரச மென்ன என்று பேறாதே. 35

ஊன்னென்ற வஸ்துவப்பா வழலைச் சுன்னம்
ஓகோகோ நீறானால் பூரணந் தான்
தேனென்ற மனோன்மணியா ஈன்ற நாதம்
செப்பரிது செப்பரிது வழலை யுப்புத்
தீனென்ற வழலையிலே வீரங் கூட்டி
திடமாகச் துருசு காட்டச் சுன்ன மாச்சு
சோனென்ற விராட்டியினை வீரஞ் சேர்த்து
கொள்கையால் மால்தேவிக் கங்கி பூட்டே. 36

பூட்டவே தாளகந்தான் சலவை யாச்சு
பொன்நிமிளை அதினாலே சுன்ன மாச்சு
ஆட்டுவது நவச்சாரஞ் சுன்ன மாச்சு
அப்பனே சாரத்தால் துருசு நீறாகும்
கூட்டுவது சிங்கியப்பா குளிகை யாகும்
கோவாத சூதமது தங்கத் தாட்டு
ஊட்டினாலஞ்சு சுன்னக் குகையி லிட்டு
ஒகோகோ சுன்னமது மலைப்பொன் னாமே. 37

ஆமப்பா சுன்னமெல்லாம் தனியே வேதை
ஆகாச உப்பாலே இத்தனையு மாச்சு
நாமப்பா கண்டபடி சொன்னோம் கேளு
நலம் பெரிய வழலையுப்புகார சாரம்
வாமப்பா பூசையிட சித்த னாவான்
வழலையுப்பு அறியாட்டால் வாதி யாகான்
சாமப்பா சரக்கெல்லாம் கட்டு முன்னே
தனியான வழலையினா லெல்லாந் தானே. 38

எல்லாருங் காணாத முப்பு வப்பா
இருதயத்தில் உப்புஅறியார் மூட வாதி
சொல்லார்கள் பெரியோர்கள் மதயா னைக்கு
சுகமாகச் சகடுவைத்து ஏறு தற்கு
நல்லதொரு குருச் சொல்லாக காண வேணும்
இல்லாட்டால் நாய்போல அலைய வேணும்
வல்லமையால் முடியாது வழலை யுப்பு
மகத்தான காரமிது சாரந் தானே. 39

சாரமென்ற ஆகாச சரக்க தாகும்
தனிப்பிறவி அடிமூலம் பூமி நாதம்
வீரமென்ற முப்பு வாலானைக் கலச்சாம்
வேதாந்தத் துள்ளியிருக்கும் ரவியு மிந்து
காரமென்ற சுன்னமப்பா சிப்பிச் சுன்னம்
கடுஞ்சார மூரச்சாரம் பூமி நாதம்
பூரமென்றுஞ் சொல்வதற்குப் பெரியோர் சொல்லார்
புகழான என்னூலின் புகழைப் பாரே. 40

பாரப்பா கல்லானைச் சுன்னம் வீரம்
பரிவான நவலோக பதினெட் டாகும்
சேரப்பா பூவாலே புடத்தி லேறச்
செல்லப்பா துருசுடனே வீரங் கூட்டி
சேரப்பா தாளகத்தைப் பொதிந்து ஊது
செப்பரிய வங்கமது சுன்ன மாகு
மாரப்பா வங்கத்தில் வீரங் கூட்டி
அப்பனே காந்தத்தைச் சரியாய் ஆட்டே 41

ஆட்டியே புடம்போட ஈயமாகு
இந்தமுறை பாஷாண ஈய மாகும்

பூட்டுவாய் தாளகமும் ஈய மாகும்
புகழ் பெரிய லோகமது ஈய மாகும்
மூட்டுவாய் மடஈயம் கல் லுப்பீயம்
முத்தியஞ் சங்கீயம் லிங்க மீயம்
பூட்டுவாய் நவச்சார ஈய மாகும்
பொன்னிமிளை ஈயம்பொன் னீயந் தானே. 42

பொன்னீயம் வெள்ளியப்பா மீய மாகும்
புகழான நவலோக மீய மாகும்
வண்ணமுள்ள நவரத்தின மீய மாகும்
வாய்ந்ததொரு உப்பெல்லாம் மீய மாகும்
நன்னயஞ் சேர் அறுபத்து நால்ச ரக்கும்
நவரத்தின நவலோகம் பதினெட் டாகும்
சொன்ன ஈரேழு உபரசச் சரக்காம்
தொண்ணூத்தாறு சரக்கைக் கொல்ல லாச்சே 43

ஆச்சப்பா உபரசத்தின் வகையைக் கேளு
அண்டமென்று பிண்டமொன்று நண்டு வண்டு
வாச்சப்பா பூனாகம் வேங்கைப் பல்
வாய்த்ததொரு கரிக்கோடு கண்ம ருங்கு
பேச்சப்பா கருங்காக்கை மண்டை யோடு
பெரியதொரு கருங்குருவி அங்கத் தோடு
வேச்சப்பா செங்கழுகு பித்து சங்கு
வினையான செம்பருந்தின் கண்ணும் கூட்டே. 44

சாரணை அண்டம்

கூட்டுவது சாரணையின் வகையைக்கேளு
கூறானத் தொண்ணூற்றாறு வகையும் கொண்டு
ஆட்டுவது முன்சொன்ன வங்கச் சுன்ன
அழகான வீரமிட்டு வெவ் வேறாட்டி
சாட்டுவது வில்லைதட்டி சவ்வாது பூசித்
தான்உருக்க ஈயமப்பா தொண்ணூற்றாறு
முட்டுவார் ரசம்கட்டி குளிகை செய்து
முக்கியமுடன் சாரணைக்கு வகை சொல்வேன். 45

சொல்லக்கேள் மஞ்சாடி பன்னி ரண்டு
சூதமது உருக்கயிலே சொல்லி யாடு

அல்லக்கேள் தொண்ணூற்றாறு சரக்கீ யத்தை
அழகாய்த் தொண்ணூற்றாறு மாவுங் கூட்டி
வல்லன்மயாய் உருக்கிஎடு குளிகை யாகும்
மகத்தான சாரணையின் வகையாய் அப்பா
சொல்லப்பாச் சாரணையைச் சென்று பாரு
சென்றவுடன் குளிகைஇது கௌன மாமே. 46

அஞ்சுசுன்ன வகை

ஆமப்பா வழலையொன்று அண்ட மாறு
ஆட்டிலில்லை ரவிகண்டா ஊதிப் போடு
யாமப்பா வழலை யொன்று சிப்பி ஆறு
அந்தவகை யாகலே ஊதிப் போடு
யாமப்பா வழலையொன்று நண்டு ஆறு
அதிகமாக ஊதிவர சுன்ன மாகும்
யாமப்பா வழலையொன்று நத்தை ஆறு
ஆட்டவே சுன்னவகை செய் திடதானே. 47

தானென்ற காய்ச்சன்ன ஆறுங் கூட்டி
சமனாக அஞ்சுசுன்ன விதமும் சேர்த்து
வானென்ற வெண்கருவைத் தண்ணீ ராக்கி
வன்மையுட னஞ்சு சுன்ன வகையு மாட்டி
ஏனென்ற குகை பிடித்து வைத்துக் கொண்டு
எடுத்த தொரு சுன்னமெல்லா இதிலே ஊது
நாகத்தின் எட்டுவகைச் சொல்லக் கேளு. 48

நாகக்கட்டு

கேளப்பா சுன்னத்தின் திராவகத்தில் நீதான்
கிருபையுள்ள நவச் சாரந்தன்னை ஆட்டி
ஏழப்பா நாள் மட்டு மாட்டிச் சென்றால்
எடுத்த தொடு சாரமதை வில்லை தட்டி
சூலப்பா ஒட்டிவைத்துப் புடத்தைப் போடு
சொல்லரிது சாரமது கட்டிப் போச்சு
வாளப்பா பீங்கானில் நீர்தா ணாச்சு
மகத்தான நாகமதை உருக்கிச் சாயே. 49

காயப்பா அஞ்சுதரம் சாய்க்க வேதான்
தட்டுண்டு போச்சுதப்பா நாகம் கட்டி

நேயப்பா செந்தூர திராவ கந்தான்
நீதியுட னேகனுக்குத் தாக்கும் போது
வாயப்பா மலர்ந்துதான் முருக்கம் பூபோல்
வளமான செந்தூர மாகும் பாரு
நீயப்பா லோகம் கழஞ்சில் ஒன்றில்
நிசமாக மஞ்சாடி எடுக்க மாற்றே. 50

மாற்றெட்டு கண்டதெப்பா சீனாக் காரம்
வளமான சாரநீர் குத்தி யாடு
சாற்றெட்டு நான்குத்திச் சென்று தானால்த்
தட்டுண்டுச் சீனந்தான் கட்டிப் போனான்
போற்றிட்டேன் வேதைமுறை வகையைக் கேளு
புகழ்சாரம் கட்டினது காரமுந் தான்
நீர்த்திட்ட சரியெடையாய்க் கார சாரம்
நேராக முப்புபூவைக் கூட்டிவையே 51

வையப்பா பச்சைநவச் சாரம் கூட்டி
வைக்கவே மகத்தான செயநீ ராகும்
மெய்யப்பா அறுபத்து நாலு பேரு
இந்நீர் தன்னாலே மெழுகு மாகும்
செய்யப்பா நவலோகம் வேதை யாகும்
திடமான தூபமுதல் பரிச மாகும்
தெய்யப்பா சத்தமுமாம் கனமு மாகும்
தோன்றுவது பதினாறு மாற்றுக் காணே. 52

காணப்பா சரக்குவகை அறுபத்து நாலுங்
கைமுறையாய் மெழுகான செயநீர் தன்னால்
தானப்பா எடைசரியாய் நிறுத்துக் கொண்டு
தனித்தனியே மெழுகாக்கிக் கழஞ்சு வீதம்
பூணப்பா வில்லைதட்டிக் கலத்தி லிட்டு
புதுமையாய் பாதாளந் தன்னில் வைத்து
யானப்பா பீங்கானி லிறக்கி அத்தை
அனல்வாட்ட மாறியபின் எடுத்துப் பாரே. 53

எடுத்த பின்பு நிறுத்துப்பார் எடை சரியாய்க் காணும்
மேகாந்த தயிலமிது யாரும் செய்யார்
தொடுத்ததொரு காரியங்க ளெல்லாம் வெல்லும்
சொல்லுதற்கு வேதையிது மலைப்பொன் னாகும்

அடுத்ததொரு பிழைகளில்லை பயமு மில்லை
அருத்தினால் கோடி ரிஷிகளாலும்
தடுப்பதொரு சாபமில்லை சூலஞ்
சங்கால சர்ப்பத்தால் பயமுமில்லை தயிலங் கொள்ளே. 54

வல்லாரைக் கற்பம்

கொள்ளப்பா மண்டலந்தான் நாலு வீதம்
கொண்டாக்கால் சிவனவனாய்க் கூட்டி வாழ்வான்
கொள்ளப்பா கற்பமது கொண்டா யானால்
கோடியுகம் சொல்லினாமோ சாவே இல்லை
கொள்ளப்பா கற்பவகை நூற்றெட்டுத் தான்
கொண்டக்கால் அவன்யோகி அவனே ஞானி
கொள்ளப்பா மறுகற்பம் கொண்டு பாரே. 55

கந்தகக்கட்டு

பாரப்பா வழலையிலே வீரங் கூட்டி
பண்பாகக் கெந்தகத்து அங்கி பூட்டி
நேரப்பா கட்டுவனத் திராவகத்தைக் குத்தி
நிசமாகத் தீயாட்டத் தந்தம் போலக் கட்டும்
சேரப்பா மெழுகுவகை திராவகத்தி லாட்ட
சணத்திலே மெழுகாகும் செம்பில் வேதை
பாரப்பா இதுமாற்று பதிமூன் றாகும். 56

தானென்ற பாஷாணந் தன்னைக் கட்ட
தாரணியில் வாதிகளே அறியப் பெறார்
பானென்ற கம்பியுப்பை அறையாய்க் கொண்டு
பையளவு மத்தாலே மூடிச் சென்று
நானென்று முன்சொன்ன படியே நீற்றறா
விஷயத்தி லில்லாத கட்ட தாகும்
மேனென்ற யீரஞ்சு திரெம் நீற்றி
எடுக்கவே பணம்பாஷா ணங்கள் தானே. 57

பாடாணக்கட்டு கோசம்

பாடாணங் கட்டினதை எடுத்துக் கொண்டு
பண்பான செந்தூரத் திராவ கத்தால்
கூசாமல் சுருக்கிடவே செந் தூரந்தான்
கொண்டதிலே ரசத்தைமெல்ல கொடுத்துத் தாக்கு

பூசவே வேதையிது தயிலங் காட்ட
பசும் பொன் பூட்டி ஆட்டு
நேசமுட வைலோகம் நிசமா ஆடும்
நீதியுள்ள பாஷாணப் போக்கு தானே. 58

தானென்ற மூலமதை அறிய வேணும்
சகடுவைக்கும் கல்லானை காண வேணும்
வானென்ற பூரணத்தை அறிய வேணும்
வளமான அட்டசித்திக் காண வேணும்
நானென்ற கோசமது பீச மாகும்
நல்வினையின் பிறப்பதற்கு மதுபா லப்பா
ஏனென்று பேசுவதற்குப் பஞ்சமித்திரம்
எழுபிறப்புக் கல்லானைக் கென்றே வாறே. 59

வாறான சுக்கிலத்தைக் காண மாட்டார்
மாடு போல நீரைவிடக் காண்பார் மாண்பர்
தேனான வண்ணானை அறிய மாட்டார்
சிதறிய பூக்குரு எனவே சென்று பார்ப்பார்
ஆறான மித்திரமப்பா சத்தி யாகு
மடங்காத நீலியப்பா அடியைப் பாரு
பேரான பூரணியா மனோன்ம ணித்தாய்
பெற்றிந்த நாதமிது தேன்போ லாமே. 60

தேன் மொழியாள் பூரணத்தி லுயர்வேறித்
தேரோட்டம் போலவெண் சூதந் தன்னை
தான் மொழியக் கைமுறையாய்ச் சரக்கெல்லாந் தான்
தட்டுண்டு போச்சுதப்பா ரசங்க ளெல்லாம்
வான்மொழிய பிறந்தவளோ லோகத் தாட்டு
மடக்குவழி ஆயிரந்தான் சொல்லலாகும்
மென் மொழிவ தினிச் சரக்கைக் கொல்லும்
மென்பதடியில் மடக்க ரசம் பொன்னாமே 61

பொன்னடியின் வழலையிலே சேர்ந்து தன்னால்
பூரணமும் கூட்டியதி லேறித் தானால்
சொன்னபயன் தவறுண்டோ வேதை போக்கு
சொல்பெரிய நாதவித்தை அறியார் மூடர்
கன்னிவித்தை செய்தாலும் பூரணத்தி லேறி
கட்டானால் எவ்வுளம் கட்டு மப்பா

பின்னு வித்தை யாயிருந்தா ஒன்று மில்லை
பேயாடிப் பிணமாடிப் போன தொப்பே 62

பிணமாடி போன்றொருக்கு அறியாமாட்டை போலொத்த
புத்திக்காரனுக்குத் தெரிய தெய்வம்
பணமாடி போன்ற தொக்குங் குருவிலா சீடன்
பாதையது அறிந்தவனே ஞான வாதி
சணமாடி போவதொக்கும் கற்றறிந்த மட்டை
சகதியிலே கல்லெறிந்த வாழ்க்கை யாகு
மனமாடி போனதொக்குங் கிழமையுள் ஞான
மதியமுற்றங் கொண்டவனே ஞானி யாமே. 63

ஆமப்பா வழலைநிறம் புறப்பத் தாது
ஆதியென்ற இடமெல்லா இப்படியே ஆகும்
வாமப்பா வழலைகண்டா அவனே வாதி
மானித்து யோகயப்பா சேதி வேறே
காமப்பால் குடித்த வெறிநிலஉப் பாகும்
காணப்பா வெடியுப்புச் சூடனப்பா
நாமப்பா வென்றி ருந்தாயுனால்
நாயகி நாயனார் காண லாச்சே. 64

ஆச்சப்பா இத்தனையும் தண்ணீர்க் கூறு
அப்பனே சூடன்மணி ஆட்டக் கேளு
நீச்சப்பா வெள்ளமென்ற வகார தோஷம்
நெடிய கம்பி வெடியுப்பிற் பிறவியப்பா
வாச்சதொரு சூடனைத்தான் கட்டக் கேளு
வழலையுப்புச் சுன்ன முட
பாச்சப்பா கண்டர்சுன்ன நவச்சாரங் கூட்டி
பனியில் வைக்க பீங்கானில் நீருண் டாமே. 65

உண்டுகொள்ளுத் தண்ணியிலே துவைத்துப் போடு
ஒன்பது நாள் குத்தியபின் ஊதிப் போடு
மீண்டுமொரு சுண்ணாம்பாய் போகு மப்பா
மகத்தான சுன்னமுடன் சவ்வாது கூட்டிக்
கொண்டு மெள்ளக் குடக்கரியி லுருக்கி வாரு
கூடாட்டால் கெந்திதனைக் தாக்கிப் போடு
விண்டு பெண்டு தனைக்கொடுக்க ரசத்தைத் தாக்கிடு
வதையுள்ள செந்தூரம் களங்காமே 66

களங்கமற்ற களங்கஞ் செம்பாயிரத்தில் கட்டி
இட்ட செந்தூரம் ஒரு மாற்றுக்கு
வழங்குவதற்குப் பொன்னாகும் நோயிலாச்
செம்பொன் பார்த்து பத்தாயிருக்கும் களங்க வேதை
இளங்குமரிச் சாற்றாலே மடலை யாட்டி
இருண்ட உமிக் காந்தலிலே புதைத்துப் பின்
பழம் புளியின் பதம் போல எடுத்துக் கொண்டு
பாங்கான செயநீரில் துவைத்து வாட்டே 67

வாட்டிய பின் குழைத்துதான் மெழுகு தாக்க
மகத்தான ரசவீரங் கூட்டிக் கொண்டு
ஆட்டியே மஞ்சாடி உண்டை செய்து
அப்பனே ஒரு உண்டை புகைக்க வேதை
பாட்டமாய் புகைப்பட்ட வீதி எல்லாம்
பசும் பொன்னும் தூமமிது பழிக்கப் போமோ
நாட்டமா இவ்வேதை யாகு மாகும்
நாதமிது கண்டவனே வாதி யாமே 68

வாதி என்றால் யோகமே இருக்க வேண்டும்
மனோன்மணியை எந்நாளும் தியானம் வேணும்
நீதியுடன் ரோசத்தைத் தள்ள வேணும்
நிலையற்ற சித்தின்பம் நிகழ வேணும்
சூதனையாயப் போசனதைத் தள்ள வேணும்
தன்னிலே மதியமுதம் கொள்ள வேணும்
மாதிசிதம் பரபூசை செய்ய வேணும்
அப்போது நந்திவந்து அழசொல் வாரே. 69

சொன்னதென்ன உப்பு மூணு மப்பா
துடியான மேகத்தின் நீரா லாச்சு
கொள்ளதொரு நீரப்பா மித்திர மாச்சு
கோவிலுக்குள் கல்லானைக் கொம்பா லாச்சு
வெல்லுவதற்குப் பிண்டத்தில் வேற லாச்சு
வேதாந்த வெடிச்சத்தங் கண்ட லாச்சு
வில்வந்த மானபூ வாத்தா லாச்சி
மடங்காத பேரெல்லா மடிந்து போச்சே. 70

மடிந்த இந்து தனைஎடுத்து ஆட வேணும்
இல்லாட்டா மாடுபோலத் திரிய வேணும்

சொடிந்துவிடும் காய்ச்சலப்பா அறிய வேணும்
கட்டாட்டால் வாகினிபோல் கதற வேணும்
வெடிந்திரலி உதிர்ந்தபின் பெருக்கு டந்தான்
மேவியே கூவுமப்பா அறிந்து பாரே. 71

அறிந்திந்த நூல்பார்த்து வேதை பாரு
அல்லாட்டில் சித்தரிட ஞானியிடஞ் சேரு
நெறிந்தல்லோ கல்லையிட்டுக் களிபோ லாச்சு
செயநீரின் மித்திரத்தா லித்தனையு மாச்சு
பிரிந்து ஒரு சரக்குகளை எடை யிட்டால்
பேயைப்போல் பிடித்ததப்பா கட்டிக் கொண்டு
கொடிமுடியாய் பாம்புதனைக் கூறுவோமே. 72

கூறுகின்ற பாம்புதனை எண்ணை வாங்க
கொடிய தொரு கல்லானை வீரச் சுன்னம்
தேறுகின்ற வழலைதன்னைத் தணலில் வாட்ட
சேந்தங்கே எண்ணெயெல்லாம் வடிந்து போகும்
ஊறுகின்ற உப்புச் சுன்னம் கண்டா சுன்னம்
ஓகோகோ வீரச் சுன்னம் பழத்தா லாட்டி
வீறுபெற்ற பாம்புதனைக் கலசங் கூட்டி
விளக்கிலே வாட்ட எண்ணெ யெல்லாம் போமே. 73

எண்ணெயெல்லாம் போனபின்பு வழலை வேகம்
இணங்காத பாமப்பா சரக்கெல்லாஞ் சாம்
வண்ணமுள்ள வழலையிலே வீரங் கூட்டி
வளமாக துருசுக்குக் கவசம் கட்டி
எண்ணமுடன் ஊதிவரச் சுன்ன மாகும்
இதனாலே தாளகந்தான் சலவை யாச்சு
உண்ணப்பா பொன்நிமிளை நீறிப் போகும்
உத்தமனே நிமளையுடன் வீரங் கூட்டே 74

கூட்டியே வங்கத்தி லப்பி ஊது
கொடியதொரு கண்ணாம்பாங் கண்டிக் கப்பி
ஆட்டுவாய் கண்டருடன் வீரங் கூட்டி
அரிதோபிச அங்கியிட ஊதிப் போடு
தீட்டியதோர் தாளகத்தை கெந்திக் கப்பி
நிசமாக அஞ்சு சுண்ணக் குகைக்கு ஊது
வேட்டங்கி வேகமங்கிச் சுன்ன மாச்சு
தீருமதாய் சுண்ணாம்பாம் வீரங் கூட்டே. 75

வீரமிட்டுத் துருசுக்கு கலசங் கட்டி
　　வெந்தெடுக்கப் பச்சையில்லா சுன்ன மாச்சு
வீரமிட்டுக் கறியுப்பு அங்கி பூட்டி
　　விளக்கிலே ஆட்டயிலே மெழுக தாகும்
காரமிட்டு வைத்துச் சுன்னக் குகையி லூது
　　கடுங்கார சுண்ணாம்பாம் வீரங் காட்டு
பூரத்தில் பொதித்து சுண்ணாம் பாகும்
　　புகழ் பெறவே கல்நாரு கப்பிப் போடே 76

போட்டெடுக்கச் சுன்னத்தில் வீரங் கூட்டி
　　பொன்நிமிளைக் கப்பியே ஊதிப் போடு
ஆட்டெடுத்து வங்கத்துக் கப்பி ஊது
　　ஆனதொரு தளவாயதாஞ் சுன்ன மாகும்
நீட்டெடுத்த ரோகமப்பா நீறிப் போகும்
　　நிசமான நாகமது சுன்ன மாகும்
மூட்டெடுத்த தங்கமது நீறிப் போகும்
　　முனையான பரிமேலே ஏறிச் செல்லே. 77

செல்லப்பா வீரத்தைக் கூட்டிக் கொண்டு
　　திடமான தங்கத்துக் கங்கி பூட்டி
சொல்லப்பா பஞ்சசுன்னக் குகையி லூது
　　கூகூகூ தங்கமது சுன்ன மாச்சே
கல்லப்பா மண்ணப்பா மலைதா னப்பா
　　காலென்ன மரமென்ன சுன்னக் காடே. 78

காடெல்லாந் திரிந்தலைந்துக் சுட்டா லென்ன
　　கரிசுட்டுப் போவதுவே காண்பார் மாண்பர்
நாடெல்லாம் பொன்மயமே ஆக்கிப் போகும்
　　நடமாடும் துரிசந்தச் சுன்னந் தன்னே
ஆடலாஞ் சிங்கியாயச் சேத்துப் போடே
　　அடங்காத குருவப்பா துருசு சுன்னம்
கோடெல்லா மலையெல்லா மரங்க ளெல்லாம்
　　கொடிமுடியாம் பசும்பொன்னாங் கூட்டிப் பாரே. 79

பாரப்பா இந்தப் பிறவி கேளு
　　பாரிலே பதினாறு முழத்தின் கீழே
நீறப்பா கசிந்தெடுத்து மேலே உன்னி
　　நிசமாகப் பனிக்காலம் மேலக் கொள்வார்

யாரப்பா இவர்பெருமை அறியப் போறார்
அடங்காத மனோன்மணியா ளீன்ற நாதம்
பேரப்பா வகைகேளு சொல்வேன் சொல்வேன்
போகாதே பித்தோடே இந்தின் ராவே. 80

இந்தென்றும் பூவென்றும் கால்தான் என்றும்
இணையான அடியென்றும் மூல மென்றும்
சந்திரனுப் பென்றும்பேர் சுரோணி தந்தான்
தருவழலை என்றும்பேர் பூமி நாதம்
சுத்தியால் சுட்டதென்றும் பூமி நாதம்
சுத்தியால் சுட்டதென்று மறைந்தா னென்றும்
தொலையாத நீரழிக்கும் முப்பு தென்றும்
வந்ததொரு சத்தியென்றும் கண்ணியென்றும்
மனோன்மணித் தாயென்றும் கண்டுகொள்ளே. 81

கண்டுகொள்ளும் சிவமதனைக் காண மாட்டார்
கன்னிக்குத் தானெடுக்க வாழ்வார் கேளு
பண்டுடனே இவர்பெயரு ரவிதா னென்றும்
பரவுமென்றும் வழலையென்றும் பச்சை யென்றும்
தொண்டுடையார் முடியென்றுங் கல்லுப் பென்றும்
சுத்தரவி யால் விளைந்த நிலவுப் பென்றும்
முண்டிடவே விந்தென்றும் பொருளதென்றும்
முத்தசிலக் கூறலின்பே ராகுந் தானே. 82

காணாத பொருளொன்று சொல்லக் கேளு
கமல சத்த சாகரமு உண்டு விட்டே
நீநாத தண்டாலே கீழே விட்டே
நீமோக உப்பரைத்து நீர தாச்சு
நாநாத தண்ணீரை இரைத்துப் பாய்ச்சி
நாட்டுள்ளோர் கொண்ட ஒருருசியு மாச்சு
மானான தண்டாலே நீர் பாய்ச்சு
அடங்காத சிவகெங்கை என்ற பேரே. 83

என்றதொரு நீற்றாலே சரக்கெல் லாஞ்சாம்
ஏகாந்த உப்பதப்பா சத்தி
வென்றதொரு நீரப்பா வருணன் பிள்ளை
மேலெழுந்த ரவிதனக்கு சத்தி போச்சு

நன்றான தனமென்ற நீரே சிக்கி
வாதிரச வாதடுதில் பாடும் சூதங் கட்டும்
குன்றான கெந்தகத்தைக் கொல்லும் கொல்லும்
குடி கெடுத்த சத்தியுடன் கூடும் போதே. 84

போத மென்ற தாக நீரல்லால் மற்றும்
பொறியில்லை அத்தியில்லை சிவமு மில்லை
வாத மென்று காண்பதற்கு நீரைச் சேரு
வகையுடனே கைமுறையாய் நீரைச் சேரு
நீத மென்ற நீராலே களிச் சுன் றைந்தான்
நிலைத்து தப்பா வென்றாலே வாதந் தங்கும்
சூத மென்ற சூதமுடன் உப்புத் தொட்டு
தொட்ட சரக்கெல்லாம் செத்துப்போமே. 85

போமப்பா இந்தவழி அறிய வேணும்
இல்லாவிட்டல் புலையனைப்போல் திரிய வேணும்
வேமப்பா சரக் கெல்லாம் வேகாமல் தான்
வேறேயொரு வழியாகச் சொல்லக்கேளு
காமப்பால் மிஞ்சினதாய் கழுதைச் சென்ம
கனதேசி நீராலே சரக் கெல்லாம் கட்டும்
மேமப்பா சுறுக்குண் டென்றால்
வெளிதல்லா தேசியுட சாறு தானே. 86

முற்றும்